விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 12 வியாழக்கிழமை (28.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 252

# சர்வதேசத்திடம் ஓடுவதால் தீர்வை பெற்றுவிட முடியாது

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(பூநகரி)

பிரச்சினைக்கான தீர்வை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷதான் தரவேண்டும். அதற்காக சர்வதேசத்திடம் ஓடுவதில் பயன் ஏதுமில்லை என்பதைச் சம்பந்தப்பட்டோருக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன் இவ்வாறு பூநகரி ஆதார வைத்தியசாலையைத் திறந்து வைத்து உரையாற்றும் போது அமைச்சர் பசில் தெரிவித்துள்ளார்.

20ஆம் பக்கம் பார்க்க....

## அச்சுவேலி கைத்தொழில்பேட்டை நேற்று திறந்து வைக்கப்பட்டது



20ஆம் பக்கம் பார்க்க....

## தமிழக முதல்வரை சந்திப்பதற்கு கூட்டமைப்புக்கு வாய்ப்பு இல்லை

(கொழும்பு)

தமிழகத்துக்கு விஜயம் செய்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இம்முறை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்திப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பையேற்று புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கடந்த 21ஆம் திகதி புதுடில்லிக்கு விஜயம் செய்து 22 மற்றும் 23ஆம திகதிகளில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட முக்கிய தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் அங்கம் வகித்த சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கடந்த 24ஆம் திகதி தமிழகத்துக்கு சென்றிருந்தனர்.

இந்நிலையில் புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன்மற்றும் பொன்.செல்வராசா ஆகியோர் கடந்த 24ஆம் திகதி இரவு நாடு திரும்பியிருந்தனர்.

20ஆம் பக்கம் பார்க்க....

## மத்திய அரசும் மாகாண சபையும் வடக்கை அபிவிருத்தி செய்ய வேண்டும் இந்.தூதுவர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசும் வடக்கு மாகாண சபையும் மக்களின அபிவிருத்திக்காக இணைந்து செயற்பட வேண்டுமென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சிங்கா தெரிவித்தார்.

இந்திய -இலங்கை அரசின் நிதியுதவியுடன் மீளக் கட்டி எழுப்பப்பட்ட அச்சுவேலி கைத்தொழில் பேட்டை

19ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவதற்கு தயார்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்திய பிரதமர் நரேந்திர மோடி வழங்கிய அறிவுறுத்தல்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பின்பற்றி செயற்படுமாக இருந்தால், அவர்களுடன் ஒத்துழைத்து செயற்பட தயாராக இருப்பதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் முதல்கட்ட செயற்பாடுகளின


20ஆம் பக்கம் பார்க்க....

## நாட்டைப்பிரித்து தீர்வைப் பெற கூட்டமைப்புக் கோரவில்லை

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(சென்னை)

ஒருங்கிணைந்த இலங்கையில் போதிய அதிகாரங்களுடன் தமிழர்கள் வாழவேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாக உள்ளநிலையில் நாட்டைப் பிரித்துத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்று தாங்கள் கோரமுடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சென்னையில் தெரிவித்திருக்கிறார். தமிழ் மக்கள் தமது பூர்வீக நிலத்தில் சமூக, பொருளாதார, கலை, கலாசார விழுமியங்களுடன் சுதந்திரமாக வாழவே விரும்புகின்றனர். எனவே, தமிழ் மக்கள் அதிகம் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் எப்போதும் இணைக்கப்பட்டே இருக்கவேண்டும் என்றும



19ஆம் பக்கம் பார்க்க....

விசா ஆலோசனை வரலாற்றில் புதிய திருப்பம்
வெளிநாட்டில் கல்வி கற்பதற்கு கடன் வசதி

✦ உங்கள் முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டி அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் ஒன்றோடு இணைந்து வழங்கும் அரியகடன் வாய்ப்பு
✦ உலகில் எந்த ஒரு நாட்டில் கல்வி கற்பதற்கும் நீங்கள் எவரையும் நம்பி இருக்க வேண்டிய தேவை இனி இல்லை. நாங்கள் இருக்கின்றோம்
✦ 31.09.2014 ற்கு முன்பாக விரைந்து வாருங்கள்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(சி-8341)



## தனித் தமிழீழம்தான் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு


### மோடியின் கருத்துக்கு வைகோ எதிர்ப்பு

(சென்னை)

ஈழத்தமிழர் பிரச்சனைக்கு ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கருத்துக்கு பாரதிய ஜனதா கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான ம.தி.மு.கவின பொதுச் செயலாளர் வைகோ கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். [illegible] தனித்தமிழீழம் தான் பிரச்சினைக்கு தீர்வு என்றார் வைகோ.

சென்னையில் ம.தி.மு.க தலைமையகத்தில் செய்தியாளர்களுக்கு வைகோ செவ்வி அளித்த போதே அவர் இவ்வாறு எதிர்ப்பு வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் இச் செவ்வியில் அவர் மேலும் கூறியுள்ளதாவது.

இலங்கையில் அப்பா



வித்தமிழர்கள்மீது போர் தொடுத்து, ஏராளமான மக்களைக்

20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பசறைக்கு வருமாறு சஜித்திற்கு அழைப்பு



(கொழும்பு)

பதுளை, பசறை நகரில் அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு அந்த கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அன்றைய தினம் சஜித் பிரேமதாசவை கட்சியின் பிரதித் தலைவராக அறிவிக்க ரணில் விக்ரமசிங்க திட்டமிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித தலைவர் பதவியை சஜித் பிரேமதாசவுக்கு வழங்கினால், ஊவா மாகாண சபைத் தேர்தல் மட்டுமல்லாது ஏனைய தேசிய தேர்தல்களிலும் கட்சியின் வெற்றிக்கு பாரிய பலமாக அமையும் என அந்த கட்சியை சேர்ந்த கரு ஜயசூரிய உட்பட பல தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ரணில் மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் ஒரே மேடைக்கு வருவதாக வழங்கிய உறுதிமொழியின் அடிப்படையிலேயே தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விட்டு ஹரின் பெர்ணான்டோ ஊவா மாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுகிறார்.

எவ்வாறாயினும் பிரதித் தலைவர் பதவியை ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் ஏற்றுக் கொள்வது தொடர்பில் சஜித் பிரேமதாச இரட்டை நிலைப்பாட்டில் இருந்து வருவதாக கூறப்படுகிறது.

அரசியல்ரீதியாக தன்னை அழிக்க ரணில் விக்ரமசிங்க வைத்துள்ள பொறியாக இது இருக்கலாம் என சஜித எண்ணுவதாக சஜித் தரப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# அரசியலில் இணைந்து கொள்ள பாதுகாப்புச் செயலர் நடவடிக்கை

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசியலில் நுழைவதற்கு இரகசியமாக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிங்கள இணையத்தளமொன்று இது தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ அரசியலில் நுழைவதற்குரிய பொறுப்பை கோத்தபாயவின் விசுவாசியான பொலிஸ் உயரதிகாரி அநுர சேனநாயக்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாம்.

இந்த நிலையில், கோத்தாவும் அநுரவும் இணைந்து பல இரகசிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்காக தற்போது பொலிஸ்மா அதிபராக உள்ள என்.கே. இலங்கக்கோனை பதவியிலிருந்து தூக்கி விட்டு, அந்த இடத்தில் அநுர சேனநாயக்காவை அமர்த்த கோத்தபாய திட்டமிட்டுள்ளாராம்.

எதிர்வரும் டிசம்பருக்கு முன்னர் அவரை பதவியில் அமர்த்த தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனெனில் எதிர்வரும் பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலில் தான் விரும்பியபடி செயற்படுவதற்கு கோத்தபாய எண்ணியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், அநுர சேனநாயக்காவை அப்பதவியில் அமர்த்துவதறகு சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகவும், இரண்டு முறை பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளமையே இதற்கு காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவரை வேறு வழிகளில் நியமிக்கும் திட்டமும் கோத்தாவிடம் காணப்படுகின்றது.

எனினும் 9 மூத்த பொலிஸ் அதிகாரிகள் இதற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர். மூன்றாவது தடவையாக பதவி நீடிப்பு வழங்குவது தங்களுடைய அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என சுட்டிக்காட்டியுள்ள அவர்கள் இது குறித்து நீதிமன்றம் செல்லதிட்டமிட்டுள்ளனர் என அவ்விணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கறுவாத்தோட்டத்தில் ஆடம்பர பங்களா ஒன்றை அநுரவிற்கு கோத்தபாய வழங்கியுள்ளார்.



இரவு நேரங்களில் ஆடம்பர விருந்துகள் இடம்பெறுகின்றன. இந்த விருந்துகளுக்கு இலங்கையின் முக்கிய வர்த்தக புள்ளிகளே அழைக்கப்படுகின்றனர்.

இந்த விருந்துபசாரங்களின் போது அநுர சேனநாயக்கா, கோத்தா தேர்தலில் போட்டியிடவுள்ளது குறித்து பகிரங்கமாக அறிவித்து வருவதுடன் அவருக்கு ஆதரவு வழங்குமாறு கோரிவருகின்றார் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

# இலங்கைக் கடலில் காணாமல் போன மீனவர்கள்

(கொழும்பு)

மீன்பிடிக்காக கடலுக்கு சென்ற நான்கு தமிழக மீனவர்கள் இலங்கையின் கடல் பகுதியில் வைத்து காணாமல் போயுள்ளனர்.

25 ஆம் திகதி இந்தச் சம்ப வம் இடம்பெற்றுள்ளதாக த ஹிந்து வெளியிட்டுள்ளது.

மண்டபம் வடக்கு கடலில் இருந்து மீன்பிடிக்கு சென்ற இவர்கள் கச்சதீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அவர்களின் படகில் ஒழுக்கு ஏற்பட்டதன் காரணமாக பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேணடியேற்பட்டது.

இந்தநிலையில் அந்தப்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மேலும் மூன்று படகுகளில் இருந்த மீனவர்கள் குறித்த படகில் உள்ளவர்களை காப்பாற்ற சென்றனர்.

எனினும் தாம் படகை சீர்செய்த பின்னர் திரும்புவதாக பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த படகில் உள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தமது படகை சீர்செயத பின்னர் திரும்பியிருக்க வேண்டுமாயின்நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு கரை திரும்பயிருக்க வேண்டும்

எனினும் அவர்கள் கரை திரும்பாமையை அடுத்து முதல்கட்ட தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தநிலையில் நேற்றுக் காலை முதல் ஹெலிகொப்டர்கள் மூலம் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக மீனவத்துறை அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (எ-11)

# விமான ஓடுதள விஸ்தரிப்பு காணி அரசாங்கத்துக்கு சொந்தமானது

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு விமான ஓடுதள விஸ்தரிப்பு காரணமாக காணிகளை இழந்த மூன்று குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட வேறு காணிகள் வழங்கப்பட உள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.




கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

முல்லைத்தீவு விமான ஓடு தளம விஸ்தரிப்புக்காக மூன்று குடும்பங்கள் தமது காணிகளை இழநதுள்ளனர்.

5 ஏக்கர்பரப்பளவு காணிகளையே இவர்கள் இழக்கின்றனர். இந்த காணிகள் இவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

விமான ஓடுதள விஸ்தரிப்புக்காக 250 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிலம் அரசாங்கத்திற்கு சொந்தமானது.

எவருக்கும் இங்கு காணி உறுதிகளுடன் கூடிய நிலங்கள் இல்லை. எவ்வாறாயினும், மேற்படி மூன்று குடும்பங்கள் அவர்கள் விரும்பும் இடத்தில் அவர்களுக்கான காணிகள் வழங்கப்படும் எனவும் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய குறிப்பிட்டார். (எ-11)

# பேஸ்புக்கில் அவதூறு சகோதரனுக்கு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஜேர்மனில் வசிக்கும் இளைஞர் ஒருவர்ஊர்காவற்றுறை கரம்பன் கிராமத்தைப்பற்றி தனது முகப்புத்தகத்தில் அவதூறாக பதிவேற்றம் செயதமையால் யாழ்ப்பாணத்திலுள்ள அவரது சகோதரன் மீது தாக்குதல் நடத்திய இருவரை தலா 25 ஆயிரம் ரூபாய் சரீரப்பிணையில் செல்ல ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின் குமார் நேற்று உத்தரவிட்டார்.

அத்துடன் இது தொடர்பிலான வழக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

கரம்பன் கிராமத்தைப்பற்றி ஜேர்மனியில் வசிக்கும் இளைஞன் ஒருவர் தனது முகப்புத்தகப் பக்கத்தில் அவதூறாக பதிவேற்றம் செய்துள்ளார் என்று கூறி கரம் பனில் வசிக்கும் அவ் இளைஞனின் சகோதரன் மீது கடந்த 25 ஆம் திகதி இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த 26 வயது இளைஞன் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று பின் வீடு திரும்பியுள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அதேயிடத்தைச் சேர்ந்த 24 மற்றும் 26 வயதுடைய இரு சந்தேக நபர்களை நேற்று முன்தினம செவ்வாய்க் கிழமை மதியம் கைது செய்தனர்.

தொடர்ந்து மேற்படி சந்தேக நபர்களும் நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன் போதே நீதவான் மேற்படி உத்தரவினை பிறப்பித்தார். (எ-11)

# பொலிஸ் நிலையத்தில் திருட்டு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் மேலதிக சில்லைக் கழற்ற முற்பட்ட நால்வரை நேற்றுக் கைது செய்ததாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். இது பற்றி பொலிஸார் மேலும் கூறுகையில், வ்பத்தில் சிககிய முச்சக்கரவண்டியொன்று அச்சுவேலிப் பொலிஸ நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

மேற்படி முச்சக்கரவண்டி உரிமையாளர் மற்றும் மேலும் மூவர் இணைந்து, அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுச் சென்று தங்கள் முச்சக்கரவண்டியைப் பார்வையிட வேணடும் வேண்டும் என்று கோரியுள்ளனர். போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தரிடமிருந்து கிடைக்கப்பெற்ற அனுமதியைத் தொடர்நது முச்சக்கரவண்டியை பார்வையிட்டோர் அதன் பின்புறமாக பொருத்தப்பட்டிருந்த மேலதிக சில்லைக் கழற்ற முற்பட்டுள்ளனர்.

இதனை அவதானித்த, பொலிஸ் நிலையத்துக்குள் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், உடனடியாக நால்வரையும் கைது செய்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இந்நால்வரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தார். (எ-11)

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392
(C=8284)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் முதன்முதலில் விலங்கில் உடல் உறுப்பு வளர்த்து சாதனை

## ஸ்கொட்லாந்து விஞ்ஞானிகள்

முழுமையான, செயற்படக் கூடிய தொரு உடல் உறுப்பை ஒரு விலங்கின் உடலுக்குள்ளேயே வளர்த்து செயற்பட வைப்பதில் ஸ்கொட்லாந்து விஞ்ஞானிகள் வெற்றிபெற்றிருக்கிறார்கள். இத்தகைய முயற்சி வெற்றி பெறுவது உலக அளவில் இதுவே முதல்முறையாக கருதப்படுகிறது.

ஆங்கிலத்தில் தைமஸ் என்று அழைக்கப்படும் கழுத்துக்கணையம் என்பது உடலின் முக்கிய உறுப்பு. மனிதர்களுக்கு இது இதயத்துக்கு மேலே கழுத்துப்பகுதிக்கு கீழே அமைந்திருக்கும். இரண்டு பிரிவாக இருக்கும் இந்த கழுத்துக் கணையம் மனிதர்களின் ஆரோக்கியத்துக்கு மிகவும் அவசியமானது. காரணம் இந்த கழுத்துக்கணையத்தில் தான் மனிதர்களின் நோய் எதிர்ப்புத்தன்மைக்கு மிக மிக அவசியமான டி செல்கள் முதிர்ச்சியடைந்து ஒட்டுமொத்த உடலுக்கும் பரவுகின்றன. இந்த டி செல்கள் தான் மனித உடலின் நோய் எதிர்ப்பு சக்திக்கான அடிப்படை கவசமாக செயற்பட்டு, மனித உடலுக்குள் புகமுயலும் எல்லாவிதமான நோய்க்கிருமிகளையும் தடுத்து தாக்கி அழிக்கின்றன.

இப்படிப்பட்ட கழுத்துக்கணையத்தைத்தான் தற்போது ஸ்கொட்லாந்தின் எடின்பர்க் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஒரு விலங்கின் உடலுக்குள் செயற்கையாக உருவாக்கியிருக்கிறார்கள். முதற்கட்டமாக எலியின் கருப்பையில் இருக்கும் சிசுவின் உயிர்க்கலன்களை பிரித்தெடுத்த விஞ்ஞானிகள், அவற்றை தைமஸ் எனப்படும் கழுத்துக்கணையத்தில் இருக்கும் உயிர்க்கலன்களைப்போல மாற்றி அமைத்தார்கள். இந்த உயிர்க்கலன்களுடன் கழுத்துக்கணையத்தில் இருக்கும் மற்ற துணை உயிர்க்கலன்களுடன் இணைத்து, இந்த எல்லா உயிர்க்கலன்களையும் மீண்டும் எலியின் உள்ளே கொண்டுபோய் பதிய வைத்தனர். (இ)

# பழி தீர்த்த பாம்புத்தலை



(கொழும்பு)

தனது தலையை துண்டித்தவரை பாம்பு ஒன்று பழிவாங்கிய சம்பவம் சீனாவில் இடம்பெற்றுள்ளது.

சீனாவில் வடமேற்கு பிராந்திய மக்கள் பாம்பு, நாய், பூனை உள்ளிட்ட உயிரினங்களை கொன்று தயாரிக்கப்படும் உணவுகளை விரும்பி உண்பார்கள். அதிலும் பாம்பு மூலம் தயாரிக்கப்படும் உணவுகள் என்றால் இங்குள்ள மக்களுக்கு கொள்ளை பிரியமாம்.

பாம்புக்கறி மற்றும் பாம்பு சூப் சாப்பிட்டால் உடல் நலம் மேம்படும் என்பது அங்குள்ள மக்களின் நம்பிக்கை. இதனால் இந்த பகுதியிலுள்ள பல உணவகங்களில் ஏராளமான பாம்புக்கறி கிடைக்கும்.

இந்நிலையில், அங்குள்ள உணவகம் ஒன்றுக்கு ராஜநாகம் ஒன்று உயிருடன் கொண்டு வரப்பட்டுள்ளது. உணவு தயாரிப்பதற்காக அந்த ராஜநாகத்தை உணவகத்தின் சமையற்காரர் பெங் பென் என்பவர் வெட்டியுள்ளார்.

பாம்பை துண்டுகளாக வெட்டிய பின்னர், உடலை எடுத்து சூப் வைத்துள்ளார். துண்டாக வெட்டப்பட்ட தலை அருகேயே துடித்துக் கொண்டிருந்தது. 20 நிமிடத்திற்கு பின்னர் சூப் தயாரானவுடன் கழிவுகளை குப்பையில் வீசுவதற்காக பாம்பின் தலையை எடுக்க முயற்சித்துள்ளார்.

அப்போது தான் இந்த பயங்கர சம்பவம் இடம்பெற்றுள்ளது. துடித்துக்கொண்டிருந்த ராஜநாகத்தின் தலைப்பகுதி, அந்த சமையல்காரரின் கையை திடீரென கௌவி கடித்துள்ளது. பாம்பின் விஷம் அவரது உடல் முழுவதும் உடனடியாக ஏறிய நிலையில் அவர் கீழே விழுந்துள்ளார்.

வலி தாங்க முடியாமல் உயிருக்காக போராடித் துடித்துக்கொண்டிருந்த அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் வழியிலேயே உயிரிழந்துள்ளார். (இ)

# நிலத்தில் விழுந்தது செயற்கைக் கோள்

## எரிபொருள் இல்லையாம்

(வோஷிங்டன்)

நாசா விண்வொளி ஆராய்ச்சி நிறுவனத்தினால் விண்ணில் ஏவப்பட்ட செயற்கைக் கோள் ஒன்று எரிபொருள் இல்லாத காரணத்தால் நிலத்தில் விழுந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கடந்த 1997 ஆம் ஆண்டு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவில் இருந்து மழைப் பொழிவின் அளவு பற்றி அறிவதற்காக விண்ணில் செயற்கைக் கோள் ஒன்று ஏவப்பட்டது.

தி டிராபிக்கல் ரெயின்பால் மெஷரிங் மிஷன் (டி.ஆர்.எம்.எம்) என்ற அந்த செயற்கைக்கோளை நாசாவும், ஜப்பான் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து திட்டமிட்டது. இந்த செயற்கைக்கோளில்தான் முதன் முதலாக ஆர்பிட்டல் பிரிசிபிடேஷன் ரேடார் பொருத்தப்பட்டிருந்தது. வானிலை ஆய்வுக்காக அனுப்பப்பட்ட இது விண்வெளி ஆராய்ச்சி வரலாற்றில் பல சாதனைகளை புரிந்துள்ளது.

குறிப்பாக, இதுவரை டிராபிக்கல் சூறாவளிகள், வெள்ளம், நிலச்சரிவு மற்றும் வறட்சி போன்றவற்றை மிகத் துல்லியமாக பலமுறை கணித்து தந்திருக்கிறது. வெறும் 3 ஆண்டுகளுக்கு மட்டுமே அனுப்பப்பட்ட இந்த செயற்கைக்கோள் தற்போது 17 ஆண்டுகளை விண்வெளியில் கழித்துவிட்டது.

இந்நிலையில், அந்த செயற்கைக்கோளின் எரிபொருள் டாங்க் காலியாகும் நிலையில் உள்ளது. அதை சுற்றுவட்டப்பாதையிலேயே வைத்து நிரப்ப எந்த வழியும் இல்லை என்று நாசா கைவிரித்துவிட்டது.

எனவே, கொஞ்சம் கொஞ்சமாக கீழே விழுந்துவிடும் என நாசா தெரிவித்துள்ளது. முதலில் கீழ் வட்டப்பாதையை நோக்கி வரும் எனவும், பின்னர் பூமியை நெருங்க நெருங்க வெடித்து சிதறி சிறு சிறு துண்டுகளாக விழுந்து விடும் எனவும் நாசா தெரிவித்துள்ளது. ஆனால், இதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றும் தெரிவித்துள்ளது. (இ)

# விடைபெற்ற விந்தை மனிதன்



உலகின் மிக உயரமான மனிதர் தனது 44 வயதில் உயிரிழந்துள்ளார். பொடோலி யன்ட்சியின் உக்ரைன் கிராமத்தைச் சேர்ந்த 8 அடி நான்கு அங்குலம் உயரமுடைய இவர், உலகிலேயே மிக உயரமான நபர் என்ற சாதனையை தனதாக்கிக்கொண்டிருந்தார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த பீட்டர் க்ரோச் எனும் பிரபல காற்பந்தாட்ட வீரரை விடவும் இவர், 21 அங்குலம் உயரமானவராவார் என்றும் கூறப்படுகின்றது.இவர், இறப்பதற்கு முன்னர் கின்னஸ் சாதனை அலுவலக அதிகாரிகளுக்கு செவ்வியொன்றை வழங்கியுள்ளார்.

நான் விவசாயம் செய்கின்றேன். என்னை கின்னஸ் சாதனை புத்தகத்தில் பதிய வேண்டும் என்ற எண்ணம் சிறிதேனும் இல்லை. நான் என்ன பாவம் செய்தேன் என்று தெரியவில்லை. இவ்வாறு எனது உடல் அமைந்திருப்பது எனக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட தண்டனை என்றே நான் எண்ணுகின்றேன்.

எனக்கும் சாதாரண மனிதனை போல் வாழ வேண்டும் என்ற எண்ணம் இருக்கின்றது. ஆனாலும் எனது உயரம் என்னை தடுக்கின்றது. இவ்வுலகம் உடலை சிறியதாக வைத்திருப்பவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

என்னை பார்ப்பவர்கள் என்னை ஒரு வேற்றுலக மனிதனை போலவே பார்க்கின்றார்கள். எனக்கென்று தனியொரு படுக்கை கிடையாது. பில்லியட்ஸ் விளையாடும் மேசையில் தான் உறங்குகின்றேன்.

இவருக்கு 12 வயது இருக்கும் போது ஏற்பட்ட நோயின் காரணமாக இவரது ஓமோன்கள் அதிகமாக சுரக்க ஆரம்பித்தது. இதனால் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இவரது உயரம் அதிகரித்து வந்துள்ளது. இவருடைய பாதணிகள் அந்நாட்டு அளவின் படி 27 ஆகும்.

இந்நிலையில் மூளையில் ஏற்பட்ட இரத்த கசிவு காரணமாக இவர், கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.பெருமிதத்தை விரும்பாத இளகிய எண்ணம் கொண்ட இவர். தனது உயரத்தை அளக்கக் கூட மிகவும் வெட்கப்படுவார். அனைவரிடமும் மிகவும் ஜாக்கிரதையாக, தன்னலமில்லாமல், தூய்மையாக நடந்துக்கொள்வார். இவர, ஒரு விந்தை மனிதன் என்று கின்னஸ் சாதனை அலுவலக அதிகாரிகள் கூறியுள்ளனர். (இ)

# இராசி பலன்

28.08.2014

ஆவணி 12, வியாழக்கிழமை

சூரிய .உதயம் காலை 6.04 மணிக்கு

திருதியை பின்னிரவு 12.50 மணிவரை

உத்தரம் முற்பகல் 11.32 மணிவரை

இராகுகாலம் 1.35-3.05 மணிவரை

சுபநேரம் 7.35-9.05 மணிவரை

வளவன்

**மேடம்:** கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், நல்லவர்களின் ஆதரவும் அறிவுரையும் கிடைக்கும், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், சுப செலவுகள் ஏற்படலாம், அரசுவழியில் அனுகூலமுண்டு.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், நண்பர்களின் தொடர்புகள் நன்மைதரும்.

**கடகம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்.

**சிம்மம்:** சான்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், ஆடம்பரப் பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** கோரிக்கைகள் நிறைவேற கோவிலுக்குச் செல்லவேண்டிய நாள், குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்யும் எண்ணம் மேலோங்கும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், ஒருசில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்படலாம்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், சகோதர ஒற்றுமை மேலோங்கும், விருந்தினர் வருகையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

**தனுசு:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மகரம்:** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டியநாள், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்கவேண்டிய நாள், கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது, பிரயாண பயமுண்டு, வர வேண்டிய பாக்கிகள் வராமல் இழுத்தடிக்கப்படலாம்.

**மீனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், அபூர்வ சந்திப்புண்டு, களஸ்திர சுகமுண்டு, விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கும் தீர்வு என்ன? அதைத் தெளிவாக முன்வைப்பது அவசியம்

இன்றைய கால கட்டத்தின் தேவை இனப்பிரச்சினைக்கு நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய தீர்வினை நோக்கிப் பயணிப்பதாகும். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக அரசு - தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கிடையே நடைபெற்றபேச்சுவார்த்தைஒருஅங்குலம் கூட தீர்வுத் திட்டத்தை நோக்கி நகரவில்லை என்பது வெளிப்படை.

இதற்கான காரணமாக கூட்டமைப்பினர் கால அட்டவணையுடன் கூடிய ஒரு நிகழ்ச்சி நிரலில் தீர்வு என்ன என்பதை யாவரும் அறியும் பொருட்டு வெளிப்படையாகக் கூற வில்லை என்று பலவாறு பேசப்படுகின்றது. அத்துடன் பேச்சுவார்த்தை மேசையில் தீர்வு பற்றி அரசு கவனம் செலுத்தாது இவர்களைத்திசை திருப்பி வடகிழக்கில் தனது நிகழ்ச்சி நிரலை எவ்வாறு மேற்கொண்டுள்ளது என்பதைப் புள்ளி விபரங்களுடன் விளக்கி அரசின்போக்கைஅம்பலப்படுத்த இவர்கள் தவறிவிட்டனர் என்றும் குறை கூறப்படுகின்றது.

இதேபோன்றே பலமுறை கூட்டமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட புதுடில்லி விஜயமும் தக்க பெறுபேறின்றி மக்களின் அவலங்களையும் அபிலாஷைகளையும் புட்டுக்காட்டாது பேச்சுவார்த்தை என்ற போர்வையில் ஓர் காலங்கடத்தும் நிகழ்வாக அமைந்து விடுமோ என்ற அங்கலாய்ப்பும் மக்களிடமுண்டு.

இத்தகைய அங்கலாய்ப்புக்கு காரணம் டில்லி போக முன்னர் பதின் மூன்றாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தை வலுப்படுத்துவதில் கண் ணாயிருப்பதாக கூட்டமைப்பின் முக்கிஸ்தர்களால் வெளியிடப்பட்ட அறிக் கையாகும். பதின்மூன்றாவது அரசி யல் யாப்புச் சீர்திருத்தம் இனப் பிரச்சி னைக்கானதீர்வுக்கானவழியை திற ந்து விடமாட்டாது என்பதை வட மாகாண சபையின் செயற்பாடுதுலாம் பரப்ப டுத்தியுள்ளது.

ஒற்றையாட்சி வட்டத்தில் அதிகாரப் பகிர்வுக்கு வழிவகுக்காத இவ் யாப்புச் சீர்திருத்தம் புகுத்தப்பட்ட காலம் வேறு. இன்றைய சூழல் வேறு.


இழப்பவற்றை எல்லாம் இழந்து நிர்க்கதியாகியுள்ள மக்கள் கடந்த 60 ஆண்டு காலமாக தமது போராட்டங்கள் மூலம் தமிழ்த்தேசியத்தை தமது இழப்புக்களுக்கு மத்தியிலும் அசையாது இறுகப்பற்றி நிற்பதை வெளிக் காட்டியுள்ளனர்.

கூட்டமைப்பினர் தமிழ்த் தேசியத்தை முன்னெடுப்பவர்களாகபுலிகளால் அறி முகப்படுத்தப்பட்டவர்கள் . இதனால்மக்கள்இவர்களைஆதரித்தார்கள் என்பதும் வெளிப்படை.

இதனால்மக்களின்நம்பிக்கையை தகர்க்காது செயலாற்றும் பாரிய தார்மீகப் பொறுப்பு கூட்டமைப்பினருக்குண்டு. உள்நாட்டில் மக்களின் பலத்தோடு இனப்பிரச்சினையில் தமிழக அரசும் புலம்பெயர் தமிழரும் ஆற்றும் பணிகளும் இனப்பிரச்சினையை சர்வதேசமயமாக்கி விட்டது.

முள்ளிவாய்க்காலில் மரணித்த மக்களின் ஆத்மா இந்தியா போன்ற சர்வதேச நாடுகளின் மனச்சாட்சியை ஒருநியாயமான தீர்வை நோக்கி நகர வலியுறுத்தி நிற்கின்றது.

இவ்வாறு பலவழிகளிலும் சர்வதேசச் சூழல் வாய்ப்பான நிலையில் இக்காலத்திற்கு ஒவ்வாத பதின் மூன்றாவதைப்பற்றிபேசுவதுவெண்ணெய்



பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் (இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்)

திரண்டு வரும் போது தாழியை உடைக்கும் நிலையையேஎன்பதுசொல்லித் தெரிய வேண்டியதில்லை.

13 ஆவது அரசியல் திட்டத்தில் ஒரு பலனும் இல்லை என்றும் தமிழ் மக்களின் தலைமைகளுடன் முறையாக கலந்தாலோசியாது திணிக்கப்பட்ட அதனை எமது மக்கள் எக்காரணம் கொண்டும்உள்வாங்கத்தயாரில்லை என்றும் புதுடில்லியிடம் இடித்துக் கூறும் கடப்பாடு கூட்டமைப்பினருக்குண்டு.

அத்துடன் அரசியல்தீர்வாக பூரண சுயாட்சியுடைய சமஷ்டி அமைப்பே நாம் கோருவதே காலத்தின் தேவையாகும். இன அடையாளத்தையும்தனித்துவத்தையும் கொண்ட அலகுகளுடன் மத்தியில் முறையான அதிகாரப்பகிர்வு இதில் உள்ளடக்கப்படல் வேண்டும். இத்தகைய தீர்வு பற்றி முறிந்த 2002 ஒஸ்லோ உடன்படிக்கையிலிருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டும். ஒஸ்லோவில் இந்திய அரசின் ஆசியுடனும் நோர்வேயின் மத்தியஸ்தத்துடனும் உள்ளகச் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டியமைப்பை நோக்கிய பயணமே ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எத்தகைய சமஷ்டிமுறை எமக்குப் பொருந்தும் என்பதைப் பற்றி தமிழ்ப் பேசும் தேசிய இனங்களான வடகிழக்குத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் ஆகியோருடன் ஆக்கபூர்வமாகக்கலந்துரையாடிஒருமித்தகருத்தை எட்ட முயற்சிக்க வேண்டும். இன்று தேவைப்படுவது இன்றைய ஒற்றையாட்சி அமைப்பை தூக்கியெறிந்து இனங்களின் சமத்துவத்தைப் பேணும் சமஷ்டி ஆட்சி பற்றிச் சிந்திப்பதும் பேசுவதும் தான் பிரச்சினைக்குரிய தீர்வாகும்.

முன்பெல்லாம் இந்திய அரசையும் உயர் அதிகாரிகளையும் சந்தித்த போதெல்லாம் தெளிவாக எமது மக்களின் அபிலாஷைகளை திருப்திப்படுத்தும் தீர்வுத் திட்டம் இது தான் என்று கூட்டமைப்பினர் அடித்துக்கூறவில்லை என்பது பற்றி ஊடகங்கள் விமர்சிக் கத் தவறவில்லை.

முன்பு விட்ட தவறை இம்முறையும் விடாது எமது மக்களின் தீர்வாக சமஷ்டி பற்றி திடமான முடிவை இந்திய அரசிடம் கோர வேண்டிய கடப்பாடு இவர்களுக்குஉண்டு கூட்டமைப்பினர் தடுமாறினால் தமிழ்த் தேசியத்தை சொல்லொணா இழப்புக்களின்மத்தியிலும் இன்றும் இறுகப் பற்றி நிற்கும் மக்களால் தூக்கி எறியப்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

எமது மக்களும் விடுதலை நோக்கிப் புறப்பட்ட போராளிகளும் செய்த அபரிமிதமான தியாகத்தின் முன்னால் பதவிகளை சுவைத்துக் கொண்டு தியாகம் பற்றி பேசி அதனை ஒரு வியாபாரபொருளாக கூட்டமைப்பினர் விற்பனை செய்ய முயன்றால் இதுவும் இன்றைய சூழலில் எள்ளளவும் எடுபடாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

இந்தியாவில் தமது இருப்பை பாதுகாப்பதற்காக கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் இந்தியா செல்வதெற்கெல்லாம் ஆமாம் சாமி ஆமாம் சாமி போடுகிறார்கள் என்பது பற்றி மக்கள் பகிரங்கமாக விமர்சிக்கத்தொடங்கிவிட்டார்கள்.

ஆதலால் தமது சுயநலத்திற்காக தமிழ்த் தேசியத்தை இவர்கள் விலை பேச முயன்றால்தமிழ்மக்கள்ஒருபோதும் இவர்களை மன்னிக்க மாட்டார்கள்.

ஒற்றையாட்சி அமைப்பில் எவருடனும்அதிகாரத்தை பகிரவிரும்பாது தமது ஏவலாள்னான ஆளுநரை மையமாக வைத்துச் சுழலும் மாகாண கட்டமைப்பு எமது மக்கள் செய்த தியாகத்திற்கு மாற்றீடாகவோ அன்றிப் பரிகாரமாகவோமாட்டாது என்பதை கூட்டமைப்பின்முக்கியஸ்தர்கள்உணர வேண்டும்.

இனப் பிரச்சினையில் சர்வதேசம் இன்று அக்கறை காட்டும் நிலையில் வடகிழக்கில் எமது இன அடையாளத்தை வேகமாக அழிக்கும் முயற்சிகள் நடைபெறுகின்ற நேரத்தில் இப் பிரச்சினைக்குரிய தீர்வுக்கான காலம் கடத்துப் பட்டால் வடகிழக்கில் இன்னும் 5 வருடங்களில் தமிழர்களின் இருப்பே இல்லாது போய்விடும் என்பதை தமிழ் மக்கள் இன்று நன்கு உணர்ந்துள்ளனர் என்பதை கூட்டமைப்பினர் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

## நல்லூர் ஆலயத்தில் நேற்று காவடி எடுத்த படையினர்



(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் ஆலயத்தில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம் பெற்ற பூஜை வழிபாடுகளில் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர்ஜெனரல்உதய பெரேரா தலைமையில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் கலந்து கொண்டனர். நல்லூர் சங்கிலியன் தோப்பிலிருந்து மங்கல வாத்தியங்களுடன் இராணுவத்தினர் காவடிகள் எடுத்துவர ஏனையோரும் ஊர்வலமாக நல்லூர் ஆலயத்தை சென்றடைந்தார்கள்.

இதன் போது ஆலயத்தில் இடம் பெற்ற பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டதுடன் தமது படைப் பிரிவுகளின் கொடிகளை வைத்து ஆசீர்வாதமும் பெற்றுச் சென்றனர். (எ-11)

## இலங்கையில் சீன பேரழகிகள்

(கொழும்பு)

சீனாவின் அழகுராணிகள் 15 பேர் இலங்கை வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் தேசிய அழகு ராணிப் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு தேர்வாகியிருக்கும் அழகிகளே நேற்று முன்தினம் இலங்கைக்கு வந்துள்ளனர். சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலாத்துறை மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடரபலேயே இவர்கள்இங்கு அழைக்கப்பட்டிருப்பதாகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

சினமன்ஹோட்டல்அன்ட்ரிசோர்ட மற்றும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமான நிலைய அதிகாரிகளால் விமான நிலையத்தில் இவர்கள் வரவேற்கப்பட்டார்கள். (எ-11)

## ஜனாதிபதி ஆலோசகராக கடற்படைத்தளபதி

(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி ஜெயநாத் கொழும்பகே ஓகஸ்ட் 15-ம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதியின் கடல் மற்றும் கடற்படை தொடர்பான ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மகிந்தசிந்தனை கொள்கை அறிக்கையின் 2011 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மகிந்த சிந்தனையின் எதிர் காலநோக்கு கொள்கை அறிக்கையில் இலங்கை ஆசியாவின் அதிசயமாக மாற்றும் செயற்பாடுகளில் இலங்கையின் கடல் மற்றும் கடற்படை ஆசியாவின் முக்கிய துறையாக மாற்றுவது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

கொழும்பகே, கடற்படைத் தளபதியாக பதவி வகித்த காலத்தில் இலங்கை கடற்படையை கடல்வழி மற்றும் கடற்படை மையமாக இலங்கையை மாற்றியமைக்கும் பணிகளை பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் வழிகாட்டலோடு முன்னெடுத்திருந்தார்.

ஜெயநாத் கொழும்பகே தற்போது இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் தலைவராக பணியாற்றி வருகிறார். அவர் இலங்கை கடற்படையில் 36 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

எது எப்படியிருந்த போதிலும் ஜனாதிபதிக்கு ஏற்கெனவே பல துறைகளில் ஆலோசகர்கள் பலர் இருந்து வருகின்றனர்.

அவர்களுக்கு மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாய் சம்பளம் வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. அத்துடன் வாகனம் உட்பட இதர வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இதனால், அரசாங்கத்திற்கு மாதாந்தம் பெரும் நிதி செலவு ஏற்பட்டு வருவதாக ஏற்கெனவே பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில், முன்னாள் கடற்படைத் தளபதியும் ஜனாதிபதியின் ஆலோசகர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-11)

## இனிப்பாக மாறிய கஞ்சா

(யாழ்ப்பாணம்)

வட பகுதிக்கு எடுத்து செல்லப்படவிருந்த கஞ்சா கலந்த மூவாயிரம் இனிப்புப் பண்டங்களை (டொபி) பண்டாரவளை பகுதியில் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சிங்கள நாளேடு இது தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ளது. பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ் மாவட்டத்தில் கஞ்சா விற்பனை அதிகரித்துள்ளதுடன், பாடசாலை மாணவர்கள் மத்தியில் இனிப்பு பண்டமாக மாற்றி அறிமுகபடுத்தும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வட பகுதி இளைஞர்கள் இந்த விடயத்தில் அவதானமாக இருப்பது அவசியமென புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர். (எ-11)

## 100 வயதில் பாட்டிக்கு 120 பேரப்பிள்ளைகள்



(பொலநறுவை)

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப் பேரப்பிள்ளைகள் என 120 பேரை கண்ட பெண்மணி ஒருவர் பற்றிய செய்தி பொலன்நறுவை பிரதேசத்தில் இருந்து கிடைத்துள்ளது.

இந்த பெண்மணி ஹிங்குரக்கொட ஹத்தமுனகொட்டுவேல பிரதேசத்தில் வசித்து வருகிறார். 100 வயதாகும் இந்தப் பெண்மணிக்கு 11 பிள்ளைகள்.

இவரது மூத்த மகனுக்கு 81வயது. டி.ஏ.கருணாவதி என்ற இந்த பெண்மணியின்கணவர்41வருடங்களுக்கு முன்னர் காலமானார். 100 வயதாகும் கருணாவதி சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாக கூறப்படுகிறது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் உள்ள ஈழ அகதிகளை திருப்பியழைக்க கூட்டமைப்பு முயற்சி

(கொழும்பு)

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை நாட்டிற்கு திரும்பி வரச் செய்வதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இந்தியாவின் உதவியை நாடியுள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள 115 முகாம்களில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான அகதிகள் உள்ளனர்.

இராணுவம் ஆக்கிரமித்துள்ள இவர்களின் நிலங்களை விடுவிப்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென இந்திய அரசாங்கத்தை கேட்டுள்ளோம் என இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தூதுக்குழுவின் உறுப்பினரான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக வடமாகாணத்தில் சனத்தொகை கணிசமாக குறைந்துள்ளது. இதனால் அகதிகளின் மீள்வருகை மிக முக்கியமானதென அவர் தெரிவித்தார்.

மேலும் கடந்த 30 வருடங்களாக இந்தியாவிலுள்ள அகதிகளுக்கு சேவை செய்து வரும் அமைப்பின் பொருளாளரான எஸ்.சி.சந்திரஹாஸன் இவ்விடயம் தொடர்ப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அகதிகளின் மீள்வருகைக்காக இந்தியாவும் இலங்கையும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை செய்ய வேண்டும் என அவர் அதில் வலியுறுத்தியுள்ளார்.

முஸ்லிம்கள் மற்றும் இந்தியவம்சாவளி தமிழர்கள் ஆகிய சிறுபான்மையினருடன் சேர்ந்து இயங்குமாறு இந்தியப் பிரதமர் மோடி இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டார் என சேனாதிராஜா தெரிவித்தார்.

தமது இந்திய விஜயம் குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனக்கு முன்னதாக தெரிவிக்காததையிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோபமடைந்துள்ளார் என த சண்டே டைம்ஸ் தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## வான் மோதியது ஒருவர் பலி; மூவர் காயம்!

(கொழும்பு)

மட்டக்களப்பு - ஏறாவூர் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன். மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியில் .ஏறாவூர் எரிபொருள் நிரப்பு நிலையம் அருகே வீதியோரம் நின்றவர்கள் மீது நேற்றிரவு 10.45 மணியளவில் வான் ஒன்று மோதியுள்ளது.

அதிக வேகத்துடன் செலுத்தப்பட்ட குறித்த வான் மோதியதில் நால்வர் படுகாயமடைந்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்கள் ஏறாவூர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

இதன்போது சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஏனைய மூவரும் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பில் வானை கைப்பற்றியுள்ள ஏறாவூர் பொலிஸார் சாரதியையும் கைது செய்துள்ளனர். (இ)


**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அறிவித்தல்**

**க.பொ.த. (உ/த) மாணவர்க்ளுக்கான வகுப்புக்கள் மட்டும் 15.09.2014 (திங்கள்) அன்று ஆரம்பமாகும்.**

**ஏனைய வகுப்புக்கள் 01.09.2014 அன்று ஆரம்பமாகும்.**

**28.08.2014** (சி-8338) **அதிபர்**


## யுவதி கைது

(கொழும்பு)

வாரியபொலவில் இளைஞர் ஒருவருக்கு அறைந்தார் என்று கூறப்படும் 21 வயதுடைய திலினி அமல்கா என்ற யுவதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த யுவதி. வாரியபொல பொலிஸ் நிலையத்தில் சட்டத்தரணியுடன் சரணடைந்த நிலையிலேயே பொலிஸார் இவரை கைது செய்துள்ளனர்.

முறைகேடான வசனங்களால் தன்னை திட்டியமையால் நான் அவரை தாக்கினேன். பேருந்து நிறுத்துமிடத்தில் எனக்கேற்பட்ட அநியாயத்தை அங்கிருந்த நூற்றுக்கணக்கானவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

எனினும், எனக்கு ஆதரவாக குரல் கொடுப்பதற்கு யாரும் அப்போது வரவில்லை. அங்கிருந்தவர்கள் பார்த்துகொண்டிருந்தனர்.

எந்தவொரு ஊடகத்தின் வாயிலாகவும் எனக்கு நியாயம் கிடைக்கவில்லை. பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினால் அதனையும் வீடியோ எடுக்கும் அளவிற்கு மனிதர்கள் இருக்கின்றனர். எனது பாதுகாப்புக்காக நான் முன்வந்தமை தவறா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார் குறித்த யுவதி. (இ)


தென்கோவை

**திருவருள்மிகு கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்**

இருபாலை, கோப்பாய்

**விநாயகர் சதுர்த்தி விஷேட தீர்த்தவாரி**

*கற்பகன் மெய்யடியார்களே!*

நிகழும் மங்களகரமான ஜய வருடம் ஆவணி மாதம் 13 ஆம் நாள் (29.08.2014) வெள்ளிக்கிழமை ஆவணி சதுர்த்தி நன்நாளில் ஆலயத்தில் அமைந்துள்ள சதுர்த்திப் பிள்ளையாருக்கு காலை 6.00 மணி முதல் மாலை 3.00 மணிவரையும் பக்தர்கள் கற்பகப் பிள்ளையார் தீர்த்த புஷ்கரணியில் இருந்து தீர்த்தம் எடுத்து வந்து தங்களுடைய கைகளால் தீர்த்தவாரி (நீர் ஊற்றுதல்) செய்வதற்கு கற்பகப்பிள்ளையார் திருவருள் கைகூடியுள்ளது.

அன்று மாலை 4.00 மணி முதல் கற்பகப் பிள்ளையாருக்கு விஷேட அபிஷேகமும் விஷேட பூஜை வழிபாடுகளும் மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெற்று எம் பெருமான் வீதியுலா வருகின்ற கண் கொள்ளாக் காட்சியும் நடைபெறும்.

(7507) தேவஸ்தானம்.



**கல்யாண மாலை**

இவர்களுக்கு **மணமகள் தேவை** | இவர்களுக்கு **மணமகன் தேவை**

**மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரம் 3
கி.பா: 32 சூரி செவ் 8 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: BSc, MSc / Internship, Part time Job (பிரான்ஸ் PR)
தொ.இ: B/1776

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 20 ¼ உயரம்: 5'10"
தகைமை/தொழில்: Accountant (ICMA) (அவுஸ்திரேலியா–சிற்றிசன்)
எதிர்பார்ப்பு: மணமகள் ஒரு கண் பார்வை அற்றவர்.
தொ.இ: B/1779

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா: 48 செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Dip. in City and skills / Quality Controller (அவுஸ்திரேலியா)
தொ.இ: B/1781

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 36 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L / காசாளர்
தொ.இ: B/2349

**மணமகன் தேவை**

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 39 ½
உயரம்: 4'10"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/2512

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரோகினி 2
கி.பா: 67
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA / அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.இ: G/2635

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா: 44
தகைமை/தொழில்:O/L/அரச தொழில்
தொ.இ: G/2639

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: பூரம் 3
கி.பா: 5
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: படித்த பெண்
தொ.இ: G/2643

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)





**நாளை (29.08.2014 வெள்ளிக்கிழமை சுழிபுரம்- பறாளாய்**

**ஈசுர விநாயகரின் பாற்காவடி தினம்**

பிற்பகல் 3 மணியளவில் சதுர்த்தி அபிஷேகம், பூஜை வழிபாடுகள், சுவாமி வீதியுலா நடைபெறும்.

சோழியூரான் பிறை சூடிக் குரு

(7509)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த,இந்து தர்ம பாதுகாப்பு சபை நேற்று முன்தினம் கொழும்பில் உதயம்

இந்து,பௌத்த மதங்களை பாதுகாப்பதற்கான பௌத்த, இந்து தர்ம பாதுகாப்பு சபை நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கொழும பில் உதயமானது. பொதுபலசேனா வும் அகில இலங்கை இந்து சம்மே ளனமும் இணைந்து இவ்வமை ப்பை உருவாக்கியுள்ளன.

இதற்கான உடன்பாடு பொது பலசேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரு க்கும் இந்து சம்மேளனத்தின் தலைவர் அருண் காந்துக்குமி டையே பௌத்த, இந்து ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் விளக்கமளிக் கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற் றது. இதன்போது கருத்து தெரிவித்த பொதுபல சேனாவின் பொதுச்செயலா ளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மத மாற்றத்தை எதிர்த்து தமிழ் இந்துக்கள் எழுச்சி பெற வேண்டிய காலம் வந்து விட்டது எனவும் தெரிவித்தார்.

எனவே, இனியும் பொறுமை காக்காது இந்துக்களும் பௌத்தர்க ளும் ஒன்றுபட வேண்டும். இன்று அதற்கான பலமான ஆரம்பத்தை எடுத்து வைத்துள்ளோம். அதனை மேலும் பலப்படுத்தி மதமாற்றத்தி லிரு ந்து அடிப்படைவாத சக்திகளிடமி ருந்து எமது மதங்களையும் கலாசாரத் தையும் பாதுகாத்துக் கொள் வோம.

பௌத்தர்களோ இந்துக்களோ தமது மதத்திற்கு முஸ்லிம் களையோ கிறிஸ்தவர்களையோ மாற்றவி ல்லை. மாறாக அடிப்படைவாத முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களுமே இந்துக்களையும் பௌத்தர்களை யும் மதமாற்றம் செய்கின்றனர்.

வடக்கு, கிழக்கில் மட்டுல்ல தெற்கு மேல் மாகாணம் என அனைத்து பிரதேசங்களிலும் எமது மக்கள் மதமாற்றம் செய்யப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் இராணுவ முகாம் களில் புத்தர் சிலைகள் வைக்கப்படு வதை எதிர்த்து தமிழ் அரசியல் வாதி கள் பாராளுமன்றத்தில் குரல் கொடுக் கின்றனர். ஆனால், யாழ்ப்பாணத் தில் காளான்களைப்போன்று உரு வெடுக்கும் முஸ்லிம் பள்ளிவாசல் கள் இவர்களின் கண்களுக்கு தெரியவில்லையா.

அதுமட்டுமா? தமிழ் கிராமங் கள் பூண்டோடு முஸ்லிம் மயமாக் கப்படுகின்றது. நாடு முழுவதும் அடிப்படைவாத கிறிஸ்தவ சபைகள் தலைதூக்கியுள்ளன. மக்களின் வறு மையை போக்கி அடிப்படை வசதி களை வழங்க வேண்டியது அரசாங் கத்தின் கடமையாகும். அமைப்புக்க ளால் அதனை செய்ய முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஆராதனை

# தொலைக்காட்சி தொடர்நாடகம்




நாமும் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல! சந்தர்ப்பம் கிடைத்தால் எங்களாலும் சாதி க்கமுடியும்! என நிரூபித்திருக்கும் நம் நாட் டுக் கலைஞர்களின் படைப்புத்தான் ஆரா தனை தொலைக்காட்சி தொடர் நாடகம்.

நேத்திரா தொலைக்காட்சி அலைவரிசை யில் 14.08.2014 ஆம் திகதி முதல் பிரதி ஞாயிறுதோறும் இரவு 7.30 மணிக்கு தொட ர்ந்து வெளிவரப்போகிறது.

இதில் ஈழத்து நடிகர்களான சிதம்பரம், ஜெகஜோதி, சாலினி, டக்ளஸ், சிவா பிரதீபன், வீரபுஸ்பநாதன், அரிதாஸ், ஈஸ்வரி போன்ற சிறந்த தமிழ்க்கலைஞர்கள் நடித்திருப்ப துடன் பல புதுமுக நடிகை, நடிகர்களும் பங்கேற்றுள்ளனர்.

ஸ்ரீவின் தயாரிப்பில் உருவான ஆராதனை தொலைக்காட்சித் தொட ரின் கதை, திரைக்கதை, வசனம், இயக்கத்தை ஸ்ரீஸ்கந்தராஜா ஏற்றிரு க்கிறார்.

இலங்கை தொலைக்காட்சி வரலாற்றில் இந்த ஆராதனை தொலைக் காட்சித் தொடர் ஒரு பெரும் சாதனையாக அமையும் என்பது உறுதி யானதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# விவசாய சம்மேளனத்தினது ஆண்டிற்கான பொதுக்கூட்டம்

(கொடிகாமம்)

யாழ்.தென்மராட்சி வரணி கரம் பைக் குறிச்சி விவசாய சம்மேளன த்தின் இவ்வாண்டிற்கான பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு திக்கில் பொதுநோக்கு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி கமநல சேவை உத்தி யோகத்தர், கரம்பைக் குறிச்சி கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர்.

இதன்போது சம்மேளன புதிய நிர்வாகத்தெரிவும் இடம் பெறவுள் ளதாக சம்மேளனச் செயலாளர் சு.கருணாநிதி அறிவித்துள்ளார்.


அதனைத் தொடர்ந்து கரம்பைக் குறிச்சி மக்களுக்கான சிவில் கூட் டம் கொடிகாமம் பொலிஸ் பிரிவி னரால் நடத்தப்பட்டவுள்ளமை குறி ப்பிடத்தக்கது. (இ-272)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 160 | 150 |
| தக்காளி | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 |
| கோவா | 60 | 80 |
| கரட் | 80 | 100 |
| பூசணி | 20 | 40 |
| புடோல் | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 |
| பயற்றங்காய் | 80 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 |
| பீற்றூட் | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 80 |
| முருங்கைக்காய் | 20 | 60 |
| போஞ்சி | 130 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 |
| தேசிக்காய் | 130 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 25-30 |
| இராசவள்ளி | 100 | — |




டொறின் மன்மதநாயகம்




றாம் சர்மா




அனந்தராசா கிருஷாந்





சச்சி சங்கீத்




துஷா துஷா




கோபல் துவா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலையன்மடம் செபமாலை மாதா ஆலய திருவிழா

(முல்லைத்தீவு)

வலையன்மடம் புனித செபமாலை மாதா ஆலய வருடாந்த திருவிழா கடந்த 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகிறன.

தினமும் மாலை 5 மணிக்கு செபமாலை வழிபாடுகள் இடம்பெற்று பூசை இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் நாளை மறு தினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும் அதனைத் தொடர்ந்து பவனியாக நற்கருணை எடுத்து வரப்படவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம்-கொழும்புத்துறை உயர் குருத்துவக் கல்லூரி அதிபர் எம்.ஏ.பி.ஆர்.மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து அன்னையின் சொரூப பவனி இடம்பெற்று ஆசீர்வாதம் இடம்பெறுமென இவ்வாலய பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (2-267)

# 200 வருடங்கள் பழைமை வாய்ந்த மயான செயற்பாடுகளில் யாரும் தலையிட முடியாது

## மன்னார் நகர பொதுமக்களும் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஆட்சேபனை

(மல்லாவி)

மன்னார் நகர சபைக்குட்பட்ட 2 ஆம் கட்டைப்பகுதியில் அமைந்துள்ள 200 வருடங்கள் பழைமை வாய்ந்த இந்து சமய மற்றும் கிறிஸ்தவ சமய பொதுமக்களின் மயானத்தை அகற்றுவதற்கோ அல்லது அங்கு சடலங்கள் எரியூட்டுவதற்கோ யாரும் தலையீடு செய்வதை அனுமதிக்க முடியாது என இம்மயானத்தை பயன்படுத்தும் பொதுமக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மன்னார் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற மாதாந்த ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

மன்னார் நகர சபைக்கு உட்பட்ட பிரதேச மக்களின் இடுகாடாகவும் சுடுகாடாகவும் 2 ஆம் கட்டைப் பகுதியில் இம் மயானம் அமைந்துள்ளது.

இங்கு கிறிஸ்தவ சமய மற்றும் இந்து சமய மக்கள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளில் இறுதிக் கிரியைகளான நல்லடக்கம் மற்றும் தகனத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இம்மயானத்திற்கு அருகில் பற்றைக் காடுகளாக இருந்த அரச காணியை சிலர் கையகப்படுத்தி வீடுகள் அமைத்து குடியிருந்து வருகின்ற நிலையில் தற்போது இப்பகுதியில் சடலங்களை எரியூட்ட வேண்டாம் எனவும் இதனால் தாம் அசௌகரியத்திற்குள்ளாகுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இதன்னை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. 200 வருடங்கள் பழைமை வாய்ந்த மயானத்திற்கு அருகில் இவர்கள் சட்டவிரோதமாக குடியேறி இம் மயானத்தின் செயற்பாடுகளை நிறுத்த கூறுவது எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே, இம் மயானத்திற்கருகில் குடியிருப்பவர்களுக்கு பிறிதொரு பகுதியில் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து மயானத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் செயற்பட அனைத்து தரப்பினரும் நடவடிக்கை மேற்கொண்டு உதவவேண்டுமென குறித்த கூட்டத்தில் தமது கருத்தையும் ஆட்சேபத்தையும் மக்களும் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் முன்வைத்துள்ளனர். (2-15)

## முதியோருக்கான விநாடிவினா போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச செயலகங்களுக்கிடையே நடத்தப்பட்ட விநாடிவினா போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கிடையேயான விநாடிவினா போட்டி நாளை வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகம் இப் போட்டிகளை நடத்துவதற்கான நிதியை அனுப்பி வைத்துள்ளது.

கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏற்கனவே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற முதியோர் குழு மாவட்டமட்ட போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தை பெறும் பிரதேச செயலக அணியின் விபரம் தேசிய மட்ட போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். (2-254)

# பொதுமக்களின் தேவைகளை அரசிடம் வலியுறுத்தி நிதியுதவிகள் பெறுகிறோம்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



ஒவ்வொரு திட்டங்களுக்குப் பின்னாலும் கோடிக்கணக்கான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இவை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களுக்கு விசேட அடிப்படையிலேயே கிடைக்கின்றன என பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கமநலசேவை நிலையத்திற்கான அடிக்கல்லினை நேற்றுமுன்தினம் காலை நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த கால யுத்தத்தால் அழிந்து போன இப்பகுதி விவசாயத்தின் முதன்மைத் தளமாகிய கமநல சேவை நிலையத்திற்கு பதிலீடாக புதிதாகஒருநிலையத்தை அமைப்பதற்கான வேலைத்திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது.

இதற்காக சுமார் ஒன்பது மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு திட்டங்களுக்குப் பின்னாலும் கோடிக்கணக்கான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இவை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களுக்கு விசேட அடிப்படையிலேயே கிடைக்கின்றன.

இவ்வருடம் ஏற்பட்டுள்ள வரட்சியின் காரணமாக குடிநீர் விநியோகத்திற்கு மட்டும் கிளிநொச்சி மாவட்டத்தில் பல மில்லியன் ரூபாய்கள் செலவிடப்படுகிறது. கமநலசேவை நிலையங்களை பெறுத்தவரை நாட்டின் பல பாகங்களிலும் 50 இற்கும் மேற்பட்ட கமநல சேவை நிலையங்களை அமைக்க வேண்டிய தேவை இருக்கின்ற நிலையில் அங்கெல்லாம் செயற்படுத்தாது இப்பகுதிக்கு மட்டும் விரைவுபடுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதெனில் எமது பகுதி விசேட அடிப்படையில் நோக்கப்படுகின்றதென்ற உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும்.

அத்தோடு நடைமுறைக்கு வரும் ஒவ்வொரு அபிவிருத்திப் பணிகளுக்கூடாகவும் ஒவ்வொரு தேவைகளை வலியுறுத்தித்தான் நிதியுதவிகளை இங்கே கொண்டு வருகின்றோம்.

அக்கராயன் பிரதேசத்தின் நலன் கருதி இப்பிரதேசத்தை தனி பிரதேச செயலகமாக மாற்றுவதற்கு முயற்சியை நாம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றோம்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது மிகப்பெரிய குளமாகிய அக்கராயன் குளத்தை புனரமைப்பதில் அனுபவம் மிக்க விவசாயிகளின் கருத்துக்கள் உள்வாங்கப்படாமையால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் நினைவுபடுத்திய பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் ஒவ்வொரு வேலைத்திட்டத்தின் போதும் மக்கள் விழிப்புடனும் அக்கறையுடனும் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (2)

# வியாபார நிலையங்களினுள் நுழைந்த கட்டாக்காலி மாடுகள்

## பிடிக்கப்பட்டு உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிப்பு



கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்தினுள் வியாபாரிகளுக்கு சேதம் விளைவித்த கட்டாக்காலி மாடுகளைப் பிடித்த கரைச்சி பிரதேச சபை பணியாளர்கள் உரிமையாளர்களை அழைத்து எச்சரிக்கை செய்த பின்னர் மாடுகளை விடுவித்துள்ளனர்.

கிளிநொச்சி பொதுச் சந்தை வளாகத்தினுள் தினமும் கட்டக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்து வந்த நிலையில் கரைச்சி பிரதேச சபையினருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து அவ்விடத்திற்கு வந்த பணியாளர்கள் சந்தை வளாகத்தினுள் திரிந்த கட்டாக்காலி மாடுகளை பிடித்து கட்டி வைத்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.




இதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த மாடுகளின் உரிமையாளர்களிடம் பிரதேச சபை பணியாளர்கள் தெரிவிக்கையில், சந்தை வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு நீண்ட நாட்களாக மாடுகள் தொல்லை கொடுத்து நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆதலால் இதற்கான நஷ்ட ஈட்டினை செலுத்திய பின்னர் மாடுகளை எடுத்துச்செல்லுமாறு அறிவுறுத்தினர்.

இதனையடுத்து மாடுகளின் உரிமையாளர்கள் எதிர்வரும் காலங்களில் மாடுகளை கட்டி வைத்து வளர்ப்பதாகவும் குற்றப் பணம் எதுவும் அறவிட வேண்டாமெனவும் கூறி மாடுகளை தம்மிடம் தந்துதவுமாறு கேட்டுக்கொண்டனர்.

இதற்கிணங்க கரைச்சி பிரதேச சபை பணியாளர் உரிமையாளர் களை எச்சரிக்கை செய்து மாடுகளை உரியவர்களிடம் ஒப்படைத்தனர். (2-271)

# கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துமாறு முல்லை.மாவட்ட மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் நடமாட்டத்தால் விவசாய நிலங்களில் பயிரிடப்படும் பயிர் வகைகள் சேதப்படுத்தப்படுவதுடன் உயிர்ச் சேதங்களும் ஏற்படுவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் மையப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சொந்தமான அரச திணைக்களங்களின் தலைமைக் காரியாலயங்கள் அமைந்துள்ளன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகம், முல்லைத்தீவு மின்சார சபை, வங்கிகள் மற்றும் பொதுச்சந்தை, மத்திய பேருந்து நிலையம், பொலிஸ் நிலையம், கரைதுறைப்பற்று பிரதேச சபை தலைமையகம் போன்ற பல அரச திணைக்களங்கள் செயற்பட்டு வருகின்றன.

இப்பகுதிகளில் இரவு, பகலாக கட்டாக்காலிகள் அலைந்து திரிவதால் நாளுக்கு நாள் வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

இதன் விளைவால் மனித உயிர்கள் மற்றும் கட்டாக்காலி பலியாகிறது. அதை விட கட்டாக்காலிகள் அயல் குடிமனையினுள் புகுந்து விவசாய நிலங்களை நாசப்படுத்தி பயிர் சேதங்களை ஏற்படுத்துகிறது.

இரவு வேளைகளில் வீதிகளின் நடுவே இவை படுத்துறங்குவதால் பயணிகள் சீராக போக்குவரத்தை மேற்கொள்ளமுடியாத நிலைக்[illegible] படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கால்நடைகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் பிரதேச சபைகளுக்கு காணப்படுகிற நிலையில் அதனை துஷ்பிரயோகம் செய்யாது ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமே விபத்து மற்றும் உயிர்ச் சேதங்களை தவிர்க்க முடியும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பல தடவைகள் பொது மக்கள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு தெரியப்படுத்தியும் முன்னேற்றகரமான செயற்பாடுகள் மக்களுக்கு கிடைக்கவில்லை.

எனவே எதிர்வரும் காலங்களில் இது தொடருமாக இருந்தால் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் பொறுப்பற்ற தன்மை குறித்து முல்லை. நீதிமன்றத்தில் முறையிட்டு சிறந்த தீர்வினை பெறுவோமென பாதிக்கப்பட்ட மக்களால் தெரிவிக்கப்படுகிறது. (2-267)

# பூவரசன்குளம் குடியிருப்பு வீதி திருத்த வேலைக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது

## மாந்தை கிழக்கு தவிசாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் கீழுள்ள பூவரசன்குளம் குடியிருப்பு வீதி ஒரு கிலோ மீற்றரும் 200 மீற்றர் நீளமும் கொண்டது திருத்துவதற்கு வடமாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து உள்ளூராட்சி அமைச்சினால் 95 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு தவிசாளர் அம்பலவாணர் தனிநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

மேற்படி வீதியானது தார் கலவையிட்டு புனரமைப்பு செய்வதற்கு 83 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவிடப்படவுள்ளது.

இவ் வீதி புனரமைக்கப்படுவதன் மூலம் பொன்னகர், பூவரசன் குளம், விநாயகர்புரம், கரும்புள்ளியான் உட்பட பல கிராமங்களில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இதன்மூலம் பயனடையவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்


904

## வீரச் சிறுவன்!



சுட்டி




மக்கள் நெருக்கம் மிகுந்தது கொல்கத்தா நகரம். அந்த நகரின் சாலையில் ஒரு குதிரை வண்டி விரைவாக ஓடிக்கொண்டிருந்தது.



வண்டியில், பெண்மணி ஒருவரின் மடியில் கைக் குழந்தை இருந்தது.




திடீரென குதிரை அதிவேகமாக ஓடத்தொடங்கியது.





குதிரையை அடக்க இயலாத வண்டிக்காரன் தூக்கியெறியப்பட்டான்.





அப்போது 15 வயதுள்ள சிறுவன் அதைப் பார்த்தான்.




அந்த சிறுவன் குதிரை மீது தாவி ஏற முயன்றான்.




குதிரை அவனைத் தள்ளிவிட்டு ஓடத் துவங்கியது. சிறுவனுக்கு உடல் முழுவதும் காயங்கள்.



ஆனாலும் மீண்டும் மீண்டும் முயன்று குதிரை மீது ஏறினான்.



குதிரையை அடக்கி வண்டியை நிறுத்தினான்.





வேடிக்கை பார்த்தவர்கள் அனைவரும் அந்த சிறுவனின் மன உறுதியைப் புகழ்ந்தனர்.



அந்த சிறுவன்தான் நரேந்திர தத். பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தர் ஆனார்!

## 08.2014 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1511 - போர்த்துக்கீசர்கள் மலாக்காவைக் கைப்பற்றினர்.
- 1521 - ஒட்டோமான் துருக்கியர் பெல்கிரேட் நகரைக் கைபபற்றினர்.
- 1619 - ஜேர்மனியின் இரண்டாம் பேர்டினண்ட் புனித உரோமப் பேரரசன் ஆனான்.
- 1789 - வில்லியம் ஹேர்ச்செல் சனிக்கோளின் புதிய சந்திரனைக் கண்டுபிடித்தார்.
- 1844 - பிரெட்ரிக் எங்கெல்ஸ் மற்றும் கார்ல் மார்க்ஸ் இருவரும் பாரிசில் சந்தித்தனர்.
- 1845 - சயன்டிஃபிக் அமெரிக்கன் முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1849 - ஒரு மாதகால முற்றுகையின் பின்னர் வெனிஸ நகரம் ஆஸ்திரியாவிடம் வீழ்ந்தது.
- 1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவைப் பிடித்தது.
- 1879 - சூளுக்களின் கடைசி மன்னன் செட்ஸ்வாயோ பிரித்தானியர்களினால் சிறைப்பிடிக்கப்பட்டான்.
- 1898 - காலெப் பிராடம் தான் கண்டுபிடித்த மென்பானதற்கு பெப்சி கோலா எனப் பெயரிட்டார்.
- 1913 - நெதர்லாந்தின் அரசி வில்ஹெல்மினா த ஹேக் நகரில் அமைதி அரண்மனையைத் திறந்தார்.
- 1916 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனி, ருமேனியா மீதும், இத்தாலி ஜேர்மனி மீதும் போரை அறிவித்தன.
- 1922 - ஜப்பான் சைபீரியாவிலிருந்து தனது படைகளை விலக்கச் சம்மதித்தது.
- 1924 - சோவியத் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஜோரஜியர்கள் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.
- 1931 - பிரான்சும், சோவியத் ஒன்றியமும் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.
- 1943 - நாசி ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக டென்மார்க்கில் பொது வேலை நிறுத்தம் ஆரம்பமானது.
- 1963 - மார்ட்டின் லூதர் கிங், 200,000 பேருடன் 'எனகனவு யாதெனில்...' என்ற புகழ்பெற்ற வார்த்தைகளுடன் சொற்பொழிவாற்றினார்.
- 1964 - பிலடெல்பியாவில் இனக்கலவரம் ஆரம்பித்தது.
- 1979 - ஐ.ஆர்.ஏயின் குண்டு ஒன்று பிரசல்சில் வெடித்தது.
- 1991 - சோவியத்திடமிருந்து உக்ரைன் விடுதலை பெற்றது.
- 1991 - மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் பதவியிலிருந்து விலகினார்.
- 1996 - வேல்ஸ் இளவரசர் சார்ல்ஸ், இளவரசி டயானா மணமுறிவு ஏற்பட்டது.
- 2006 - இலங்கையில் பத்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்தன.

### பிறப்புகள்

- 1749 - ஜொஹான் வூல்ப்காங் ஃபொன் கேத்தா, ஜேர்மனிய எழுத்தாளர், அறிவியலாளர் (இ.1832)
- 1828 - லியோ டால்ஸ்டாய், உருசிய எழுத்தாளர் (இ.1910)
- 1855 - ஸ்ரீ நாராயணகுரு, இந்து ஆன்மிகவாதி (இ.1928)
- 1863 - அய்யன்காளி, தலித் தலைவர் (இ. 1914)
- 1957 - ஈவோ யொசிப்போவிச், குரோவாசியா அரசியலவாதி
- 1965 - ஷானியா ட்வைன், கனடிய நாட்டுப்புற பாப் பாடகர
- 1983 - லசித் மாலிங்க, இலங்கைத் துடுப்பாட்ட அணியின அதிவேகப் பந்து வீச்சாளர்

### இறப்புகள்

- 430 - புனித அகஸ்டீன், மெய்யியலாளர் (பி. 354)
- 1891 - ராபர்ட் கால்டுவெல், பிரித்தானியத் தமிழறிஞர் (பி. 1814)
- 1973 - முகவை கண்ணே முருகனார், கவிஞர், தமிழறிஞர் (பி. 1890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



...எனவே, உலகப் போட்டிகள் அடுத்த இரு வாரங்களில் அதே ஆஸ்திரேலியாவில் தொடங்க இருக்கும் நிலையிலும் அங்கே தங்காமல் உடனடியாக அனைவரும் இந்தியா திரும்பிவிட்டனர். 1975, 1979, 1983, 1987 என முடிந்த நான்கு உலகக் கோப்பைப் போட்டிகளுக்குப் பிறகு ஐந்தாவது உலகப் போட்டிகளில் முதல் டெஸ்ட் 22 பெப்ரவரி பெர்த் மைதானத்தில் துவங்கியது. முட்டியில் ஏற்பட்ட காயம் காரணமாக ஆஸ்திரேலியாவில் நடந்த கடைசி இரு போட்டிகளில் ரவிசாஸ்திரி கலந்துகொள்ளவில்லை. தற்போது முழுவதும் குணமான நிலையில் உலகக் கோப்பைக்கு அவர் தேர்வு செய்யப்பட்டார்.

ஐந்தாவது உலகக் கோப்பைப் போட்டிகளின்போது பல புதுமைகள் அரங்கேறின. அதற்கு முந்தைய உலகக் கோப்பை ஆட்டங்கள் பகலில்தான் விளையாடப்பட்டன. முதன்முறையாக ஐந்தாவது உலகக் கோப்பைப் போட்டிகள் பகல்- இரவு ஆட்டங்களாக ஒளிவெள்ளத்தில் விளையாட ஏற்பாடாயின. இரு அணிகளுக்கும் வித்தியாசம் தெரிய வேறு வேறு வண்ணங்களில் உடை அணிய, வழக்கமான சிகப்பு பந்துக்குப் பதில் வெள்ளைப் பந்துகள் பயன்படுத்தப்பட்டன. நிறவேற்றுமை காரணமாக விளையாடத் தடை விதிக்கப்பட்ட தென் ஆப்பிரிக்கா அணி முதன் முறையாக உலகக் கோப்பை போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்பட்டது. மொத்தம் 9 அணிகள் போட்டிகளில் பங்கேற்றன. இதற்கு முந்தைய போட்டிகளில் மொத்த நாடுகளும் இரு அணிகளாகப் பிரிக்கப்படும். சம்மந்தப்பட்ட அணிகளுக்குள்ளேயே போட்டிகள் நடைபெற்று ஒவ்வொரு அணியிலும் வெற்றிபெறும் அணியே இறுதிச் சுற்றில் மோதும். ஆனால், இந்த உலகக் கோப்பையில் பழைய முறை ரத்துச்செய்யப்பட்டு அனைத்து அணிகளும் ஒருமுறையேனும் மற்ற அணியுடன் விளையாடியே தீர வேண்டும் என்ற புதிய விதி சேர்க்கப்பட்டது.

**உலகக்கோப்பைபோட்டிகளில்சச்சின் எடுத்தது மொத்தம்283ரன்கள். இதில் மூன்று அரை சதங்கள் அடக்கம். சராசரி47.17. சச்சின்மோசமாக விளையாடினான்என்றுசொல்லமாட்டேன். ஆனால், இதுபோதாது, நான் அவனிடம் இருந்து இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறேன் என்றார் இந்திய அணியின் மேலாளர் அப்பாஸ் அலிபேக். ஆம், அவர் மட்டுமல்ல, இந்த நாடும் சச்சினிடம் இருந்து இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறது. அவனை இமயமலை சிகரத்தில் வைத்துப்பார்க்க ஒவ்வொரு ரசிகனும் ஆவலுடன் இருக்கிறான்!**

### உலகக் கோப்பை போட்டிகள் துவங்கின



முதல் போட்டி நியூசிலாந்து- ஆஸ்திரேலியா இடையே ஆரம்பமானது. உலக சாம்பியன் ஆஸ்திரேலியா இந்த ஆட்டத்தில் அதிர்ச்சி தோல்வி அடைய கிவி கேப்டன் மார்டின் க்ரோ அடித்த சதம் வெற்றியை ஈட்டித் தந்தது. அதேநாள் இங்கிலாந்துடனான பகல்- இரவு போட்டியாக நடந்த முதல் ஆட்டம் இதுதான். 236 ரன்களைத் துரத்தி திறமையாக விளையாடியும் இந்தியாவால் வெற்றி பெற முடியவில்லை. இந்தியா மிக சொற்பமாக 9 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. ஸ்ரீகாந்த் எடுத்த 39 ரன்களில் 7 பவுண்ட்ரிகள், சச்சின் 44 பந்துகளில் 35. ஐயன் பாத்தம் பந்தில் காட்ச்கொடுத்து சச்சின் அவுட் ஆன பிறகு இந்தியாவின் கனவு தவிடுபொடியானது.

இந்திய- இலங்கை போட்டி மழை காரணமாக ரத்து செய்யப்பட்டது. இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. ஆஸ்திரேலியாவிற்கு மீண்டும் தோல்வி. இந்தமுறை தென் ஆப்பிரிக்கா 9 விக்கெட் வித்தியாசத்தில் அதைத் தோற்கடித்தது. மார்ச் 1 ஆம் திகதி இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் மோதின. இரு அணிகளும் ஏற்கனவே தோல்வி கண்ட நிலையில் வெற்றிக் கனியைச் சுவைக்க மோதின. ஆஸ்திரேலியா 9 விக்கெட் இழப்பிற்கு 237. ஜோன்ஸ் 109 பந்துகளில் 90 ரன்கள் எடுத்தார். அடுத்த இந்திய அணி சார்பில் அசாருதீன் 103 பந்துகளில் 93 எடுத்து ஸ்கோரை உயர்த்தினார். சச்சின் 11 ரன்களுக்கு அவுட் ஆகவே, இந்தியா நம்பிக்கையை இழந்தது. கடைசி ஓவரில் 13 ரன்கள் எடுத்தால் வெற்றி, 5 பந்துகளில் 9 ரன்கள் எடுக்க கடைசி பந்தில் 4 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலை. கடைசி பந்தை ஸ்ரீகாந்த் சுழற்றி சிக்சர் அடிக்க அது சிக்சர் என்றும் வெற்றி என்றும் மைதானமே ஸ்தம்பித்து நிற்க ஸ்டீவ்வா பந்தைப் பிடித்து நழுவவிட்டார். வேறு வழி இல்லாமல் பேட்ஸ்மேன் ரன்களுக்காக ஓடத்துவங்க மூன்றாவது ரன் எடுக்கும் முன்பு டேவிட் பூன் வெங்கடபதி ராஜுவை ரன் அவுட் ஆக்கினார். ஆக, இந்தியா கடுமையாகப் போராடி ஒரு ரன் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவிடம் தோற்றது. புதிய விதிப்படி பாகிஸ்தானும் இந்தியாவும் மோதும் வாய்ப்பு உருவானது.

**கே. ரமேஷ்** (தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 09 இல் கூட்டெண் 09 இன் பலன்கள்



**74**

தோற்றம்

செவ்வாயுடன் செவ்வாய் இணைந்த ஆதிக்கப் பலன். முழுவதுமாய் செவ்வாய்ப் பாதிப்பிருக்கும். சம உயரம் இருக்கும். சுமாரான நிறமாக இருப்பர். நடுத்தர உடலமைப்பும் கூர்மையான பார்வையுடன் உள்ளடங்கிய கண்களிருக்கும். முடி நிறைய இருக்கும். உடல் சக்திமிக்கதாகும்.

நீண்ட முகத்தில் நீண்ட மூக்கும் பெரிய வாயும், சரியில்லாத பற்களும் இருக்கும். சுமாரான உதடுகள் இருக்கும். விரைவான உடலசைவு இருக்கும். விழிகளும் சிவந்து காணப்படும். காயவடுகளுமிருக்கும்.

குணம்

துணிவும் வீரமும் இருக்கும். எளிதில் களைப்படைய மாட்டார். கை கால்களிலும் முடி நிறைய இருக்கும். குரல் மந்தமாக இருக்கும்.

இவர்களிடம் கை சண்டையிட முடியாது. பேச்சும் இவரிடமிருந்து மிகச் சூடாக வரும். கட்டப் பஞ்சாயத்து தாதாக்கள் ஆக இருப்பர். அடியாட்களாக இருப்பர். எப்போதும் முரட்டுத்தனத்தைக் காட்டாமல் ஆளுக்கும் சமயத்திற்கும் தக்கவாறு தந்திரமாகவும் செயற்படுவர். ரௌடிகளை அடக்குவர். சாதுக்களைக் காப்பர். இருக்கும் பகுதி மக்களுக்குப் பாதுகாவலாக இருப்பர். யாரையும் எதையும் எதிர்த்துப் போராடி வெல்லுவர். அடிக்கடி காயமும் அடிதடிகளும் வரும். இரக்க குணமும் இருக்கும். தாமே சென்று பிறருக்கு உதவுவர். சாதாரண மக்களுக்குத் தலைவராவர். புகழை விரும்புவர். ஓவியக்கலை மேல் ஈடுபாடு கொள்ளுவர். இடைவிடாமல் கருதியதை அடை முயற்சிப்பர். புதுவிதமாக வேலை செய்வர். போராட்டத்தை முடுக்குவர். சோம்பலை வெறுப்பர். எளிமையாக வாழுவர். சகோதரரிடம் பாசத்தோடிருப்பர். சகோதரியை நேசிப்பர். யார் பேச்சையும் கேட்காமல் தம் சொந்த யோசனைப்படி நடப்பர். பிறர் நோகப் பேசுவர். நிறையப்பொழுது போக்காகக் கண்காட்சி காண விரும்புவர். கண்டவுடன் காதலில் ஈடுபடுவர். இசை, நடனம் கலைகளை விரும்புவர்.

யோகம், உடற்பயிற்சி, விளையாட்டு, போர்ப்பயிற்சியில் ஈடுபடுவர். பிரச்சினைகளை நிறைய விரும்பித் தலையிடுவர். அமைதியாக ஆட்களை எடை போட்டறிவர். சூழ்நிலையை ஊன்றிக் கவனிப்பர். ஏற்ப அனுசரித்து நடப்பர். காதல் உணர்வை நன்கு அனுபவிப்பர். நன்றி கெட்ட மனிதர்களால் சூழப்பட்டிருப்பர். நண்பர், உறவினர், நல்லவர், கெட்டவர், பெற்றோர், மனைவி மக்கள் என எல்லோரிடமும் விவகாரம் பண்ணுவர். சத்தம் சண்டையின்றி இவர் அடங்க மாட்டார். எதையும் எதிர்கொள்ளுவர்.

குடும்பம்

பெருந்தன்மையும் உடைய இவர்கள் தம்முடன் பலரையும் தம் குடும்பமாக வைத்துக் காப்பார். பிறர் பசி தீர்க்கப் பாடுபடுவர். இதனால் குடும்பச் செலவு கூடும். உயர உயரப் பல குடும்பங்களை இணைத்துக்கொண்டு வாழ்வளிப்பார். கூட்டுக் குடும்பமாக மனிதநேயத்தேடியிருப்பார். அழகை ரசிக்கும் இவர் காதலிப்பர். காதல் போராட்டமாகும். எதிலும் தீவிரங்காட்டும் இவர்கள் மனைவியை இழக்கலாம். மறுமணம் செய்தும் கொள்வர். சிலர் விவாகரத்து செய்து பிரிவர். ஆண், பெண் வாரிசுகளிருக்கும். இவர்கள் கோபமும் பாசமும் உடையவர்களானபடியால் குடும்பத்தில் பிரிவும் சச்சரவும் வரும். நல்ல மனைவி அமைந்தும்; பயனில்லை.

தொழில்

அனல் கக்கும் பேச்சாளராக எழுத்தாளராக இருக்கலாம். அரசியலிலும் அரிய பதவிகளைப் பெறலாம். தீவிரவாதிகளாக போராடுபவராக இருப்பர். தொழிற்சாலைத் தலைவர்களாவர். பொலிஸ் இராணுவம் தீயணைப்புப்படை மருத்துவமனைகளில் வேலை பார்ப்பர். குத்துச் சண்டை வீரராவர். விளையாட்டு வீரராக வாகன ஓட்டப் பந்தயத்தில் வெல்பவராக இருப்பர். நடனமணியாவார். இசையமைப்பாளராக விளங்குவர்.

இன்ஜினியர்களாக கட்டடம் கட்டுபவராக ரியல் எஸ்டேட் சுரங்கம் ஓட்டல்களில் பணிபுரிபவராக இருப்பார். உளவாளியாக வேலை பார்ப்பார். பிறந்த கூட்டு எண் ஒரே எண்ணாக இருப்பதால் பெயர் எண்ணைப் பொறுத்தும் தொழிலமையும். ஆய்வாளராக விஞ்ஞானியாக கல்லூரிப் பேராசிரியராக ஸ்போர்ட்ஸ் கோச்சாக ட்ரில் மாஸ்டராகவெல்லாம் இருப்பர். ஓட்டல் முதலாளிகளாகவும் சினிமா தயாரிப்பாளராகவும் நடிகராகவும் விநியோகஸ்தராகவும் இயக்குநராகவுமிருப்பர்.

நோய்

ரத்தத் தொடர்பில் பி.பி. குழாயடைப்பு வரலாம். வயிற்று வலி உண்டாகலாம். உணவுக் குழாய் குடல்களில் கோளாறுண்டாகும். மூச்சு தொடர்பான நோய், கண், பல்நோய் காணும். வலிப்பு வரலாம். இதயநோய் ஏற்படும். அம்மை, மஞ்சக் காமாலை, அக்கி, முடி கொட்டுதல் காச நோய் உண்டாகலாம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டு வெடிப்பு

## 26 பேர் உடல் சிதறிப் பலி; 37பேர் படுகாயமடைந்தனர்!

(பக்தாத்)

கடந்த 2006ஆம் ஆண்டில் அமெரிக்கத் தலையீட்டின் மூலம் ஈராக்கின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட ஷியா பிரிவு நூரி அல் மாலிகி சன்னி சிறுபான்மையினரையும், குர்து பழங்குடியினரையும் தனிமைப்படுத்தி ஏராளமான அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டது தற்போது அங்கு பெரும் உள்நாட்டுக் கலவரத்தை உருவாக்கியுள்ளது. கடந்த ஜூன் மாதம் தொடங்கிய இந்தப் போராட்டங்களில் பெரும்பான்மை ஜிஹாதிப் போராளிகள் அடங்கிய இயக்கம் நாட்டின் பெரும்பகுதிகளைக் கைப்பற்றியதுடன் இரண்டாவது பெரிய நகரமான மோசூலையும் கைப்பற்றியுள்ளது.

ஈராக் அரசு இந்தப் பகுதிகளை திரும்பக் கைப்பற்றப் போராடி வருகின்றது.

ஈராக்கில் உள்ள போராளிகள் உணவகங்கள், சந்தைகள், மசூதிகள் போன்ற சனநெருக்கடி மிகுந்த இடங்களில் தாக்குதல்களை நடத்தி அதிகபட்ச சேதத்தை ஏற்படுத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் பக்தாத்தின் ஜடிடா என்ற இடத்தில் உள்ள ஷியா பிரிவு வழிபாட்டு பகுதியில் தற்கொலைத் தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான். இதில் 11 பேர் பலியாகினர். மீண்டும் அதே பகுதியின் நெருக்கடி மிகுந்த சந்தி ஒன்றில் கார்க்குண்டு வெடித்ததில் 15 பேர் பலியான




தாகவும், 37 பேர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு மற்றும் மருத்துவத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அந்தப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல வாகனங்கள் சேதமடைந்ததுடன் குண்டு வெடித்த இடத்தில் ஒரு பள்ளமே ஏற்பட்டிருந்தது. அருகிலிருந்த நடைபாதை முழுவதும் இரத்தக்கறைகள் காணப்பட்டன. கடைகளுக்கு முன்னால் கிடந்த சிதறல்களை எல்லாம் அந்தக் கடை ஊழியர்கள் பின்னர் சுத்தப்படுத்தினர் என்று தகவல்கள் தெரிவித்தன. (இ)

## அணு ஆயுத பரவல் தடைச் சட்டத்திற்கு உலகநாடுகள் ஒப்புதலளிக்க வேண்டும்

### ஐ.நா.பொதுச்செயலாளர் கோரிக்கை



(கொழும்பு)

அணு ஆயுத சோதனைக்கு எதிரான சர்வதேச தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. உலகில் அணு ஆயுதங்கள் இல்லாத நிலையை உருவாக்குவதற்காக சில ஆண்டுகளுக்கு முன்பு அணு ஆயுத பரவல் தடைச் சட்டம் ஒன்றை ஐ.நா. கொண்டு வந்தது.

சீனா, எகிப்து, ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இதில் கையெழுத்திட்டு இருந்தாலும் கூட, இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஒப்புதலை இன்னும் இந்த நாடுகள் அளிக்கவில்லை. இதேபோல் இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா ஆகிய 3 நாடுகளும் இந்த சட்டத்தில் இன்னும் கையெழுத்திடவில்லை.

இந்த நிலையில் அணு ஆயுத சோதனைக்கு எதிரான சர்வதேச தினத்தையொட்டி, பான் கீ மூன் விடுத்த அறிக்கையில், அணு ஆயுத பரவல் தடைச் சட்டத்தில் இதுவரை கையெழுத்திடாத நாடுகளும், இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை அறிவிக்காத நாடுகளும் தங்களது ஒப்புதலை அளிக்கவேண்டும். அப்போது தான் இந்த சட்டத்தை வேகமாக நடைமுறைப்படுத்த இயலும். அணு ஆயுத சோதனைகளுக்கு முடிவு கட்டப்பட்டால் அது உலக நாடுகளின் பாதுகாப்பான மற்றும் சுபீட்சமான எதிர்காலத்துக்கு வழிகாட்டுவதாக அமையும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## தற்கொலைக்கு ஐந்து லட்சம் டொலர் இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவு

### ஜப்பானில் சம்பவம்

ஜப்பானில் 2011 ஆம் ஆண்டு நிகழ்ந்த புகுஷிமா அணுமின் நிலைய விபத்தைத்தொடர்ந்து தற்கொலை செய்துகொண்ட பெண்ணின் மரணத்துக்கு, விபத்துக்குள்ளான புகுஷிமா அணுமின் நிலைய உரிமையாளரே பொறுப்பு என்று ஜப்பானிய நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இறந்த பெண்ணின் கணவருக்கு சுமார் ஐந்து இலட்சம்டொலர் இழப்பீடு கொடுக்கும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த அணு உலை விபத்தில் இருந்து வெளியான கதிரியக்க ஆபத்து காரணமாக திருமதி ஹமகோ வாடனபேவும் அவரது கணவரும் வசித்துவந்த அவர்களின் வீட்டில் இருந்து கட்டாயமாக வெளியேற வேண்டிய சூழல் உருவானது.

சொந்த வீட்டை விட்டு வெளியேறிய பிறகு ஒரு மாதம் கழித்து மன அழுத்த நோயால பாதிக்கப்பட்ட திருமதி வாடனபே தனக்குத்தானே தீயிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

அவரது அந்த தறகொலை மரணத்துக்கு புகுஷிமா அணு ஆலையின் உரிமையாளரான டெப்கோ நிறுவனமே பொறுப்பு என்று தீர்ப்பளித்திருக்கும் ஜப்பானிய நீதிமன்றம், அவரது கணவருக்குஏறக்குறைய ஐந்து இலட்சம் டொலர்கள் இழப்பீடு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது.

இன்றைய தீர்ப்பு தமது குடும்பத்துக்கு ஓரளவு நீதியையும் நிம்மதியையும் வழங்கியிருப்பதாக ஹமகோவின் கணவர் தெரிவித்தார்.

நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு, புகுஷிமா அணு உலையின்உரிமையாளரானடெப்கோ நிறுவனத்திடம் இருந்து புகுஷிமா அணுமின் நிலைய விபத்தால் பாதிக்கப்பட்ட மற்றவர்களும் இழப்பீடு கோரி வழக்குகள் தொடுப்பதற்கான முன்னுதாரணமாக அமையக்கூடும் என்று டோக்யோவில் இருக்கும் பிபிசி செய்தியாளர் தெரிவிக்கிறார். (இ)

## 75 வயது மூதாட்டிக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மிஸவ்ரி மாநிலத்தை சேர்ந்த 75 வயது மூதாட்டிக்கு கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னர் கணவனை சுட்டுக் கொன்ற வழக்கில் ஆயுள் தண்டனை வழங்கி வ்யோமிங் மாநில நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 1975ஆம் ஆண்டு செய்யேன் பகுதியில் வசித்து வந்த போது தனது கணவனை ( வயது 25)சுட்டுக் கொன்ற இவர், அட்டைபெட்டியில் பிரேதத்தை வைத்து, ஒரு சுரங்கத்தின் அருகே வீசி விட்டு, ஏதும் தெரியாதவர் போல் இருந்து விட்டுள்ளார். எப்படியோ, இந்த வழக்கில் மோப்பம் பிடித்து விட்ட அமெரிக்க பொலிஸார் தற்போது 75 வயதாகும் அலைஸ் என்ற மூதாட்டியை கைது செய்து வ்யோமிங் மாநில நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

போதுமான சாட்சியங்களுடன் குற்றம் நிரூபணம் ஆனதால அலைஸ்க்கு ஆயுள் தண்டனை வழங்கி நீதிபதி தீர்ப்பளித்தார். (இ)




## இஸ்ரேல்-ஹமாஸ் இடையே நீண்டகாலப் போர் நிறுத்தம்

### ஐ.நா.வரவேற்பு; மக்கள் மகிழ்ச்சி

(காஸா)

எகிப்து கோரிய நீண்டகால போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல்இராணுவமும்ஹமாஸ் அமைப்பும் ஒப்புக்கொண்டன. இதனை ஐ.நா. வரவேற்றுள்ளது.

காஸா முனையில், இஸ்ரேலஇராணுவத்திற்கு ஹமாஸ் கிளர்ச்சியாளர்களுக்குமான போர் 50 நாட்களாக நீடித்தது. இதில் 2ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் பலியாகினர். 11 ஆயிரத்து 100 பேர் படுகாயமடைந்தனர். இஸ்ரேல் தரப்பில் 100 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர், 5 பொதுமக்கள் என 69 பேர் பலியானார்கள்.

எகிப்து அரசு பலமுறை இருதரப்பு இடையே சமாதான பேச்சுவார்த்தை நடத்தியபோதும், சமரசம் ஏற்படாமல் காஸாவில் பதற்றம் நீடித்து வந்தது. எகிப்து தலைநகர் கெய்ரோவில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நீண்டகால போர் நிறுத்தம் செய்ய இஸ்ரேல்-ஹமாஸ் ஒப்புக்கொண்டன.

இந்த நிலையில் இருதரப்பும் மேற்கொண்டுள்ள இந்த முடிவுக்கு ஐ.நா. வரவேற்பு தெரிவித்துள்ளது. இது குறித்து ஐ.நா. பொது செயலாளர் பான் கீ மூன், செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் ட்யூஜாரிக் கூறும்போது,

50 நாட்களாக அங்கு ஏற்பட்ட துயரங்களுக்கு முடிவு ஏற்படும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

நெடுநாட்களாக அங்கு நடந்த மனித துயரங்களுக்கும், பொருளாதார இழப்புக்கும் முடிவு ஏற்படும் வாய்ப்பு அமைந்துள்ளது என்று அவர தெரிவித்ததாக ஜின்குவா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (இ)

## சிகரெட்டுகளுக்குத் தடை; உலக சுகாதார நிறுவனம்

இ-சிகரெட் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் மின்னணு சிகரெட்டுகள் வழமையான புகையிலை சிகரெட்டுக்களை புகைக்கும் பழக்கத்தை நிறுத்துவதற்கான மாற்றுவழி என்று விளம்பரப்படுத்தப்படுவதை நிறுத்தக்கூடிய கட்டுப்பாடுகளை உருவாக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் கோரியுள்ளது.

மேலும் மக்கள் அதிகம் கூடும் பொது இடங்களிலும், அலுவலகங்களிலும் இந்த இ-சிகரெட்டுக்கள் தடைசெய்யப்பட வேண்டும் என்றும் உலக சுகாதார நிறுவனம் கோரியுள்ளது. காரணம் இந்த மின்னணு சிகரெட்டுக்களை புகைப்பவர்கள் புகைத்த பிறகு வெளிவிடும் புகை அவர்களை சுற்றியிருப்பவர்களுக்கு என்ன வகையான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது குறித்து இன்னமும் முழுமையாக புரிந்து கொள்ளபபடவில்லை என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

**புகையிலை சிகரெட்டுக்களைவிட இ-சிகரெட்டுக்கள் நல்லதா?**

இ-சிகரெட்டுக்களை புகைப்பவர்கள் உள்ளிழுக்கும் நிக்கோட்டினின் அளவு என்பது சாதாரண புகையிலை சிகரெட்டுக்களில் இருப்பதைவிட பெருமளவு குறைவு என்பதாலும், இ-சிகரெட்டுக்களை புகைப்பவர்களுக்கு அருகில் இருப்பவர்களுக்கு இதனால் பெரிய பாதிப்பு எதுவும் இருக்காது என்பதாலும் சாதாரண வகை சிகரெட்டுக்களைவிட இ-சிகரெட்டுக்களால் ஏற்படும் பாதிப்பு பெருமளவு குறைவு என்றும் ஒரு தொகுதி மருத்துவ விஞ்ஞானிகள் வாதாடுகிறார்கள்.

இ-சிகரெட்டுக்கள் தொடர்பாக செய்யப்பட்ட பல்வேறு ஆய்வுகளின் முடிவுகளும் வழமையான சிகரெட்டுக்களைவிட இ-சிகரெட்டுக்களால் ஏற்படும் பாதிப்புக்களின் அளவு எல்லா அளவுகோள்களின் கீழும் கணிசமான அளவுக்கு குறைவாக இருப்பதாகவே தெரிவித்திருக்கின்றன.

ஆனால் இந்த ஆய்வின் முடிவுகள் முழுமையானவை அல்ல என்று கூறும் வேறு சில மருத்துவ விஞ்ஞானிகளோ இ-சிகரெட்டுக்களின் நன்மை, தீமைகள் இன்னமும் முழுமையாக ஆராயப்படவில்லை என்பதால் புகையிலை சிகரெட்டுக்களுக்கு மாற்றாக இ-சிகரெட்டுக்களை ஊக்குவிப்பது சரியான அணுகுமுறையல்ல என்று வாதாடுகிறார்கள். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்ட ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சேவை வேலைத்திட்டத்தின் புதிய கட்டமைப்பு சார் மாற்றங்கள்

அறிமுகம்

பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களை உலக சமூகத்திற்கு கையளிக்கும் பாரிய பொறுப்போடு அரசானது கல்விக்காக கணிசமான முதலீடுகளைச் செய்து வருகிறது. எதிர்பார்க்கப்பட்ட இந்த இலக்குகளை வெற்றிகரமாக்குவதற்கு பாடசாலைகளில் பல்வேறுபட்ட அறிவுசார்ந்த விரிவான பாடவிதானங்களுடன் அதற்கு உதவக்கூடிய பிரயோக வாழ்க்கைத் தேர்ச்சியினை உள்ளடக்கிய பல வேலைத்திட்டங்கள் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான வேலைத் திட்டங்களில் பாடசாலை மட்ட ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத் திட்டமும் ஒன்றாகும்.

அந்த வகையில் இக்கட்டுரையில் பாடசாலை மட்ட ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சேவை வேலைத் திட்டத்தின் புதிய கட்டமைப்பு சார் மாற்றங்கள் தொடர்பாக கல்வி அமைச்சினால் இறுதியாக வெளியிடப்பட்ட 2013/6 சுற்றறிக்கைக்கு அமைவாக பின்வரும் விடயத் தலைப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

1.வழிகாட்டல் மற்றும் ஆலோசனை தொடர்பான எண்ணக்கரு விளக்கம்

2.ஆசிரியர்களை சேவையில் ஈடுபடுத்தல்

3.ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல்

4.ஆலோசனைப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களைத் தரப்படுத்தல்

5.ஆலோசனை மற்றும் வழிகாட்டற் குழுவின் கட்டமைப்பு

6.ஆலோசனை மற்றும் வழிகாட்டற் குழுவின் செயற்பாடுகள்.

**1.வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனை தொடர்பான எண்ணக் கரு விளக்கம்**

வாழ்வின் சகல சந்தர்ப்பங்களிலும் எல்லாப் பருவங்களிலும் சூழலுடன் இயைபாக்கம் காணவும் சுயதிறன்களை விருத்தி செய்யவும் பொருத்தமான தெரிவுகள் செய்யவும் தீர்மானங்களை மேற்கொள்ளவும் உளவியல் அணுகுமுறை அடிப்படையில் பயிற்சி பெற்றவர்களால் வழங்கப்படும் உதவியை வழிகாட்டல் எனலாம்.

அதபோன்று ஆலோசனை எனப்படுவது ஆலோசனை நாடி தனது பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு ஆலோசகரை நேர்முகமாகச் சந்தித்து பேட்டி காணும் நுட்ப முறையின் அடிப்படையில் கலந்துரையாடி அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகு முறைகளை தீர்மானித்துக்கொள்வதனை ஆலோசனை எனலாம்.

அதாவது ஒருவர் செய்யத் தகுந்தது எது? செய்யத் தகாதது எது? என்றும் எவ்வாறு ஒழுகவேண்டும் என்றும் கூறப்படும் வார்த்தைகளே அறிவுரை கூறல் அல்லது ஆலோசனை எனலாம். இதன் வழியே சரியான குறிக்கோளை கண்டறிய உதவுதல் வழிகாட்டல் எனப்படுகிறது.

கல்வி என்பது வழிகாட்டலாகும்- வழிகாட்டல் என்பது கல்வியாகும். சமகாலத்திற் கல்வியும் வழிகாட்டலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றன. கற்றல்- கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடுவதற்கு ஆசிரியருக்கு மிக முக்கியமாக வழிகாட்டல் ஆலோ சனை வழங்கல் தொடர்பான தேர்ச்சி மிக அவசியமானதாகும்.

தற்கால மாணவர்களிடம் ஆசிரியர்கள் அறிவை மட்டும் போதிப்பதனால் போதிய முன்னேற்றம் ஏற் பட்டுவிடமாட்டாது. மாணவர்களுக்கு தம்மைத்தாமே உணர்ந்து கொள்ளக்கூடிய முறையில் அவர்களுக்கு உதவிகள் வழங்கவேண்டியுள்ளது. இத்தகைய உதவிகளை இப்பாடசாலை மட்ட ஆலோ சனை மற்றும் வழிகாட்டல் சேவை வேலைத் திட்டத்தினூடாகவே அவர்களுக்கு வழங்க முடியும். தற்போது பாடசாலை மட்டத்தில் உதவிச் சேவையாக வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. எனவே இப் புதிய உதவிச் சேவைக் கட்டமைப் பில் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வரு மாறு நோக்கப்படுகின்றது.

**2.ஆசிரியர்களை சேவையில் ஈடுபடுத்தல்**

சகல பாடசாலைகளிலும் இவ் வேலைத்திட்டத்திற்காக கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் உரியவாறு பெயரிடப்பட்ட ஆசிரியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

✦ 300 மாணவர்களைவிடக்குறைவான பாடசாலைகளுக்காக ஆசிரியர் ஒருவரை பகுதி நேரமாக சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

✦ 300 மாணவர்களைவிட மேற்பட்ட சகல பாடசாலைகளிலும் முழு நேரமாக விடுவிக்கப்பட்ட ஆசிரியர் ஒருவுரை சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

✦ இரட்டைமொழி அல்லது மும்மொழி மூலம் கற்பித்தல் மேற் கொள்ளப்படும் பாடசாலைகள் மொழி மூலத்திற்கு அமைவாக மேற்குறிப்பிடப்படும் மாணவர் எண்ணிக்கையினை கருத்திற்கொண்டு அந்தந்த மொழிக்காக ஆசிரியர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்படவேண்டும்.

✦ இவற்றுக்கு மேலதிகமாக பாடசாலை ஆசிரிய எண்ணிக்கை போதியளவாக அமைந்திருப்பின் பல பிரிவுகளைக் கொண்ட பாடசாலை களின் தேவைக்கு ஏற்றவாறு அப்பிரிவினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஆலோசகர்களை நியமிக்கமுடியும்.

✦ பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சேவைக்குரிய ஆசிரியர் மேலதிக ஆசிரியராக இருக்கக் கூடாது என்பதுடன் எக்காரணம் கொண்டும் பதிலீட்டாளர் இன்றி இட மாற்றங்களை மேற்கொள்ளக் கூடாது எனவும் சுற்றறிக்கையில் ஆசிரியர்களை சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பாக குறிப்பிடப்படு கிறது.

**3.ஆசிரியர்களை தேர்ந்தெடுத்தல்**

வழிகாட்டல் மற்றும் ஆலோச னை நிகழ்ச்சித்திட்டத்திற்காக பாடசாலைகளில் ஆசிரியரைத் தேர்ந்தெடுக்கும் போது பின்வரும் விடயங்கள் கவனத்திலெடுக்கப்படவேண்டுமெனக் குறிப்பிடப்படுகிறது.

✦ இலங்கை ஆசிரிய சேவையின் 2-II அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் நிரந்தர ஆசிரியராக இருத்தல்

✦ உயர் நபர்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்கான இயலுமை கொண்டவராக இருத்தல்

✦ பாடசாலை வளாகத்திலிருந்து உயர்ந்த பட்சம் 15 கிலோமீற்றருக்குள் வசிக்கக்கூடியவராக இருப்பது மிகப்பொருத்தமானதாகும்.

✦ முன்னைய சேவைக்காலத்துக்குள் தண்டனை அல்லது ஒழுக்காற்றுச் செயற்பாடுகளுக்கு உட்படாது இருத்தல் வேண்டும்.

✦ உடல், உள, தேக ஆரோக்கியம் கொண்டவராக இருப்பது அத்தியாவசியத் தேவையாகும்.

இத்தகைய தகுதிகளுடன் தேர்ந்தெடுக்கப்படும் சகல ஆசிரியர்களுக்கும் இச்சேவையை மேற்கொள்வதற்கு வேண்டிய விரிவான கடிதத்தினை வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக வழங்குதல் வேண்டும் எனவும் சுற்றறிக்கை வலியுறுத்துகின்றது.

**4.ஆலோசனைப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களைத் தரப் படுத்தல்**

ஆலோசனைப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் பின்வருமாறு தரப்படுத்தப்படுவர் எனக் குறிப்பிடப் படுகிறது.

✦ ஆலோசனைச் சேவை உதவியாளர்

✦ உதவி மாணவர் ஆலோசனை

✦ மாணவர் ஆலோசனை

✦ சிரேஷ்ட மாணவர் ஆலோசனை

மேற்குறிப்பிட்ட தரப்படுத்தலில் ஆலோசனைச் சேவை உதவியாளர், உதவி மாணவர் ஆலோசனை போன்ற ஆலோசனைச்சேவைக்காக 60 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட குறுகியகால பயிற்சி நெறியொன்றைப் பெற்றுள்ள ஆசிரியர்களை ஈடுபடுத்த வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. இப்பயிற்சி நெறிக்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாக தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு, மாகாண மற்றும் வலயக் கல்வி அலுவலகங்கள், பல்கலைக் கழகம் அல்லது அதற்கு சமமாக அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவகங்கள், இலங்கை மன்ற நிறுவகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆலோசனை சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள கல்வி நிறுவனங்கள் குறுகிய கால பயிற்சியை வழங்க முடியுமெனக் குறிப்பிடப்படுகிறது.

மாணவர் ஆலோசனைக்காக ஈடுபடுத்தப்படும் ஆசிரியர்கள் மேற்



கல்வித் தரிசனம்

குறிப்பிட்ட நிறுவனங்களின் மூலம் 200 மணித்தியாலங்களிலும் கூடுதல் பயிற்சி மற்றும் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களாக காணப்பட வேண்டும் என்றும் சிரேஷ்ட மாணவர் ஆலோசனைக்காக ஈடுபடுத்தப்படும் ஆசிரியர்கள் 80 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட பிரயோகப் பயிற்சியுடன் இத்துறை தொடர்பான பட்டப்பின்மட்டத்திலானதகைமை கொண்ட பட்டம் அல்லது மனோவியல்தொடர்பான கலைமாணிப்பட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையுடையவராக காணப்படவேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

**5. ஆலோசனை மற்றும் வழி காட்டற் குழுவின் கட்டமைப்பு**

இக்குழுவானது பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் குழு எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றது. இக் குழுவின் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 10 ஆகும். பாடசாலையின் அதிபர் தனது உத்தியோக பூர்வ அதிகாரத்தின் மூலம் தலைவராகவும் குறித்த பாடசாலையின் வழிகாட்டல் ஆலோசனை சேவைக்கு பொறுப்பான ஆசிரியர் குழுவின் அமைப்பாளர் மற்றும் செயலாளராக செயற்படுவார். பிரதி அல்லது உதவி அதிபர்கள் இருவர் அல்லது ஒரு பிரிவுக்குப் பொறுப்பான ஆசிரியர் குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்படுவார்.

பாடசாலையின் மாணவர் நலன் புரி பணிகள் தொடர்பில் கூடுதலான ஆர்வம் கொண்ட இரு ஆசிரியர்கள் ஆசிரியர் சபையின் இணக்கப்பாட்டிற்கு அமைய ஏனைய இரு அங்கத்தவர்களாகவும் பாடசாலையின் சிரேஷ்ட மாணவ தலைவர்களில் இருவர் மற்றும் விளையாட்டு உட்பட்ட இணைபாடவிதானம், விசேட செயற்பாடுகள் கொண்ட மாணவர்களில் கூடுதலான திறமைகளைக் காண்பிக்கும் மாணவர் ஒருவரை இதற்காக உள்ளடக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறான குழு கட்டமைப்பில் உள்ளடங்கும் பெயர்கள் கொண்ட பட்டியல் கல்லூரி அலுவலகத்தில் காட்சிப் படுத்தப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்படுகிறது.

**6.ஆலோசனை மற்றும் வழி காட்டல் குழுவின் செயற்பாடுகள்**

இக் குழுவின் செயற்பாடுகளாக பின்வருவனஅமைந்துகொள்கின்றன.

✦ பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களின் உடல் உள தேகாரோக்கியத்தை உயர் மட்டத்தில் பேணுதல்

✦ பாடசாலை மாணவர்களின் ஆசிரியர்களின் இனங்காணப்பட்ட விசேட பழக்க வழக்கங்களுக்கு அமைய தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

✦ மாணவர்களின் அடைவு மட்டம் மற்றும் பரீட்சைப் பெறுபேறு களை உய ரிய மட்டத்தில் பேணு வதற்காக உதவுதல்.

✦ மாணவர்களின் பாடசாலை சமூகமளிப்பினை ஊக்குவிப்பதற்கும் இடைவிலகலை கட்டுப்படுத்துவதற்கும் உதவுதல்.

✦ ஆசிரியர் விடுமுறை பெறுவதற்கான விசேட நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அதனைக் கட்டுப்படுத்துவதற்காக உதவுதல்

✦ பாடசாலையில் கவனம் செலுத்த வேண்டிய குழுவாக இனங் காணக்கூடிய மாணவர்களுக்காக விசேட வேலைத்திட்டங்களை மேற் கொள்ளல்.

✦ பாடசாலைச் சூழல் மற்றும் அதன் பாதிப்புக்களை இனங் காணுதல் மற்றும் அதற்கு தீர்வுகளை வழங்குதல்.

✦ பாடசாலை ஒழுக்கநெறி களை சிறந்த முறையில் பேணுவதற்கு உதவுதல்.

✦ பாடசாலையில் போதைப் பொருள் ஊடுருவல் தடுப்புப் பணி களை உயர் மட்டத்தில் பேணு வதற்கு உதவுதல்.

✦ பாடசாலையில் இடம் பெறக் கூடிய சிறுவர்களுக்கு எதிரான வன் முறைகள் மற்றும் துஷ்பிர யோகங் களை ஒழிக்க நடவடிக்கை எடுத்தல்.

✦ மாணவர்களின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பெற்றோரை அறிவுறுத்தல்.

✦ மாணவர்கள் பாடங்களைத் தேர்ந்தெடுக்கும் செயற்பாடுகளின் போது உதவுதல்.

✦ சமகால அடிப்படையில் எழக்கூடிய ஏனைய சீரற்ற நிலைமைகளின் போது அதற்குரிய செயற்பாடுகளைத் திட்டமிட்டு அமுல் படுத்தல். உதாரணம்:-திஉர் அனர்த் தங்கள் பாதகமான பிர சாரங்கள்

✦ எதிர்காலத் தொழில் உலகிற்கு ஏற்ப மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு பாடசாலைகள் மேற் கொள்ள வேண்டிய அடிப்படை பணிகளை மேற்கொள்ளல்.

மேலும் இக் குழுவானது சகல மாணவர்களிலும் வரும் முதல் வாரத்திலேயே உரிய தினங்களுக்குள் கூட வேண்டும் என்றும் உரிய விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை எட்டுவதற்கு பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத்திட்டத்தின் மூலம் அவற்றுக்கு தீர்வுகள் வழங்கப் படல் வேண்டும். இதற்காக தமது பாடசாலைக்குரிய கல்வி வலயத்தில் வழிகாட்டல் ஆலோசனைக் குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர்களின் உதவியை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் குறிப் பிடப்படுகிறது. இக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக உரிய அறிக்கை பாடசாலையில் பேணப்படுவதோடு பாடசாலை மட்ட வழி காட்டல் ஆலோசனை வேலைத் திட்டத்திற்குத் தேவையான உதவிகளை கல்வி அமைச்சு மற்றும் மாகாண வலய கல்வித் திணைக் களங்களுடாக பெற்றுக் கொள்ள முடியுமெனவும் சுற்றறிக்கை வலியுறுத்தி நிற்கிறது.

**முடிவுரை**


இவ்விடயத் தலைப்புக்களின் அடிப்படையில் நோக்கும் போது பாடசாலை மட்ட வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டத்தின் புதிய கட்டமைப்பு சார் மாற்றங்கள் ஊடாக நாம் பல்வேறு பட்ட உதவிகளை மாணவர்களுக்கு வழங்கு முடியும். தற்கால உலகில் மாணவர் ஒவ்வொருவருக்கும் ஏதோவொரு வகையில் உதவியென்பது தேவையாகவே உள்ளது. பாடத்தெரிவுகள், புதிய கற்கைநெறிகள், தொழிற் தெரிவுகள், வாழ்வில் ஏற்படும் பல்வேறுபட்ட சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களில் உதவியும் வழிகாட்டலும் அவசியமானதேயாகும். எனவே இவற்றை சிறப்பாக வழங்குவதற்கு பாடசாலைகளுக்கான இந்த வழிகாட்டி அலகினை பெயரளவில் மட்டும் விட்டுவிடாமல் அவற்றை நடைமுறைப்படுத்த மாணவர்கள் மத்தியில் இறங்கி அதிகளவு செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் சிறந்த எதிர்கால சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

திரு.கா.நிமலநாதன்
ஆசிரியர்

கல்வித் தரிசனம் பகுதிக்கு துறைசார்ந்தவர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை காந்தியின் துணிச்சல்



ஆகஸ்ட் 14 பாகிஸ்தானின் சுதந்திர தினம். ஆகஸ்ட் 15 இந்தியாவின் சுதந்திர தினம். இவ்விரண்டு சுதந்திர தினங்களும் 1947 இல்தான் முதன்முறையாகக் கொண்டாடப்பட்டன. இவ்விரண்டு நாடுகளுக்கும் மூலமாக அமைந்த மற்றொரு நாளும் அதே ஆகஸ்ட் மாதத்தில்தான் அமைந்தது. ஆனால், ஓராண்டுக்கு முன்னால் 1946 ஆகஸ்ட் 16 ஐ நேரடி நடவடிக்கை நாள் என்று முஸ்லிம் லீக் அறிவித்தது. நம்முடைய நடவடிக்கைகளால் பிரிக்கப்பட்ட இந்தியாவை அடைவோம், அல்லது அழிக்கப்பட்ட இந்தியாவை அடைவோம் என்றே ஆவேசமாக அறிவித்தார் ஜின்னா. அன்று தொடங்கிய வன்செயல்கள் அலையலையாகப் பரவி, இந்தியாவைப் பிரிப்பது இனி தவிர்க்க முடியாது என்ற நிலையை ஏற்படுத்திவிட்டது. கலவரங்கள் கல்கத்தாவில் ஆரம்பித்தன. விரைவிலேயே வங்காளம் முழுக்கப் பரவின. பிறகு பிஹாரும் ஐக்கிய மாகாணமும் கொந்தளித்து இறுதியாக பஞ்சாபை அடைந்தன. மற்ற எல்லா இடங்களையும் விட பஞ்சாபில் அது கொடூரமாகிவிட்டது.

நேரடி நடவடிக்கை நாள் அறிவிப்புக்கான காரணங்களையும் அது ஏற்படுத்திய விளைவுகளையும் நான் உட்பட பல வரலாற்றாசிரியர்கள் பதிவுசெய்திருக்கிறோம். சமீபத்தில் பழைய ஆவணங்களை ஆய்வுசெய்தபோது கொல்கத்தாவில் அன்றைய தினம் என்ன நடந்தது என்று நேரில் பார்த்தவர்கள் பதிவு செய்திருந்த கடிதங்களை வாசிக்க நேர்ந்தது. மானிடவியல் அறிஞர் நிர்மல்குமார் போஸ், டெல்லியில் வசித்த தனது நண்பரான எழுத்தாளர் கிருஷ்ணா கிருபளானிக்கு எழுதிய கடிதம் அது. 1946 செப்டம்பர் 2 ஆம் திகதி அது எழுதப்பட்டிருந்தது.

**யாருக்கும் தெரியாது**

எல்லோரும் எதிர்பார்த்த ஆகஸ்ட் 16 விடிந்தது. என்ன நடக்கப் போகிறது என்று யாருக்கும் தெரியாது. அகிம்சையைக் காப்போம் என்று முஸ்லிம்கள் சத்தியப் பிரமாணம் செய்துவிடவில்லை என்று முஸ்லிம் லீக் தலைவர் காஜா நஜிமுதீன் அறிக்கை விடுத்திருந்தபோதிலும் பெருமளவில் சூறையாடல்கள் நடக்கும் என்று யாரும் நினைக்கவில்லை. நகரின் எந்தப் பகுதியிலும் எந்தப் பொலிஸ்காரரையும் பார்க்க முடியவில்லை. நடுப்பகல் வாக்கில் ஷாம் பஜாரிலும் அதற்கும் முன்னால் பிற பகுதிகளிலும் வன்செயல்கள் தொடங்கிவிட்டன. காஸிப்பூர் மைதானத்தில் முஸ்லிம்கள் கூடுகிறார்கள். பிற்பகல் 2 மணிக்கு கூட்டம் தொடங்குகிறது என்று அறிவிக்கப்பட்டது. பகல் 12 மணி முதலே முஸ்லிம்கள் அந்த மைதானம் நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிட்டனர்.

போகும் வழியில் இருந்த கடைகளை மூடுமாறு எச்சரித்தார்கள். கவிராஜ் என்பவருடைய கடையை உடைத்தனர். ஒரு டாக்டரின் வீடும் தாக்கப்பட்டது. பற்றி எரியும் கந்தல் துணிகளை உடைந்த கதவுகள் வழியாக கட்டடங்களுக்குள் வீசினர். அந்த இடத்தைச் சுற்றியிருந்த வீடுகளைச் சேர்ந்த 10 முதல் 15 வரையிலான இளைஞர்கள் திடீரென அங்கு ஓடிவந்து வன்செயலில் இறங்கிய கும்பலை விரட்டி அடித்தனர்.

வடக்கு கொல்கத்தாவின் பல பகுதிகளில் கத்திக்குத்துகளும் கொலைகளும் நடந்தன. பெண்கள் அடித்து முடமாக்கப்பட்டதாகவும், வீடுகள் கொளுத்தப்பட்டதாகவும் கடைகள் சூறையாடப்பட்டதாகவும் நகரின் வெவ்வேறு பகுதியிலிருந்து வீடுகளுக்குத் திரும்பியவர்கள் கூறினர். அவற்றில் பல உண்மையில் நடக்கவில்லை என்று விசாரணையில் தெரியவந்தது. மக்கள் அச்சத்திலும் ஆத்திரத்திலும் ஆழ்ந்திருந்தனர். யார், எதைச் சொன்னாலும் நம்பும் மனநிலையில் இருந்தனர்.

19 ஆம் திகதி நகருக்குள் இராணுவம், அழைக்கப்பட்டது. நகரம் மெதுவாக அமைதியுற்றது. எல்லாப் பக்கங்களிலும் நிவாரண உதவிப் பணிகள் தொடங்கின. பணம், துணி மணிகள், காய்கறிகள் குவிந்தன. உதவிக்கு இளைஞர்களும் யுவதிகளும் முன்வந்தனர். ஆனால், எந்த முகாமிலும் இந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து இருக்கவில்லை. தனித்தனியான முகாம்கள்தான் இருந்தன. அதேசமயம், முஸ்லிம்களை அவர்களுடைய பக்கத்துவீட்டு இந்துக்களும் இந்துக்களை அண்டை வீட்டு முஸ்லிம்களும் பாதுகாத்த தகவல்கள் நிறைய வந்தன.

ஆகஸ்ட் 16,17,18 ஆகிய நாட்கள் என்ன நடக்குமோ என்ற திகிலிலேயே கடந்தன. வெறிகொண்ட மக்களை என்னால் ஏதும் செய்ய முடியவில்லை. என்னுடைய நண்பர்களுக்கும் அதே அனுபவம்தான். அடிதடி மோதல்கள் நடந்த இடங்களிலேயே சிலர் சாமாதான முயற்சியில் துணிந்து இறங்கினர். கும்பல்கள் வன்முறையில் இறங்கும்போது அவர்களைத் தடுக்க முடிவதில்லை. இந்துக்கள் வன்செயல்களில் இறங்குவதைத் தடுக்க முடிந்திருந்தாலும் என்னுடைய அகிம்சை பலனுள்ளதாக இருந்திருக்கும். இரவு நேரங்களில் வன்முறை கும்பல்களுக்கு இடையே சென்றிருந்தால் ஒருவேளை நான் விரும்பியபடி தடுத்திருக்கலாம். ஆனால், ஏதோ ஒன்று என்னை அவ்வாறு செல்லவிடாமல் தடுத்துவிட்டது. என்னுடைய நண்பரும் முஸ்லிம்களைக் காப்பாற்ற முயன்றார். அவரால் எல்லோருடைய கைகளையும் தடுக்க முடியவில்லை. நம்மை நாமே பலிதானமாகக் கொடுத்திருந்தால் தடுத்திருக்க முடியுமோ என்று என்னைப் போலவே அவரும் தன்னையே கேட்டுக்கொண்டிருக்கிறார் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் நிர்மல் போஸ்.

கொல்கத்தாவில் வன்செயல்களை லீக் தொடங்கியிருந்தாலும் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள்தான். எண்ணிக்கையிலும் ஆயுத பலத்திலும் அவர்களை மற்றவர்கள் மிஞ்சிவிட்டனர். முஸ்லிம்களின் வீடுகள்தான். அதிக எண்ணிக்கையில் எரிந்தன. இதற்கு பதிலடியை கிழக்கு வங்காளத்தின் நவகாளியில் முஸ்லிம்கள் தந்தனர். நூற்றுக்கணக்கான இந்துக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்தனர்.

**காந்தியும் போஸும்**

நவகாளியில் கலவரங்கள் ஓயவும் வகுப்பு ஒற்றுமை ஏற்படவும் மகாத்மா காந்தி 1946 நவம்பரில் அங்கு சென்றார். அவருடன் நிர்மல்குமார் போஸும் சென்றார். போஸுக்கு காந்திஜியிடம் ஆழந்த ஈடுபாடு. 1920 களில் காந்திஜியின் அறைகூவலுக்கு செவிமடுத்து படிப்பை உதறிவிட்டு போராட்டத்தில் ஈடுபட்டு கைதானவர் அவர். செலக்ஷன்ஸ் ஃப்ரம் காந்தி, ஸ்டடீஸ் இன் காந்தியிசம் என்ற 2 முக்கியமான புத்தகங்களை வெளியிட்டவர்.

நிர்மல் போஸையும் தன்னுடன் நவகாளிக்கு காந்திஜி அழைத்துச் சென்றதற்கு 2 காரணங்கள் உண்டு. காந்திஜியின் சிந்தனைகளும் செயல்களும் அவருக்கு நன்றாகத் தெரியும். அத்துடன் வங்க மாநிலத்தவர் என்பதால் காந்திஜியின் பேச்சை உள்ளூர் மக்களுக்குப் புரியும் விதத்தில் மொழி பெயர்க்க வல்லவர். நவகாளியிலும் பிஹார் மாநிலத்திலும் காந்திஜியுடன் நிர்மல் போஸ் பல மாதங்கள் சுற்றுப் பயணம் செய்தார். தனது அனுபவங்களை மை டேஸ் வித் காந்தி என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார். 1953 இல் அப்புத்தகம் வெளியானது. அது முழுக்க முழுக்க காந்திக்கு துதிபாடும் புத்தகம் அல்ல. காந்திஜியின் பிரமச்சரிய சோதனைகளை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அவருடனிருந்த இளம் பெண்களுக்கு அது அநீதி இழைப்பது போன்றது என்ற எண்ணமே போஸுக்கு இருந்தது.

போஸின் அந்தப் புத்தகம் இப்போதும் அச்சில் இருக்கிறது. ஆனால், நான் சுட்டிக் காட்டிய கடிதம் மக்களிடம் அதிகம் பரவவில்லை. நேரடி நடவடிக்கை நாள் விளைவித்த செயல்களை நேரில் பார்த்த சாட்சியின் கடிதம் என்பதற்காக மட்டும் அதை நான் குறிப்பிடவில்லை. 1946 ஆகஸ்டில் என்ன நிலை நிலவியதோ அதுவே 2014 ஆகஸ்டிலும் நிலவுகிறது. இன்றும் முழுமையான வகுப்பு ஒற்றுமை ஏற்பட்டுவிடவில்லை. உத்தரப்பிரதேசத்தில் இப்போதும் வகுப்புக் கலவரங்கள் நிகழ்கின்றன. அச்சமும் பரஸ்பர அவநம்பிக்கையும்தான் இந்த மோதல்களுக்குக் காரணம். தற்காப்புக்காக இரு சமூகத்தவரும் மோதல்களில் ஈடுபடுகின்றனர்.

தனியாக நடக்க அச்சமாக இருக்கிறது. நாம் சேர்ந்து நடக்கலாம் என்று தன் நண்பரிடத்தில் சொல்லியிருக்கிறார் நிர்மல் போஸ். ஆனால், காந்திஜியோ தனியாகவே நடந்தார். அடுத்து அவர் கொல்கத்தா வந்தார். அவர் எப்போதுமே தனியாக நடப்பதை விரும்பினார். போஸ் அவருடன் சேர்ந்து கொண்டார். நவகாளி பிஹாரில், பிறகு கொல்கத்தா, டெல்லியில் தன்னுடைய சீடர்களுடன் காந்திஜி நடந்தார். அவரைப் போல தனித்து நடக்கும் மனோதைரியம் இப்போதைய அரசியல் தலைவர்களுக்குக் கிடையாது. கூட்டமாகவாவது நடந்துசெல்வார்கள் என்று எதிர்பார்ப்பதும் சரியல்ல. பிரதமர் தலைமையில் காங்கிரஸ் தலைவர் உள்ளிட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு உத்தரப் பிரதேசத்துக்கு சென்றால் அங்கு சமூக அமைதியை அவர்களால் மீட்க முடியும்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு சுதந்திரமில்லை

## அரியம் எம்.பி.சுட்டிக்காட்டு

காரைதீவு பிரதேசத்தில் உள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்துக்குள் கடந்த 25 ஆம் திகதி திங்கட் கிழமை 11.30 மணியளவில் மர்ம நபர் ஒருவர் நுழைந்தமை இலங்கை தமிழரசுக்கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் இந்நாட்டில் சுதந்திரமில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

எமது கட்சி அலுவலக உறுப்பினர்களை அச்சுறுத்தலுக்குள்ளாக்குவது கண்டனத்துக்குரியதாகும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, இந்நாட்டில் ஏனைய கட்சிகளுக்கு இருக்கும் சுதந்திரம் எமது இலங்கை தமிழரசுக் கட்சிக்கு இல்லை. கடந்த காலங்களில் கிறீஸ் பூதம் போன்று தற்போது எமது கட்சி அலுவலகங்களுக்குள்ளும் மர்ம நபர்கள் நுழைவதும் கண்காணிப்பதும் கட்சி உறுப்பினர்களை அச்சுறுத்துவதும் போன்ற செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

இவ்வாறு கட்சி அலுவலகங்களுக்குள் இரவு வேளையில் நுழையும் மர்ம நபர்களின் செயற்பாடுகள் திட்டமிட்ட செயற்பாடாகவே இருக்கின்றது.

குறிப்பாக இம் மர்ம நபர்கள் இரவில் நுழைந்து எமது அலுவலகத்தில் தடை செய்யப்பட்ட பொருட்களை மறைத்து வைத்து விட்டு எமது கட்சி உறுப்பினர்களை உளவியல் ரீதியான பாதிப்புக்குள்ளாக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட முடியும்.


அண்மையில் ஊடகவியலாளர்கள் பயணித்த வாகனத்திற்குள் கஞ்சா இருந்ததாக கூறியதைப் போன்று எமது கட்சி அலுவலகத்தையும் கைக்குண்டு வேறு பொருட்களை மறைத்து வைத்து விட்டு எமது செயற்பாட்டை முடக்க நினைக்கின்றனர்.

ஜனநாயக ரீதியில் எமது கட்சியின் செயற்பாடுகளை இங்கு தொடர முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். தமிழ் மக்களையும் கட்சியையும் உள ரீதியான பாதிப்பிற்குள்ளாக்கும் கிறீஸ் பூதங்களின் செயற்பாடு கண்டிக்கத்தக்கதாகும்.

இவ்விடயம் தொடர்பில் நாம் வெளிநாட்டு தூதுவர்களின் கவனத்திற்கும் கொண்டு செல்லவுள்ளோம் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறும் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்

## சோபித தேரர் வலியுறுத்தல்



(கொழும்பு)

ஜனநாயகத்தை பாதுகாக்க பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறும் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்காவிட்டால் பொது வேட்பாளர் ஒருவரை மக்களின் ஆதரவுடன் நிறுத்தப்போவதாக நீதியான சமூகத்திற்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் எச்சரித்துள்ளார்.

கண்டியில் பிரதம மகாநாயக்கர்களை சந்தித்த பின்னர் செய்தியாளர்களுக்கு இதனை தெரிவித்துள்ள அவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதே தனது இயக்கத்தின் முக்கிய இலக்கு என குறிப்பிட்டுள்ளார். பிரதம மகாநாயக்கர்களும் அதனை ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியே முன்னர் இது குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் அதனை நிறைவேற்றா விட்டால் அதற்காக பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகத்தை பாதுகாக்க பாராளுமன்றத்திற்கு பொறுப்பு கூறும் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அரச நிறுவனங்களின் அதிகாரம் சரியான கரங்களில் உள்ளதை உறுதிப்படுத்த 17 ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## சட்டம், ஒழுங்கு நிலைமை முற்றாக சீர்குலைந்துள்ளது

### சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

போலி அபிவிருத்தியின் பின்னணியில் ஆட்சியாளர்கள் நாட்டை சுரண்டி வருவதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

கோட்டை ரயில் நிலையத்திற்கு நேற்று முன்தினம் நடைபெற்ற எதிர்ப்பு போராட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஊழல் மோசடிகளை விரட்டியடிக்க வேண்டும். மக்களை ஏமாற்றிவரும் ஆட்சியாளரகள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டில்சட்டம்ஒழுங்கு நிலைமை சீர்குலைந்துள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொரு நாளும் பதிவாகின்றது.

ஏனைய தேர்தல்களைப் போன்றே ஊவா தேர்தலுக்கு முன்னதாகவும் முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த ஊழல் மோசடி மிக்க ஆட்சியாளர்களை விரட்டியடித்து ஜனநாயகத்தை நிலைநாட்ட மக்களின் செயற்பாடும் அவசியம் என சரத் பொன் சேகா தெரிவித்துள்ளார். (இ)

# 5000 பேர் தொழிற்சங்க நடவடிக்கையில் இணைவு

## பிரதம செயலாளர்

ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தகுதிகாண் மருத்துவ சேவை உத்தியோகத்தர்கள் நாடெங்கிலும் உள்ள வைத்தியசாலை களில் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள், மருந்தாளர்கள் உட்பட 5ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இணைந்துள்ளதாக தகுதிகாண் மருத்துவ சேவை தொழிற்சங்கத்தின ஒன்றிணைந்த குழுவின் பிரதம செயலாளர் சமன் ஜயசேகர தெரிவித்தார்.

தொழிற்சங்க நடவடிக்கையால் மருந்து விநியோகித்தல் உட்பட வைத்தியசாலைகளின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர், அமைச்சின செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கடந்த காலங்களில் இடம்பெறற பேச்சுவார்த்தைகளில் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை என சமன் ஜயசேகர தெரிவித்தார்.

சிறுவர் வைத்தியசாலை, மகப்பேற்று வைத்தியசாலை மற்றும் புற்றுநோய் வைத்தியசாலையின் ஊழியர்களை தொழிற்சங்க நடவடிக்கையில் இணைத்துக் கொள்ளவில்லை என தகுதிகாண் மருத்துவ சேவை தொழிற்சங்கத்தின் ஒன்றிணைந்த குழுவின் பிரதம செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ)

# இன்று ஒரு தகவல்

## ஆணவக் குரங்கு

காட்டுவழியால் புத்தர் போய்க்கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் அவரைப் பின் தொடர்ந்து ஒரு குரங்கு சென்று கொண்டிருந்தது.

புத்தர் திரும்பிப் பார்த்தார்.

குரங்கு அப்படியே குதித்து உயர எழும்பி ஒரு கிளையில் போய் உட்கார்ந்தது.

"ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று கேட்டார் புத்தர்.

"என்னை சாதாரணமாக நினைக்க வேண்டாம். நான் மகா மந்தி. என்னால் முடியாதது ஒன்றுமில்லை. என்ன வேண்டுமானாலும் செய்வேன்" என்றது.

"அப்படியானால் ஒரு பந்தயம் வைத்துக் கொள்ளலாமா?" என்றார்.

"ஓ... வைத்துக் கொள்ளலாம்!" என்றது.

"வேறொன்றுமில்லை. இப்பொழுது நீ மேலே எழும்பி அந்தக் கிளையில்உட்கார்ந்தது போல், அங்கிருந்து தாவிஎன்உள்ளங்கையில் வந்து உட்கார வேண்டும் அவ்வளவுதான்!" என்றார்.

"அப்படி உட்கார்ந்தால் என்ன பரிசு?" என்றது.

"சொர்க்கத்தில் இருக்கும் மாமன்னன் மரகதச் சக்கரவர்த்தியை என்னுடன் வந்து இருக்கும்படி அழைத்துக் கொள்கிறேன். அந்தச் சமயத்தில் அவருடைய அரியணை அங்கே காலியாகிவிடும். நீ அதில் போய் உட்காரலாம்.

பந்தயத்தில் தோற்று விட்டால் பூமியில் வாழ்ந்து அதன் பின்னர் தான் என்னிடம் வரமுடியும்" என்றார்.

குரங்குக்குத் தாவுவது ஒரு பெரிய காரியமா?"இது எனக்கு சாதாரண விடயம். இப்பொழுதே தாவட்டுமா?" என்றது.

"சரி" என்று சொல்லி உள்ளங்கையை நீட்டினார். அவருடைய கை தாமரை இலை அளவுக்கு விரிந்தது.

குரங்கு தாவுவதற்கு தயாரானது. அதற்கு முன்னர் ஒரு சின்ன யோசனை.

"இந்தக் கிளையிலிருந்து அந்தக் கைக்குத் தாவுவது எனக்கு அற்பமான வேலை. என்னுடைய கௌரவத்திற்கு இது சரியாக இருக்காது. அதனால் இந்தக் கிளையிலிருந்து மேலுலகம் போய் அங்கே ஒரு சுற்றுச் சுற்றி விட்டு அங்கிருந்து வரலாம்!" என நினைத்தது.

பின் இதோ பாய்கிறேன் என்று தாவி உயரப் போய்விட்டது. சிறிது நேரத்தில் வானுலகத்திற்கு சென்றது. அங்கே ஐந்து பளிங்குத்தூண்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்தது.

குரங்கு நினைத்தது...புத்தரிடம் போய் இந்தப் பளிங்குத் தூண்களை பார்த்தேன் என்று சொன்னால் திகைத்து விடுவார். இந்தத் தூண்களில் ஏதாவது அடையாளம் போட்டுவிட்டுப் போக வேண்டும் என்று நினைத்தது.

உடனே ஒரு தூணில் "ஒரு மகாஞானி வந்துவிட்டுப் போனார்" என்று எழுதியது. எழுதிவிட்டு அப்படியே தாவி புத்தரின் உள்ளங்கையில் வந்து உட்கார்ந்தது!

"பார்த்தீர்களா... வானுலகத்திற்கு போய் அங்கிருக்கும் ஐந்து பளிங்குத் தூண்களைப் பார்த்துவிட்டு அதில் நான் வந்த விபரத்தை எழுதி வைத்து விட்டு வந்திருக்கிறேன்" என்றது.

"அப்படியா?" என்றார் புத்தர்.

"ஆமாம்...சந்தேகமாக இருந்தால் வாருங்கள் அழைத்துப் போய்க் காட்டுகிறேன்!" என்றது குரங்கு.

"அதற்கு அவசியமில்லை... கொஞ்சம் கீழே குனிந்து பார்" என்றார் புத்தர்.

அங்கே புத்தரின் உள்ளங்கை தெரிந்தது. நன்றாக உற்றுப் பார்த்தது. அவருடைய ஒரு விரலில் அது எழுதிய வாசகம் தெரிந்தது!

"அப்படியானால் வானத்தில் நான் பார்த்தது புத்தரின் விரல்களா?" என்று திகைத்தது குரங்கு.

இதைப்புரிந்துகொண்டவுடன்அந்தக்குரங்கின்கர்வம்அழிந்தது!

நம்முடைய மனம் தான் இந்தக்குரங்கு. 'மனம்' என்பதும் 'ஆணவம்' என்பதும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள். மனம் உள்ளவரை ஆணவம் இருக்கும். மனம் அழிந்தால் தான் ஆணவம் அழியும். மனம் அழிய வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வது இவ் அர்த்தத்தில்தான்!'

ஒருவன் வாய்க்காலைத் தாண்டுகிறேன் என்று பந்தயம் கட்டி... தாண்ட முடியாமல் வாய்க்காலில் விழுந்து காலை உடைத்து கட்டுப் போட்டுக்கொண்டு வந்தான்.

"ஏன் இப்படி?" என்று கேட்டார்கள்.

"நான் பந்தயம் கட்டிய நேரம் சரியில்லை" என்றான்.

"எப்படி?" என்றார்கள்.

"வாய்க்காலில் தண்ணி இருக்கும் நேரமாக பார்த்து பந்தயம் கட்டியிருக்க வேண்டும்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தில் 100 இந்திய இஸ்லாமியர்கள்



## அதிர்ச்சியூட்டும் தகவல்

ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை பிடித்து அப்பகுதிகளை இணைத்து இஸ்லாமிய நாடு என்று பெயரிட்டு அரசு அமைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தினர் இந்தியாவில் உள்ள ஏழை இஸ்லாமிய இளைஞர்களை குறிவைத்து அந்த இயக்கத்தில் சேர்த்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதிலும் குறிப்பாக கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிராவிலும், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலும் உள்ள ஏழை இஸ்லாமிய இளைஞர்களை அவர்கள் மூளைச் சலவை செய்து சேர்த்துள்ளதாக தெரிகிறது.

இதுவரை 100 இற்கும் மேற்பட்ட இந்தியர்கள் இந்த தீவிரவாத இயக்கத்தில் சேர்நதுள்ளதாக பாதுகாப்பு அமைப்புகள் தகவல் வெளியிட்டுள்ளன.

தேசிய புலனாய்வு நிறுவனத்தால் தேடப்படும் இந்தியன்முஜாகிதீன்தீவிரவாதி ஒருவன் ஒன்லைனில் ஐ.எஸ். ஐ.எஸ். பிரசார வீடியோவை வெளியிட்டு இந்தியாவில் உள்ள ஏழை இஸ்லாமிய இளைஞர்களை சேர்த்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

2 ஜி விவகாரம்

## தயாநிதி மாறனுக்கு எதிராக புதிய மனு

ஏர்செல் - மேக்சிஸ் விவகாரம் தொடர்பாக முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறனுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை புதிய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக தயாநிதி மாறன் இருந்தபோது ஏர்செல் உரிமையாளர் சிவ சங்கரனை மிரட்டி மலேசியாவின் மேக்சிஸ் நிறுவனத் தலைவர் அனந்த கிருஷ்ணன் அந் நிறுவனத்தை வாங்க உதவியதாக புகார் எழுந்தது. இதுகுறித்து 2011 இல் சிபிஐ வழக்கு பதிவு செய்தது.

ஆனால் இதுவரை குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் படவில்லை.

இதை சுட்டிக்காட்டி ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் பிரசாந்த் பூஷண் உச்ச நீதிமன்றத்தில் புதிய வழக்கை தொடர்ந்துள்ளார். (இ)

## இந்திய வம்சாவளி பெண்கள் மூவர் அடுத்தடுத்து கொலை

தென்னாபிரிக்காவில் அடுத்தடுத்து இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 3 பெண்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அங்கு வசிக்கும் இந்தியர்களிடையே அதிர்ச்சி அலையை உண்டாக்கியுள்ளது.

தலையே இல்லாத முண்டமாக ஒரு பெண்ணின் உடல புதைக்கப்பட்டுள்ளதாக அறிந்த பொலிஸார், சடலத்தை கைப்பற்றி விசாரித்தபோது டெசிரீ முருகன்(39) என்ற அந்தப் பெண் மிகத் தீவிரமான போதைப்பழக்கத்துக்கு அடிமையாகி விட்டிருந்ததாகவும், போதைப் பொருட்களை வாங்குவதற்காக விபசாரத்தில் ஈடுபட்டதால், அவரது குடும்பத்தாரே இந்த கொடூரக் கொலையை செய்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த கொலை தொடர்பாக ஒரு பெண், ஒரு மந்திரவாதி உட்பட 6 பேரை கைது செய்த பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.


ஜோகன்னஸ்பர்க் பகுதியில் நிகழ்ந்த இன்னொரு சம்பவத்தில், ஷரீன் பிள்ளை என்ற 41 வயது பெண், உடலில் சுமார் 50 இடங்களில் கத்திக் குத்து காயங்களுடன் வீதியோரத்தில் சடலமாக கடந்தார். ஷரீன் பிள்ளையை அவரது கணவரே கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு தப்பியோடியபோது, 3 நாட்கள் கழித்து பொலிஸாரிடம் பிடிபட்டுள்ளார்.

டர்பன் பகுதியில் நிகழ்ந்த மற்றொரு சம்பவத்தில், ஒரு குழந்தைக்கு தாயான ரோஸ் பெல்(32) என்பவர், துப்பாக்கி குண்டு பாய்ந்த நிலையில் மர்மமான முறையில் சடலமாக கிடந்தார். அவரது சடலம், அடக்கத்துக்கு சற்று முன்னதாக பொலிஸாரிடம் ஒரு நபர் சரணடைந்தார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண்களுக்கு எதிராக சமீபகாலமாக தொடர்ந்து வரும் வன்முறைச் சம்பவங்கள் அங்கு வசிக்கும் இந்தியர்களிடையே பதற்றத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. (இ)

பாரதச் செய்தி

## வியட்நாம் பிரதமருடன் சுஷ்மா சுவராஜ் சந்திப்பு



வியட்நாமில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அந்த நாட்டு பிரதமர் நுயென் தான் டங்கை சந்தித்துப் பேசினார். அப்போது தென் சீனக் கடலில் இந்தியா மேற்கொண்டு வரும் எண்ணெய் துரப்பணப் பணிகளை விரிவு படுத்துவது குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

### சீனா- வியட்நாம் விரிசல

வியட்நாம் எல்லைக்கு உட்பட்ட தென் சீனக் கடலில் எண்ணெய் வளம் மிகுந்துள்ளது. இங்கு இந்தியாவின் ஓஎன்ஜிசி விதேஷ் நிறுவனம் எண்ணெய் துரப் பணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இப் பகுதியை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. கடந்த ஜுலையில் வியட்நாம் கடல் பகுதியில் சீன அரசு சார்பில் எண்ணெய் கிணறு அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. இதற்கு வியட்நாம் அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

சீனாவின் அத்துமீறலுக்கு கிழக்காசிய நாடுகளான புரூணே, மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்வான் ஆகிய நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்தன.

எதிர்ப்பு வலுத்ததால் சீனா தனது முயற்சியை கைவிட்டது. இந்தப் பிரச்சினையால் சீனாவுக்கும் வியட்நாமுக்கும் இடையே விரிசல் அதிகரித்துள்ளது.

சீனாவைக் கண்டித்து வியட்நாமில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன.

இதில் சீன நிறுவனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. அந்த நாட்டில் பணியாற்றிய சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சீனத் தொழிலாளர்கள் விரட்டப்பட்டனர்.

### இந்தியாவின் வியூகம்

இந்நிலையில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மூன்று நாட்கள் பயணமாக கடந்த திங்கட்கிழமை வியட்நாம் சென்றார். அங்கு அந்த நாட்டு பிரதமர நுயென் தான் டங்கை சந்தித்துப் பேசினார்.

அப்போது தென் சீனக் கடலில் இந்தியா மேற்கொண்டு வரும் எண்ணெய் துரப்பண பணிகளை விரிவு படுத்துவது குறித்து இருவரும் ஆலோசித்தனர். பாதுகாப்புத் துறையில் இருநாடுகளும் இணைந்து பணியாற்றுவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து தென் கிழக்கு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் பணியாற்றும் இந்தியத் தூதர்களின் கூட்டம் ஹனோயில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.


இதில் பேசிய சுஷ்மா சுவராஜ், கிழக்காசிய நாடுகளுடனான உறவுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சீனாவுக்கு எதிராக காய் நகர்த்தி வரும் இந்தியா தற்போது வியட்நாம், ஜப்பானுடனான உறவை வலுப்படுத்தி வருகிறது.

அந்த வகையில் தற்போது சுஷ்மா வியட்நாமில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுளளார்.

அடுத்த மாதம் இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப முகர்ஜி வியட்நாம் செல்கிறார். பிரதமர் நரேந்திர மோடி இம்மாத இறுதியில் ஜப்பான் செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## வாஜ்பாய், அத்வானி, ஜோஷி அரசியல் வாழ்வு முடிகிறதா?



இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின், அதியுயர் அதிகாரக் குழுவிலிருந்து மூத்த தலைவர்களான வாஜ்பாய், அத்வானி மற்றும் முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

மாற்றி அமைக்கப்பட்டுள்ள புதிய குழு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டது.

முன்னாள் பிரதமர் வாஜ்பாயுடன் இணைந்து பாஜகவை உருவாக்கியவர்கள் என்று கருதப்படும் அத்வானி, ஜோஷி ஆகியோர் இனி கட்சியின் வழிகாட்டிகளாக இருப்பார்கள் என்று கட்சியின் அறிவிப்பு கூறுகிறது.

பாரதிய ஜனதா கட்சியின் அதியுயர் அதிகாரக் குழுவில் வாஜ்பாய், அத்வானி, முரளிமனோகர் ஜோஷி ஆகியோர் இடம் பெறாதது இதுவே முதல்முறை.

### ஆர் எஸ் எஸ் ஆதிக்கம்

கட்சியில் ஆர் எஸ் எஸ்ஸின் ஆதிக்கத்தையே இந்த அறிவிப்பு பிரதிபலிக்கிறது.

இந்து பத்திரிகையின் முன்னாள தலைமை ஆசிரியரும் இந்திய அரசியல் திறனாய்வாளருமான என்.ராம்.

பாரதிய ஜனதா கட்சியில் ஒரு புதிய கட்டம் ஆரம்பிப்பதையும் இந்த முடிவுகள் காட்டுகின்றன என்று தெரிவித்தார்.

கட்சியின் அறிவிப்பின் மூலம், வாஜ்பாய் அத்வானி மற்றும் முரளி மனோகர் ஜோஷி ஆகியோரின் அரசியல் வாழ்வு முடிவுக்கு வருகிறது என்பது தெளிவாகிறது என்றும் கூறுகிறார் என்.ராம். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா செல்வதற்கு அரசாங்கமே காரணம்

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விளக்கம்

இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கம் தீர்வு கண்டிருந்தால் நாம் இந்தியாவிற்கு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அரசாங்கமானது தீர்வுத்திட்டத்தில் அக்கறைகாட்டாது பதவிக்காலத்தை நீடிப்பதிலேயே அக்கறை செலுத்தி வருகின்றது. தமிழ் மக்கள் படும் துன்ப, துயரங்கள் இந்தியா உட்பட சர்வதேசத்திற்கு நன்கு தெரியும். நாம் இந்தியா சென்று பொய் கூறவேண்டிய அவசியம் இல்லை என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளர் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பது இந்தியா உறுதியாக உள்ளது. ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு சென்றுதான் பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்திய அரசாங்கம் இல்லை. பிரதமர் நரேந்திரமோடியுடனான சந்திப்பில் இதனை நாம் அறிந்து கொண்டோம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி உட்பட பலரையும் சந்தித்து பேசியிருந்தனர். கூட்டமைப்பினரின் புதுடில்லி விஜயம் குறித்து அரசாங்க அமைச்சர்கள் கடும் விமர்சனங்களை செய்திருந்தனர். இந்த விஜயம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவும் விசனம் அடைந்திருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன. இது குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கத்துடன் நேரடியாக பேசுவதில் அர்த்தமில்லை என்பதை இந்தியப் பிரதமருடனான சந்திப்பின் போது நாம் எடுத்துக்கூறியுள்ளோம். இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாயின் பார்வையாளராகவேனும் இந்தியா இருக்கவேண்டும் எனறும் நாம் வலியுறுத்தியுள்ளோம.

இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இன்று இந்தியா அறிந்தே உள்ளது. தமிழர்கள் அனுபவித்து வரும் துன்ப, துயரங்கள் தொடர்பில் இந்தியாவிற்கு சென்று பொய்கூறவேண்டிய அவசியம் எமக்கில்லை. வடக்கு, கிழக்கில் காணி சுவீகரிப்பு, இராணுவப்பிரசன்னம், மீள்குடியேற முடியாது மக்கள் படும் அவலங்கள் என்பவை இரகசியமான விடயங்கள் அல்ல. இவை பரகசியமான விடயங்களாகும்.

எனவே இந்த விடயங்கள் தொடர்பில் நாம் இந்தியாவிற்கு சென்று பொய் கூற வேண்டிய அவசியம் இல்லை. இந்த விடயங்கள் தொடர்பில் நாம் பாராளுமன்றத்திலும் வெளியிலும் ஏற்கனவே கருத்துக்களை தெரிவித்து வந்துள்ளோம். எனவே இவையொன்றும் புதியவிடயங்கள் அல்ல. இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வை கண்டிருந்தால் இத்தகைய நிலை எமக்கு ஏற்பட்டிருக்காது. அரசாங்கமானது தேர்தல்களை நடத்தி பதவிக்காலத்தினை நீடிப்பதில் அக்கறை காட்டி வருகின்றதே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தயாராக இல்லை. எனவே அரசாங்கமானது தனது தவறுகளை முதலில் உணர்ந்து கொண்டு எம்மீது குற்றச்சாட்டுக்களை சுமத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)



சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட செயலகமும் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட காரியாலயமும் இணைந்து சிரமதானம் மற்றும் இரத்ததான முகாம் என்பவற்றை கடந்த 12 ஆம் திகதி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடத்தியுள்ளன. இதன்போது இரத்த தானம் செய்யும் இளைஞர்களை படத்தில் காணலாம். (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

## புலிகளின் செயற்பாடுகளை தடுக்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

வெளிநாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைத் தடுக்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடா, மலேசியா உள்ளிட்ட பல நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை ஒடுக்கும் நோக்கில் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அந்தந்த நாடுகளின் இராணுவப் புலனாய்வுப் பிரிவுகளுடன் இணைந்து பாரியளவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை ஒடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும புலி உறுப்பினர்கள் பகிரங்கமாக செயற்படுவதில்லை எனவும், இரகசியமான முறையில் குற்றச் செயலகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் வெளிநாடுகளில் போராட்டங்களை கூட புலி உறுப்பினர்கள் நடத்தி வருகின்றனர்.

வெளிநாடுகளுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் விரைவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை இல்லாதொழிக்க முடியும் என பாதுகாப்பு அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (இ)

## பேருந்து மோதி ஒருவர் பலி

சிலாபம் - கொழும்பு வீதியின் மாரவில ஹத்தினிய பிரதேசத்தில் பேருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில பயணித்த 21 வயதுடைய சமீர டில்ஷான் என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

குறித்த பேருந்து சாரதி தப்பி சென் றுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க பாகிஸ்தான் உதவி நாடும் இலங்கை

இலங்கைக்குள் போதைப் பொருட்கள் கடத்தப்படுவதை முறியடிக்க பாகிஸ்தானின் உதவியை நாடியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகன தெரிவித்துள்ளார். பெருமளவு ஹெரோயின் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் கடத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ள அவர் கொழும்பு துறைமுகத்திற்கு வரும் கொள்கலன்களில் மறைத்தும் போதைப்பொருட்கள் கொண்டுவரப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஹெரோயின் கடத்தப்படுவதை தடுப்பது தொடர்பான பேச்சுக்கள் புதுடில்லியில் கடந்த வாரம் இடம் பெற்றதாகவும் இதனை தடுப்பதற்கு இந்தியா உதவிகளை வழங்க முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இருநாடுகளுக்குமிடையே பரிமாறப்படும் புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் இரு நாடுகளுக்குமிடையில் நடமாடும் கடத்தல்காரர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## தங்க சங்கிலியை திருடிய யுவதிக்கு சிறைத்தண்டனை

(கொழும்பு)

இரண்டு வயது சிறுமியின் தங்க சங்கிலியை திருடிய யுவதியொருவருக்கு இரத்தினபுரி பிரதம நீதவான் ஆறுமாத கால சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

கலவான பிரதேசத்தில் 2 வயது சிறுமியின் கழுத்தில் போடப்பட்டிருந்த 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை குறித்த யுவதி திருடியுள்ளார்.

இது தொடர்பில் இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து குறித்த யுவதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட யுவதியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்தே நீதவான் இவ்வாறு தீர்ப்பளித்துள்ளார். (இ)

## இந்திய பிரஜைகள் இருவர் கைதாகினர்

நாடாளுமன்றம் மற்றும் பிரதமர் இல்லம் உட்பட உயர் பாதுகாப்பு வலயங்களின் புகைப்படங்களை வைத்திருந்ததாக கூறப்படும் இந்திய பிரஜைகள் இருவரை, கொழும்பு - 15 முகத்துவாரத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட அவர்கள் இந்திய பிரஜைகள் என தங்களை அடையாளப்படுத்தியுள்ளனர். இவர்களை பயங்கரவாத புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (இ)

## சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு; மண்மேடு சரிந்ததில் இருவர் காயம்

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போட்றி தோட்டத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த இருவர் மீது மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

மாணிக்கக்கல் அகழ்விற்காக தோண்டப்பட்டிருந்த குழிக்குள் குறித்த இருவரும் சிக்கியிருந்த நிலையில் பிரதேச மக்களால் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 3.30 அளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்த இருவரும் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் இருவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## பிரிவுத்துயர் பகிர்வு



### கந்தையா தெய்வேந்திரம்

ஏழாலை வடக்கு மாகியப்புலத்தைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் Snejbjerg ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தெய்வேந்திரம் கடந்த 25 ஆம் திகதி திங்கட் கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு Vestergade 63, 7400 Herning, Denmark என்னும் முகவரியில் நடைபெறும்.

### திருமதி சங்கரப்பிள்ளை அன்னலட்சுமி



தெல்லிப்பழை கொல்லங்கலட்டி 'பெரியாவுடையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை அன்னலட்சுமி கடந்த 25 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு கீரிமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் U.K. ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் கடந்த 25 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை U.K. இல் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபை ஆளுங்கட்சி உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 77 வேலைத்திட்டங்கள்

(கரணவாய்)

யாழ்.வடக்குமாகாணசபைஉறுப்பினர்வேலுப்பிள்ளை சிவமோகன் வடமாகாண சபையினால் தனக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடான ரூபா 40 இலட்சத்தில் வடமராட்சி பகுதிக்குட்பட்ட கிராமங்களின் அமைப்புக்களுக்கு நிதி பகிர்ந்தளித்துள்ளார்.




இதற்கமைய கிராமிய உள்ளூர் வேலைத் திட்டத்தில் 47 பேருக்கும் விளையாட்டுத் துறையில் 11 பேருக்கும் கல்வி நிலைய அபிவிருத்தியில் 8 பேருக்குமாகிய கிராமிய அபிவிருத்தியில் 4 பேருக்கும் கூட்டுறவு அபிவிருத்தியில் 2 பேருக்கும் கால்நடை வேலைத் திட்டத்தில் 2 பேருக்கும் கலைத்துறையில் ஒருவருக்கும் சுகாதாரத்தில் ஒருவருக்கும் மின்சார தேவைக்கென ஒருவருக்குமாக மொத்தம் 77 வேலைத்திட்டங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

இவ் 77 வேலைத்திட்டத்திற்கும் உள்வாங்கப்பட்டவர்களை அழைத்து உள்ளூராட்சி ஆணையாளர் முன்மொழிவுகளை ஏற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-60)




# புலம் பெயர்ந்துள்ள உறவுகளும், வர்த்தகர்களும் யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்ப முன்வர வேண்டும்

(யாழ்ப்பாணம்)

போருக்கு முன்னர் வர்த்தகத் துறையில்கொழும்பிற்குஅடுத்தபடியாக விருந்த யாழ்ப்பாணம் இன்று பின் தங்கிய நிலையிலுள்ளது என யாழ். வணிகர் சங்க தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

வர்த்தகத் துறையில் வீழ்ந்து ள்ள யாழ்ப்பாணத்தை புலம்பெயர் மக்கள் மற்றும் இங்குள்ள வர்த்தகர்கள் மீள கட்டியெழுப்ப முன்வர வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுய மதிப்பீட்டு வரி செலுத்துவோரினை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் முடிந்த பின்னர் கடந்த 2012 ஆம் ஆண்டுதான் முதன் முதலாக கௌரவிப்பு அட்டைகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

2013 ஆம் ஆண்டு 18 பேருக்கும் 2014 ஆம் ஆண்டில் 21 பேருக்கும் இக்கௌரவிப்பு அட்டைகள் வழங்கப்பட்டன.

இந்நாட்டின் தேசிய வட பகுதி வர்த்தகர்கள் இயன்ற பங்களிப்பினை வழங்கியிருக்கின்றனர்.

வடக்கில் பொருளாதாரம் வளங்கள் அழிக்கப்பட்ட நிலையிலும் தொழிற்சாலைகள் பெருமளவில் இல்லாத நிலையிலும் வடபகுதி வர்த்தகர்கள் ஓரளவு படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றனர்.

யுத்தம் நடைபெற்று 5 வருடங்கள் கடந்துள்ள நிலையில் வடக்கிலுள்ள அரச தொழிற்சாலைகள் கூட இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

வடக்கில் தென்னிலங்கை வர்த்தகப் பொருட்களே அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்ற நிலையில் இங்குள்ள எமது வர்த்தகர்கள் தென்னிலங்கை பொருட்களினை சந்தைப்படுத்துபவர்களாக காணப்படுகின்றனர்.

வர்த்தகத்துறையில் கொழும்பிற்கு நிகராக ஒரு காலத்திலிருந்த யாழ்ப்பாணம் இன்று வீழ்ச்சியடைந்த நிலையிலுள்ளது.


வங்கிகள் எல்லாம் இலாபத்தை நோக்காக கொண்டே செயற்பட்டு வருகின்றன. ஆகையினால் எமது வர்த்தகர்கள் வங்கிக் கடன் பெறுவதனை இயன்றளவு தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கடந்த இரு வருடத்தில் கடன் தொல்லையால் யாழ்.மாவட்டத்தில் மட்டும் வர்த்தகர்கள் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். ஆகையினால் வங்கிகளில் தேவையற்ற நிலையில் கடன்பெறுவதனை தவிர்த்து திட்டமிட்ட முறையில் செயற்பட வேண்டும்.

கடந்த இரு மாதங்களில் புலம் பெயர் உறவுகளின் வருகையினால் எமது வர்த்தகர்கள் ஓரளவு மூச்சுவிட ஆரம்பித்துள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து வருகின்ற எமது உறவுகள் தமக்குத் தேவையான பொருட்களினை கொழும் பில் கொள்வனவு செய்யாது யாழ்ப்பாணத்தில் கொள்வனவு செய்து பொருளாதாரத்தை உயர்த்த துணை புரிய வேண்டும் என தெரிவித்த அவர் வடக்கிலுள்ள வர்த்தகர்களுக்கு உள்ள தடை தென்னிலங்கையிலிருந்து இங்கு வந்து வர்த்தகத்தில் ஈடுபடுகின்றவர்களினுக்கு இல்லையென்ற தனது ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினர். (இ-4)





வடக்கு மாகரண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் கலாசார உறவுகளுக்கான இந்திய நிலையமும், இந்தியத் துணைத்தூதரகமும் இலங்கை இந்திய நிலையமும் இணைந்து நடத்திய தெய்வீக சுகானுபவ நிகழ்வு நல்லூர் சங்கிலியன் தோப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர், கல்வி அமைச்சர், மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர், இலங்கைக்கான இந்திய பிரதித் துணைத்தூதுவர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)

# பெறுமதிமிக்க ஆபரணங்கள் அணிவதை இயன்றளவு தவிர்த்துக் கொள்ளுங்கள்

## சந்நிதியான் ஆலய நிர்வாகத்தினர்

(கரணவாய்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இதனையடுத்து ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களுக்கு ஆலய நிர்வாகத்தினர் சில அறிவுறுத்தல் களை விடுத்துள்ளனர்.

இதற்கமைய இம் மஹோற்சவ காலங்களில் அடியார்கள் தங்கள் – குடும்பத்தினர், குழந்தைகள், வாகன உடைமைகளின் பாதுகாப்பினை சிரத்தையுடன் பாதுகாத்து எவ்வித பங்கமும் ஏற்படாதிருக்க குறிப்பாக குழந்தைகள், பெண்கள் பெறுமதிமிக்க ஆபரணங்களை அணிந்து வருவதைத் தவிர்த்து குடும்பத்தினரின் குழந்தைகள்தவறுதலையும்தவிர்த்து பெருமான் வழிபாடுகளை மேற் கொள்ளவும்.

கடந்த காலத்தில் இவ்வாலய நிர்வாகத்தில் பொறுப்பான பதவி வகித்தும் ஏனையோரின் ஒத்துழைப்புடன் ஆலயச் சுற்றாடலில் தண்ணீர், மின்சாரம், சுகாதாரம், தங்குமிடம் ஆகியன தன்னிறைவு பெற்று ஆலயத்திலே அன்றாடம் அன்ன தானம் வழங்கிவருவது மிகுந்த திருப்தியாகின்றது.

ஆலய தேர் ஓடும் வீதியில் வியாபாரங்கள்தடைசெய்யப்பட்டு சுற்றிக் கட்டுமானங்கள் அமைந்தமையால் உள்வீதியில் வாகனங்கள் உட்புகுவது தடைசெய்யப்பட்டதுடன் வெளிச் சுற்றாடலில் மரநிழல்களில் அடியார்கள் தங்கவும் உள்வீதி சுற்று மண்டப அமைப்பினால் உள்வீதியில் ஆலய நிகழ்வுகள் அடியார்கள் நேர்த்திகள் வெயில், மழைத்தாக்கமின்றி மனத்திருப்தி பெறவும் முடிந்துள்ளது.

தொண்டைமானாறு அக்கரை ஆதிபரம் குடும்பத்தினர் ஆலயத்திற்கென அன்பளிப்பு செய்த தண்ணீர் பவுசர் மூலம் சுற்றாடலில் தண்ணீர் பற்றாக்குறையினை போக்கி அம்மன் குளத்திற்கும் போதிய நீர் வழங்கி வீதிகளும் தண்ணீரினால் குளுமையாக்கப்பட்டுள்ளது.

அடியார்கள் இவற்றை விரயஞ் செய்யாது ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கடந்த காலங்களில் பலவந்தமாக வாகனப் பாதுகாப்பு என்ற போர்வையில் பல அடாவடித்தனங்கள் இடம்பெற்றன. எமது முயற்சியினால் அவை நாளுக்குநாள் திருத்தமாகின. இம்முறை வாகன ங்களில் வரும் அடியார்கள் ஆலயத்தேர் ஓடும் வீதிக்குள் நிறுத்துவதை தவிர்த்து ஆலயச் சுற்றாடல்களில் பாதைகளுக்கு தடை ஏற்படுத்தாது வீதி ஓரங்களில் ஒழுங்காக வாகனங்களை நிறுத்தி பாதுகாப்புடன் பராமரிக்கவும் பலவந்தமாக வாகனப் பாதுகாப்புக்கென பணத்தை இழக்க வேண்டாம்.

இம் மஹோற்சவ காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள இலவச வாகனத் தரிப்பிடங்களில் சைவ அபிமானங் கொண்ட தொண்டர்களின் உதவிகளையும் ஆலோசனைகளையும் பெற்று உங்கள் வாகனங்களை பத்திரமாக பாதுகாத்துக் கொள்ளவும்.

ஆலய நேர்த்திகள் யாவும் அடியார்களின் திருப்தியுடன் நிறைவேற்றலாம். பொதுவாக எதிர்காலத்தில் பெருமான் நல்லருள் பெற்று சுபீட்ச வாழ்வு ஒளிவிட பெருமானை வழிபாடு செய்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தில் பெரும் பாகத்தைப் பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். - லா புரூயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கலைஞரிடம் கற்றதை ஜெயாவிடம் மறந்தது ஏன்?

காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது, பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியா சென்றிருந்தது.

இந்தியா சென்ற கூட்டமைப்பினர், அப்போது தமிழகத்தின் முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதியைச் சந்திக்காமல், வை.கோபாலசாமியின் உதவியுடன் டில்லி சென்றனர்.

தி.மு.கவின் ஆதரவுடன் ஆட்சி நடத்தும் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கருணாநிதி அவசரமாக ஒரு செய்தி அனுப்புகிறார். அந்தச் செய்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திக்க வேண்டாம் என்பதாக இருந்தது.

கலைஞர் கருணாநிதி எழுதிய கடிதங்களில் காங்கிரஸின் நடவடிக்கைக்கு உட்பட்ட ஒரேஒரு கடிதம் இது எனலாம். சந்திப்பு நிறுத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெறுங்கையோடு நாடு திரும்பினர்.

பின்னர் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்து அவரின் ஆசியுடனேயே பிரதமர் மன்மோகன் சிங்குடன் சந்திப்பு நடத்தப்பட்ட அனுபவம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உண்டு. இருந்தும் அந்த அனுபவத்தை செல்வி ஜெயலலி தாவைச் சந்திப்பதிலும் கூட்டமைப்பு மறந்து விட்டதெனலாம்.

இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவைச் சந்திக்கவில்லை. இது மிகப் பெரும் தவறு என்பதும் கலைஞர் கருணாநிதியிடம் கற்றறிந்த பட்டறிவை முதல்வர் ஜெயலலிதாவை சந்திப்பதிலும் கூட்டமைப்பு மறந்து போனதும் துரதிர்ஷ்டமானவை.

முதல்வர் ஜெயலலிதா எங்கள் தொடர்பில் சட்டசபையில் நிறைவேற்றிய தீர்மானங்களை மரியாதைப் படுத்தும் பொருட்டேனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரைச் சந்திக்க முயற்சி செய்திருக்க வேண்டும்.

தனிநாடு அமைப்பது தொடர்பில், ஐ.நா.சபையின் ஊடாகப் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதல்வர் ஜெயலலிதா எழுதியக் கடிதம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

இக் கடிதம் சம்பந்தப்பட்ட தரப்பிற்குக் கடுப்பை ஏற்படுத்த, அவர்கள் ஜெயலலிதா எழுதும் கடிதம் தொடர்பில் விசமத்தனமான கட்டுரைகளை எழுதி உலகம் முழுவதிலும் தங்களைக் பிசக்கிக் கொண்டதுடன் மன்னிப்புக் கேட்ட சம்பவங்கள் மறப்பதற்குரியவையல்ல.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திக்கத் தவறியமை எங்களிடம் இருக்கக் கூடிய பலவீனமான இராஜதந்திரத்தை காட்டுவதாகும்.

பிரதமர் மோடியைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சிலர் டில்லியிலிருந்து கொழும்பு திரும்பாமல் தமிழகம் சென்ற போது, தமிழக முதல்வரைச் சந்திப்பதற்காகவே இப்பயணம் என விளக்கம் கொடுக்கப்பட்டது.

உண்மையில் தத்தம் சொந்த விடயமாக கூட்டமைப்பினர் தமிழகம் சென்றனரே அன்றி அவர்கள் ஒரு போதும் ஜெயலலிதாவைச் சந்திப்பதற்காகச் செல்லவில்லை என்பது இப்போது உறுதியாயிற்று.

எதுவாயினும் எங்கள் தொடர்பில் பிரதமர் மோடி எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் ஒப்புதலுடன் நடக்கக் கூடியவை என்பதையும் எங்கள் தொடர்பில் பிரதமர் மோடிக்கு அடிக்கடி ஞாபகமூட்டலை செய்யக் கூடிய ஒரே சக்தி தமிழக முதல்வர் என்பதையும் மறவற்க !

ஆக, காலம் தாழ்த்தாது முதல்வர் ஜெயலலிதாவைக் கூட்டமைப்புச் சந்தித்தாகுவது காலத்தின் உடனடித் தேவையாகும்.

# ஜனாதிபதி மஹிந்தவின் ஒருநாள் செலவுக்கு 234 இலட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கான ஒருநாள் செலவு 234 இலட்சமாகும். இவ்வளவு பாரிய தொகை தேவைதானா? இன்று இலங்கைக்கான வெளிநாட்டுச் சேவையில் அரசியல் நியமனங்களாக கையாலாகாத அதிகாரிகளே நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அபிவிருத்தி என்ற பெயரில் பொதுப்பணம் விரயம் செய்யப்படுகிறது என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் அழைப்பாளர் சங்கைக்குறிய சோபித தேரர் தெரிவித்தார்.

சில இடங்களில் கடல் அகழ்ந்தும் இன்னொரு இடத்தில் கடல் நிரப்பப்பட்டும், தரையில் கட்டப்பட வேண்டிய கடைகள் தண்ணீரில் மிதக்க விடப்பட்டும் வருகிறது. இப்படி தேவையில்லாத செலவாக பாரிய தொகைப் பணம் விரயம் செய்யப்படுகிறது. ஜனாதிபதி முறையில் எதனையும் எவரிடமும் கேட்டுச் செய்யத் தேவையில்லை.

கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற அரசியல் அமைப்பு தொடர்பான ஒரு விழிப்புணர்வுக் கூட்டத்திலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

போதைப் பொருளில் தன்னிறைவு கண்டுள்ள எமது நாட்டில் விவசாயம் தொடர்பான துறைகளுக்கு 23 அமைச்சர்கள் இருந்தும் அரிசி விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. நாட்டின் குடிமக்களாகிய எமக்கு நீதி, நியாயம் சட்டம், நேர்மை போன்ற ஜனநாயக அடிப்படைகள் தேவைப்படுகின்றன. இவற்றை வழங்குகின்ற அடிப்படைக் கூறாகிய எமது அரசியல் அமைப்பில் அவை இருந்தும் கூட கடந்த 35 வருடமாக எமது அரசியல் அமைப்பு மூலம் நாம் சலித்து விட்டோம்.

மறைந்த ஜே.ஆர்.ஜெயவர்தன 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பை கொண்டு வரும் போதே சில உரிமை மீறல்களுடனும் ஏதேச்சாதிகாரத்துடனும் அதனை முன்வைத்தார். அதில் அன்று முதல் இன்று வரை ஜனநாயக ரீதியான குறைபாடுகள் உள்ளன.

அரசியல் அமைப்பு சமர்ப்பிக்கப்பட்ட நேரத்தில் ஆளும் தரப்பு அனைத்து பாராளுமன்ற அங்கத் தவர்களதும் இராஜினாமாக்க கடிதங்களை ஜே.ஆர்.பெற்றிருந்தார். அதன் ஆரம்பம் அது வென்றால் முடிவும் அப்படித்தான் இருக்கும். ஆனால் இன்று அனைத்து சமூகங்களும் ஒரு கருத்தின் கீழ் வந்துள்ளன. சம்பந்தர் தலைமையிலான கூட்டணி, அஸாத் சாலி மற்றும் மனோ கணே சன் உட்பட இதர தலைவர்களும் எமது திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வரு கின்றனர்.

ஜனாதிபதிக்கான ஒருநாள் செலவு 234 இலட்சமாகும். இவ்வளவு பாரிய தொகை தேவைதானா? இன்று இலங்கைக்கான வெளிநாட்டுச் சேவையில் அரசியல் நியமனங்களாக கையாலாகாத அதிகாரிகளே நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் இலங்கை பற்றிய பிரதிவம்பத்தை சர்வதேச ரீதியில் உருவாக்க அமெரிக்க கம்பனி ஒன்று குத்தகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. கோடிக்கணக்கில் பணம் தேட வேண்டிய ஒரு முறையாக விகிதாசாரத் தேர்தல் முறை மாறி விட்டது,

அதிகாரிகள் ஜனாதிபதிக்கு சார்பாக முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளனர்.

மிஹின் லங்கா, மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்றவை ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபாய் வரை நட்டத்தை ஏற்படுத்து கின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## 108 சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை நாவலர் வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அஷ்ரோத்திர சத (108) சங்காபிஷேகமும் தொடர்ந்து விசேட பூஜையும் இடம்பெறவுள்ளது. (இ)

## கம்பராமாயணம் தொடர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நுணாவில் மேற்கு மணங்குழாய் வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 10 நாட்கள் தினமும் இரவு 7 மணிக்கு சைவப்புலவர் பண்டிதர் பொன். சுகந்தன் வழங்கவுள்ள கம்பராமாயணம் எனும் தலைப்பிலான தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (இ)

## சமூக நல யாகம்

(யாழ்ப்பாணம்)

சுயம்பு அருள்மிகு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் அன்னையின் அருளாசியுடன் யாழ்.குடாநாட்டில் முதன்முறையாக நடத்தும் சமூக நல யாகம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கரவெட்டி கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியில் இடம்பெறவுள்ளது. (இ)

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி வடபிராந்திய அலுவலகத் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் வடபிராந்திய அலுவலகத்தின் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை இல.122/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம் (மாவட்டச் செயலகம்) எனும் இடத்தில் உள்ள கட்டடத்தில் உதவிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி ஞா.தேவஞானன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கணக்காய்வாளர் தலைமையதிபதி எச்.ஏ.எஸ்.சமரவீர பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார். (இ)

# அமைச்சர் தலைமையில் நாளை அவசரக் கூட்டம்


(மல்லாவி)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பண்டாரவன்னி கிராமத்தின் கிராம அபிவிருத்தி சங்கத்தில் இடம்பெற்ற 27 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் நிதி மோசடி தொடர்பான விசாரணைகள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகத்தினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு குழு மூலம் உறுதி படுத்தப்பட்டிருந்த நிலையில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மண்டபத்தில் அவசரக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

பண்டாரவன்னி கிராமத்தின் கடந்த ஆண்டு நிர்வாகத்தினரையும் மற்றும் நடப்பாண்டு நிர்வாகத்தினரையும் 151 மலசலகூட பயனாளிகளையும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் வடக்கு மாகாண சபையின் மீன்பிடி, போக்குவரத்து மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் சந்திக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


எனவே அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பண்டாரவன்னி கிராம அபிவிருத்தி சங்கத்தின் நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-2,15)

## சத்திய தரிசனம்



### ஆனந்தம் தேடி வரும்

- கரையான் மரத்தைச் அரிப்பது போல, தீய எண்ணத்தை மனதிற்குள் அனுமதித்தால், நம்மை அரித்து விடும்.
- வாழ்வில் குறுக்கிடும் துன்பத்தை பெரிது படுத்த வேண்டாம். அவற்றை ஒதுக்கி விட்டு, துடிப்புடன் வாழ முயற்சியுங்கள்.
- நல்ல விஷயங்களை கேட்டால் மட்டும் போதாது. அவற்றை உள்வாங்கியதோடு, அன்றே நடைமுறைப்படுத்தவும் முயலுங்கள்.
- உள்ளத்தில் அன்பு இல்லாதவனுக்கு பாதுகாப்பு கிடையாது. மனம் அன்புமயமாகட்டும். அன்பிருக்கும் இடத்தை ஆனந்தம் தேடி வந்துவிடும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### குளிக்கும்போது கவனிக்க வேண்டியவை


- வெந்நீரிற் குளிப்பதாக இருந்தால் காலிலிருந்து ஆரம்பித்துக் கிரமமாக உடல் முழுவதும் வெந்நீரை ஊற்றிக்கொள்ளவேண்டும். பிறகுதான் தலைக்கு வெந்நீர் ஊற்றிக்கொள்ளவேண்டும்.
- குளிர்ந்த நீரில் குளிப்பதாக இருந்தால் முதலில் தலையில் இருந்து தண்ணீலை ஊற்றிக்கொள்ளுதல் நலம்.
- இந்த இருமுறைகளும் மூளைக்கு களைப்பு, பலவீனம் உண்டாகாமால் குளிப்பதால் உடலுக்கு ஏற்படும் பூரண சுகத்தையும் தரும்.
- ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளைக்கு ஒரு தடவையாவது நீராடுவது அவசியம்.
- பொழுது விடியும்பொழுது குளிப்பது நடுத்தரமான பலன் கொடுக்கும்
- சூரிய உதயத்திற்குப் பின் குளிப்பதால் உடலில் அழுக்குகள்தான் நீங்குமே தவிர மருத்துவக் குணங்கள் ஏதும் கிடைக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னத்தம்பி மகாலிங்கம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி

## உருத்திரபுரம் வி.கழகம் சம்பியன்

**அமரர் சின்னத்தம்பி மகாலிங்கம் ஞாபகார்த்த மாக வடமாகாண அணிகளுக்கிடையிலான உதை பந்தாட்ட போட்டியில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளை யாட்டுக் கழகத்தை வீழ்த்தி உருத்திரபுரம் விளை யாட்டுக் கழகம் சம்பியனாகியது.**






அமரர் சின்னத்தம்பி மகாலிங் கத்தின் ஞாபகார்த்தமாக சன் றில் லர்ஸ் ஆதரவுடன் உழவர் ஒன்றி யமும் சனசமூக நிலையம் ஆகி யன இணைந்து வடமாகாண உதை பந்தாட்ட அணிகளுக்கு இடையி லான சுற்றுப்போட்டியினை நடத்தி யுள்ளன.

உழவர் ஒன்றிய மைதானத் தில் கடந்த 19 ஆம் நாள் தொடக்கம் இப்போட்டிகள் இடம்பெற்றன.

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகமும் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டு கழகமும் இறுதிப் போட்டியில் மோதியது.

இறுதிவரை விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் உருத்தி ரபுரம் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. உருத்திரபுரம் விளை யாட்டுக் கழகம் தொடர்ந்து தற் போது நான்காவது தடவையாக மாவட்டத்தில் சம்பியனாக விளங் குவது குறிப்பிடத்தக்கது.

இந்த இறுதிப்போட்டியில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப் பினர் சி.சிறீதரனும், சிறப்பு விருந் தினராக கரைச்சி பிரதேசபை தவி சாளர் குகராஜா, உறுப்பினர் சுவிஸ் கரன், பச்சிலைப்பள்ளி பிரதேசபை உறுப்பினர் சுரேன், அமரர் மகா லிங்கத்தின் பாரியார், மகன் மற்றும் கிராம சேவகர் சிம்சன் போல், சிவநகர் அ.த.க. பாடசாலை அதிபர் ராஜரட்ணம், கிருஸ்ண புரம் இராமகிருஸ்ணா வித்தியா லய அதிபர் திருமதி சூரியகுமாரி இராஜேந்திரம், விளையாட்டு உத்தி யோகத்தர் குமார், உருத்திரபுரம் மகா வித்தியாலய அதிபர் திருமதி இருதயசிவதாஸ், பரந்தன் அ.த.க. பாடசாலை அதிபர் சந்திரவதனி, சாமிப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் நித்தியானந்தன் உட்பட உழவர் ஒன்றியத்தின் பிரதிநிதி கள், விளையாட்டு வீரர்கள், ரசிகர் கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இமையாணன் இளைஞர் வி.கழக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

### அண்ணா சிலையடி ஏ வெற்றி

இமையாணன் இளைஞர் விளை யாட்டுக்கழகத்தினால் 18 வயதுப் பிரிவின் கீழ் ஆண்களுக்கான உதை பந்தாட்ட சுற்றுப்போட்டியின் அண்ணா சிலையடி ஏ அணி வெற்றிபெற் றுள்ளது.

தொடரின் அரையிறுதி ஆட்டம் அண்மையில் இமையாணன் இளை ஞர் விளையாட்டுக்கழக மைதானத் தில் நடைபெற்றது. இதில் இமை யாணன் இளைஞர் ஏ அணியை எதிர்த்து அண்ணா சிலையடி ஏ அணியினர் மோதினர். ஆட்டம் தொட ங்கியதிலிருந்து அண்ணா சிலை யடி ஏ அணியினரின் ஆட்டம் ஓங்கி யிருந்தது. இதனால் இவர்களின் ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியா மல் இமையாணன் ஏ அணியினர் திணறினர்.

ஆட்டம் தொடங்கி 3ஆவது 7 ஆவது நிமிடங்களில் அண்ணா சிலை யடி ஏ அணி வீரர்களான சிந்துஜன், மாதுளன் அடுத்தடுத்து இரு கோல் களைப் போட்டனர்.

இதனால் இடைவேளையின் போது 2:0 என்ற கோல் கணக்கில் அண்ணா சிலையடி ஏ அணியினர் முன் னிலை வகித்தனர்.

இடைவேளையின் பின்னர் களம் இறங்கிய இமையாணன் இளை ஞர் ஏ அணிக்கு ஏமாற்றமே கிடைத் தது. அண்ணா சிலையடி ஏ அணி யின் பந்துப் பரிமாற்றங்கள் சிறப் பாக அமைய இடைவேளையின் பின்னரும் ஆட்டம் அவர்கள் பக் கமே ஓங்கியிருந்தது. இடைவேளை யின் பின்னர் 5 ஆவது நிமிடத்தி லும் 9 ஆவது நிமிடத்திலும் கவி தரன் அடுத்தடுத்து இருகோல்களைப் போட இமையாணன் இளைஞர் அணி நிலை குலைந்தது. அதன் பின்னரும் அண்ணா சிலையடி ஏ அணி வீரர் சிந்துஜன் 13ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலைப் போட இறுதியில் 5:0 என்ற கோல் கணக்கில் அண்ணா சிலையடி ஏ அணி வெற்றி பெற்று இறுதியாட் டத்துக்கு தகுதி பெற்றது. (க)

## உலக பட்மிண்டன் சம்பியன்ஷிப்பின் 3 ஆவது சுற்றில் சாய்னா நேவால்



டென்மார்க் தலைநகர் கோபன் ஹேகனில் நடைபெற்று வரும் உலக பட்மிண்டன் சம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.


லண்டன் ஒலிம்பிக்கில் வெண் கலப் பதக்கம் வென்ற சாய்னா நேவால், உலக சம்பியன்ஷிப் மக ளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் பை வாய்ப்பு பெற்றார். இதனால் இன்று நடைபெற்ற 2ஆம் சுற்று ஆட்டத்தில் ரஷ்யாவின் நடாலியா பெர்மினோவாவை எதிர் கொண் டார். துவக்கம் முதலே ஆட்டத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த சாய்னா, 31 நிமிடங்களில் 21:11, 21:9 என்ற நேர்செட்களில் எளிதாக வெற்றி பெற்றார்.

மற்றொரு இந்திய வீராங்கனை பி.வி.சிந்துவும் (தரநிலை-11) முதல் சுற்றில் பை வாய்ப்பு பெற்றிருந்தார். இவர், நாளை நடைபெறும் இரண் டாம் சுற்று ஆட்டத்தில் ரஷ்யாவின் ஓல்காவை சந்திக்க உள்ளார்.

ஆடவர் பிரிவில் அஜய் ஜெய ராம் முதல் சுற்றில் தன்னை விட தரநிலையில் முன்னிலையில் இரு க்கும் கெனிச்சி டாகோவை (ஜப் பான்) வென்றார். 2 ஆம் சுற்றில் தாய்லாந்து வீரர் டானங்சாக்கை சந்திக்க உள்ளார். (க)

## அனுபவம் இல்லாமைக்கு ஐ.பி.எல். காரணமாகாது

### - கெவின் பீட்டர்சன்



இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் இந்தியா படுதோல்வியடைந்ததற்கு ஐ.பி.எல் போட்டியை குறைகூறு வது தவறு என்று கெவின் பீட் டர்சன் கூறியுள்ளார்.

இந்திய அணி இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிய டெஸ்ட் தொடரில் 3:1 என்ற கணக்கில் தொடரை மோச மாக பறிகொடுத்தது.

இந்த தோல்வியை தொடர்ந்து, ஐ.பி.எல் போட்டிகளால் தான் வீரர்கள் சரியாக டெஸ்ட் போட்டிக ளில் விளையாட முடியவில்லை என குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில் இந்த கருத்து பற்றி இங்கிலாந்து முன்னாள் அணித்தலைவர் கெவின் பீட்டர்சன் கூறுகையில், இந்திய அணியில் உள்ள இளம் வீரர்கள் ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடுவதால் தான் டெஸ்ட் போட்டிகளில் சரியாக விளையாடவில்லை என்று கூறு வதை ஏற்கமுடியாது.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முரளி விஜய் சதமடித்தார். இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் அதிக ஓட்டங்கள் குவித்தார். அவர் ஐ.பி.எல் போட்டி யில் விளையாடியவர் தான். இந் திய அணி வீரர்கள் வெளிநாடு களில் சென்று அதிக போட்டிகளில் விளையாடினால் சிறப்பான அனு பவம் கிடைத்துவிடும்.

இதற்கு முன்னோட்டமாக புஜாரா இங்கிலாந்தில் நடைபெறும் கவுனடி போட்டிகளில் விளையாட முடிவெடு த்துள்ளார். இந்திய பந்து வீச்சாளர் களும் இங்கிலாந்து, அவுஸ்திரே லியா, தென் ஆப்பிரிக்காவில் பந்து வீசு வதில் அனுபவம் பெற வேண் டும் என்று கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டி வில்லியர்ஸ், டூ பிளசிஸ், பின்ச் சதம் ஆஸியை வென்றது தென்னாபிரிக்கா

டி வில்லியர்ஸ், டூ பிளசிஸ் ஆகியோரின் அபார சதம் மூலம் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது

சிம்பாப்வே நாட்டில் சிம்பாப்வே, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான முத்தரப்பு தொடர் நடைபெற்று வருகிறது.

நேற்றைய 2-வது லீக் போட்டியில் தென்னாபிரிக்கா- அவுஸ்திரேலிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

இதன்படி துடுப்பாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு பிஞ்ச்- ஹியூக்ஸ் ஜோடி ஆரம்பத்தை வழங்கியது. இருவரும் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். அவுஸ் திரேலியாவின் ஓட்ட எண்ணிக்கை 18.2 ஓவரில் 92 ஓட்டங்களாக இருக்கும்போது ஹியூக்ஸ் 51 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து வந்த மார்ஷ் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாறினார். 3-வது விக்கெட்டுக்கு பிஞ்ச் உடன் அணித் தலைவர் பெய்லி ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியும் சிறப்பாக விளையாடியது. சிறப்பாக விளையாடி சதம் அடித்த பின்ஞ் 102 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். பெய்லி 66 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் வந்த ஸ்மித் 31, ஜோன்சன் 23 ஓட்டங்கள் அடிக்க அவுஸ்திரேலிய அணி 50 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 327 ஓட்டங்களை குவித்தது.

328 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் விளையாடிய தென்னாபிரிக்க அணிக்கு டி வில்லியர்ஸ், டூ பிளசிஸின் அபார சதங்களின் மூலம் 46.4 ஓவர்களில் 3 விக்கெடடுக்களினை மாத்திரமே இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் டி வில்லியர்ஸ் ஆட்ட மிழக்காது 136 ஓட்டங்களையும், டூ பிளசிஸ் 106 ஓட்டங்களினையும் பெற்றனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு வித்திட்ட அவ்வணி யின் தலைவர் டி வில்லியர்ஸ் தெரிவானார்.

இத்தொடரின் 3-வது லீக் போட்டி தென்னாபிரிக்க - சிம்பாப்வே அணிகளுக்கு இடையில்நாளை இதே மைதானத்தில் நடக்கிறது. (க)









# மத்திய அரசும்...

நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில,

இந்திய-இலங்கை அரசின் நிதியுதவியுடன் இவ் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை இன்றையதினம் (நேற்று) திறந்து வைக்கப்பட்டதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை-இந்திய ஆகிய இரு நாடுகளிற்கிடையே கலாசார, மொழி, பண்பாடு உட்பட பல விடயங்களில் ஒற்றுமை கணப்படுகின்றது.

இரு நாடுகளிற்கிடையான உறவு வலுவடைந்த நிலையில் இக் கைத்தொழில் பேட்டையினை திறந்து வைத்துள்ளதன் மூலம் அது மேலும் வலுவடைந்துள்ளது.

இலங்கை மக்களின் அபிலாசைகளினை கொண்டே இங்கு இந்திய அரசினால் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை அரசின் வேண்டுகோளின்படி சுற்றுச் சூழல் பாதுகாப்பு, கழிவகற்றல் போன்ற பல திட்டங்களை இக் கைத்தொழில் பேட்டையில் இந்திய அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இங்கு உள்ளூர் முதலீட்டாளர்கள மட்டுமல்ல, வெளிநாட்டு முதலீட்டாளர்களும் முதலிட வாய்ப்பு உண்டு. இக் கைத்தொழில் பேட்டையின் மூலம் 2 ஆயிரம் பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும் 10 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கவுள்ளது.

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு இந்தியா இதுவரை 1.6 பில்லியன் டொலர் அன்பளிப்புச் செயதுள்ளது. இதுவரை 15 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலையில் இன்னும் 17 ஆயிரம் வீடுகள் இவ்வருடத்துக்குள் நிர்மாணிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதோடு இங்கிருந்து இந்தியாவுக்கு புகையிரத்தில் செல்லும் காலம் வெகு தொலைவில் இல்லை.

இந்தியாவில் புதிதாக பொறுப்பேற்றுள்ள நரேந்தி மோடி அரசாங்கம்மேலும்உதவிகளினை வட பகுதிக்கு வழங்கு தயாராகவுள்ளது.

வட மாகாண சபையும் மத்திய அரசும் மக்களின் அபிவிருத்தியைக கொண்டு இணைந்து செயற்பட வேண்டும் என்றார் அவர். (எ-4)

# நாட்டைப்பிரித்து...

வலியுறுத்தியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த பின்னர் தமிழகம் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழுவினர் நேற்று சென்னை யில பாரதிய ஜனதாக் கட்சியின் நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசினர்.

இதன்பின்னர் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகப் பிரமுகர்கள் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பினர் கலந்து கொண்ட ஊடகவியலாளர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. அப்போதே இரா.சம்பந்தன் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

இலங்கை அரசுடன் இதுவரை நடத்திய பேச்சுக்களில் எந்த முன்னேற்றமும் இல்லை. இலங்கைத் தமிழர பிரச்சினையில் மாற்றம் ஏற்படும் என பிரதமர் நரேந்திர மோடி எங்களுக்கு உறுதியளித்துள்ளார்

எமக்கும் இலங்கை அரசுக்குமிடையில் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதன்போது நாம் வாய் மூலமாகவும் எழுத்து மூலமாகவும் எமது நிலைப்பாட்டை அரசுக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். ஆனால் இலங்கை அர சாங்கத் தரப்பினர் தமது பக்கப் பதிலைத் தருவதற்கு அவகாசம் கேட்டார்கள்.

ஐந்து மாதங்கள் கடந்தன. ஏழு சுற்றுப் பேச்சுக்கள் முடிவுற்றன. எனினும் அவர்கள் பதில் தரவில்லை. 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற சந்திப்பில் நாம் அரசு தரப்புப் பதில் வரவில்லை என்பதை எடுத்துக் கூறினோம். பதில் தராவிட்டால் தொடர்ந்து பேசுவதில் அர்த்தமில்லை என்பதையும் அரசுக்குத் தெரியப்படுத்தினோம். அத்துடன் பதில் தரும் வரை அடுத்த கூட்டத்தை காலவரையன்றி ஒத்திவைப்பது என்றும் அறிவித்தோம்.

அரசு உலகத்தை ஏமாற்றுகிறது. எனவே, இந்தப் பேச்சுக்களில் நாம் கலந்துகொள்வதால் அரசு உலகை ஏமாற்றுவதற்கு துணையாக நாம் இருந்துவிடக்கூடாது

இது ஒருபுறமிருக்க, ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அரச அமைச்சர்கள், ஆளும் கட்சியிலுள்ள வேறு அங்கத்துவக் கட்சித் தலைவர்கள் எனப்பலரும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் நீக்கப்படவேண்டும் என்றும் அதில் உள்ள அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும் என்று பகிரங்கமாகப் பேச ஆரம்பித்தனர். இந்த நிலையில் நாம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

அரசுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சு இடம் பெற்று நாம் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினால், அதனை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு உதவுமானால், அந்தக் குழுவில் அங்கம் வகிக்கத் தயாராக இருந்தோம். ஆனால் அடுத்த கட்டப் பேச்சுக்கு அரசு வராத நிலையில் எமது முயற்சி தோல்வியடைந்தது. ஓர் உறுதியான நிலைப்பாடின்றி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சென்று அவர்களால் ஏமாற்றப்படுவதை எங்களுடைய மக்களின் பெயரால் நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதில் எப்போதும் நாம் உறுதியாக இருக்கிறோம். இந்த விடயம் சம்பந்தமாக முன்னர் ஆட்சியிலிருந்த இந்திய மத்திய அரசுக்குப் பல தடவை நாம் தெளிவுபடுத்தியிருக்கிறோம். அதேபோலவே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினோம். இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பாக அரசு தரப்பு உயர்மட்டப் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

அது குறித்து நாம் கருத்துச் சொல்ல முடியாது. இரு தரப்பு மீனவர்களும் பாதிப்பு ஏற்படாத வகையில் புரிந்துணர்வு அடிப்படையில் தொழிலில் ஈடுபடவேண்டும் என்பதே எமது விருப்பம். தமிழகத் தலைவர்கள், பல்வேறு அமைப்புக்கள், தமிழ்மக்களுக்காக குரல் கொடுப்பதை நாம் வரவேற்கிறோம். ஆனாலும் எமது மக்கள் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

அந்தத் துன்பத்தைத் தொடர அனுமதிக்கமுடியாது. இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்படுவதையே நாம் விரும்புகின்றோம். அதற்காக அவர்கள் இணைந்து குரல் கொடுக்கவேண்டும். சர்வதேசம் இன்று தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வருகின்றது. அதுபோலவே இந்தியாவும் குரல் கொடுக்கவேண்டும்.

எமது மக்கள் தமது பாரம்பரிய இடங்களில் நிரந்தர சமாதானத்துடன் நிரந்தரமான அமைதியைப் பெற்று போதிய அதிகாரத்துடன் வாழும் ஆட்சி முறை ஒன்றையையே விரும்புகின்றர். நாட்டை பிரித்து தீர்வு பெற்றுவிடமுடியாது. ஒருமித்த இலங்கைக்குள் நியாயமான, நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதையே மக்கள் விரும்புகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய அதிகாரிகளைச் சந்திக்க அனுமதி வழங்கப்படாது என்ற போர்வையில் சுப்பிரமணிய சுவாமி கருத்துத் தெரிவித்திருந்தாரே? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, அவர் ஓர் இந்திய அரசியல்வாதி இப்போது ஆட்சியில் இருக்கும் பா.ஜ.கவில் முக்கிய பிரதிநிதியாக உள்ளார். அவரை நாம் விமரசிக்க முடியாது. அதை நாம் விரும்பவும் இல்லை என்றும் தெரிவித்தார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக...

தமிழக விஜயத்தின் போது அ.தி.மு.க உள்ளிட்ட இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் தமிழகக் கட்சிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துக் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கலந்துரையாடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை இவர்கள் சந்திப்பார்கள் என எதிர பார்க்கப்படுகின்ற போதிலும், அது தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல் எதுவும் வெளியாகியிருக்கவில்லை.

இச்செய்தியை மேலும் வலுப்படுத்தும் வகையில் கடந்த 24ஆம் திகதி இரவு நாடு திரும்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மறுநாளே தமிழகம் சென்றிருந்தார்.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக முதலமைச்சரைச் சந்திக்குமா எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்களிடம் கொழும்பு ஊடகம் ஒன்று தொடர்பு கொண்டு கேட்ட பொழுது, இச்சந்திப்பிற்கான வாய்ப்பு இம்முறை குறைவாக உள்ளதாக அவர்கள் குறிப பிட்டுள்ளனர். இவர்கள் குறித்த விபரங் களை இந்த ஊடகம் வெளியிடாத போதிலும், இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புதுடில்லிப் பயணமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வமான பயணமாகும். இந்திய மத்திய அரசின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கான நிகழ்ச்சி நிரலே எம்மிடமிருந்தது. இந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சகலதரப்பினரையும் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர்.

இதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரனும் தமது குடும்பத்தினரைச் சந்திப்பதற்காக தமிழகம் சென்றுள்ளனர்.

அதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ரவிசங்கர் சுவாமிகளைச் சந்திப்பதற்காக பெங்களூர் சென்றுள்ளார். இதனைவிட இம்முறை தமிழகத் தலைவர்களைச் சந்திப்பதற்கான நிகழ்ச்சி நிரல் எதுவும் இருக்கவில்லை என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (எ-11)

# தனித்...

கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஐ.நா உரையாற்ற அழைத தமைக்கு எனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக் குழுவுக்கு இலங்கை அரசாங்கம் நுழைவு அனுமதி வழங்க மறுத்துள்ளது. போர்க்குற்றவாளியாக ஏராளமான மக்களைக் கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்ததை ஐ.நா மீளப் பெறவேண்டும். அப்போதுதான், ஐ.நாவின் சுயமரியாதை பாதுகாக்கப்படும்.

இதை ஐ.நாவுக்கு நான் வேண்டு கோளாக விடுக்கிறேன். மத்திய ஆட்சியாளர்கள் தனி ஈழத்தை ஒருபோதும் ஆதரிக்கவில்லை. ஆனால், இலங்கைத் தமிழர்களுக்கு சமவுரிமை, நீதி கிடைக்க வேண்டும் என்றால் சுதந்திர தனித்தமிழ் ஈழம் அமைந்தால்தான் முடியும்.

எனவே, உலக அளவில் பொது வாக்கெடுப்பு நடத்தி, தனிஈழம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தனி ஈழம் அமைந்தால்தான் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு ஏற்படும் என வைகோ மேலும தெரிவித்துள்ளார். (எ-11)

# அச்சுவேலி...

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி கைத்தொழில்பேட்டை நேற்று காலை 11 மணியளவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 1990-ம் ஆண்டு முதல் யுத்தம் காரணமாக இக்கைத்தொழில் பேட்டை சேதமடைந்து இருந்தது. யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்திய மற்றும் இலங்கை அரசின் நிதி பங்களிப்புடன் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு நேற்று காலை திறந்து வைக்கப்பட்டது.

64 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இந்தக் கைத்தொழில் பேட்டையின் மீள் நிர்மாணப் பணிகளுக்காக இந்திய அரசு சிறிய நன் கொடை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை கீழ் 225 மில்லியன் ரூபாய் நிதி உதவியையும் இலங்கை அரசு 50 மில்லியன் ரூபாய் நிதி உதவியையும் அளித்திருந்தன.

இந் நிகழ்வில் இந்திய தூதுவர் வை.கே. சிங்கா, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி பிரதி அமைச்சர் வீரகுமார திஸாநாயக்க, வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-4)

# சர்வதேச...

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்தவர் ஜனாதிபதிதான். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தியவரும் அவரே. போரை முடிவுக்குக் கொண்டு வந்தவரும் அவர்தான். ஆகவே தீர்வையும் அவர்தான் தரவேண்டும்.

அதற்காக சர்வதேசத்திடம் ஓடுவதால் எந்தப் பயனும் இல்லை. அரசுக்குக் குழி பறிக்கும் வேலையைச் செய்யாதீர்கள் என நான் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அரசை வீழ்த்த முயற்சிக்காதீர்கள். அரசுக்கு எதிராகச் செயற்படாதீர்கள். அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளைச் சாட வேண்டாம். எல்லா விதத்திலும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வாருங்கள். ஜனாதிபதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத் துழைத்துச் செயற்பட வாருங்கள் என அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். வெளிநாடுகளுக்குச் சென்று முறையிடு வார்கள் என்று பயந்து நாம் இங்கு அபிவிருத்தி செய்யவில்லை. இந்தப் பிரதேச மக்கள் சுபீட்சமாகவும் சந்தோசமாக வும் வாழவேண்டும் என்ற நோக்கத்து டனேயே அபிவிருத்திப் பணிக ளை முன்னெடுக்கிறோம்.

நாம் மேற் கொள்ளும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு எவரும் தடை போடக் கூடாது. மக்களின் நன்மைகருதி எமது அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடரும்.

சர்வதேசத்தில் இன்று நடைப்பவை எமக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றன.

-குறிப்பாக சிரியா, ஈரான், பாகிஸ்தான், உக்ரைன், ஆப்கான், எகிப்து போன்ற நாடுகளில் பயங்கர வாதம என்ற பெயரில் ஜனநாயகம் அழிக்கப்பட்டு, மனித உரிமைகள் மீறப்படுகின்றமையை பார்க்கும்போது எமக்கு அச்சம் ஏற்படுகின்றது.

ஆனாலும் இலங்கை நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையில் தலையிட மேற்கு லகத்துக்கு ஒருபோதும் இடம்கொடுக்க மாட்டோம் என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (எ-11)

# கூட்டமை...

ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

இதேவேளை அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீளுருவாக்குவது தமது கனவு திட்டம் என்று டக்ளஸ் தேவானந்தா இதன் போது கூறினார்.

இந்த நிகழ்வில் கலந்துக் கொண்டிருந்த இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹா, வடமாகாண சபை, மத்திய அரசாங்கம் என அனைத்து தரப்பும் ஒத்துழைத்து செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும் வடமாகாண சபை மற்றும் அரசாங்கம் என்பன இந்திய அரசாங்கத்துடன் ஒத்துழைத்து செயற்படுவதன் ஊடாக, நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளும் இலக்கினை அடைய முடியும் என்றும் அவர் கூறினார்.

இந்த நிலையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச,. வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


Join a professional Training program and prepare yourself perfectly and properly for high paid Jobs

Diploma in Air Ticketing and Tourism



- இலங்கை, இந்திய நாட்டு முன்னணி நிறுவனங்கள் இணைந்து 5 வருட வேலைக்கான உத்தரவாதம்
- தமிழ் ஆங்கிலம் சிங்கள மற்றும் French, Dutch மொழிகளில் பயிற்சி
- கற்கை நெறிகளை பின்பற்றும் போதே ஊதியம்
- தங்குமிடம் போக்குவரத்து என்பன முற்றிலும் இலவசம்
- பயிற்சி நெறிகளை மேற்கொள்ள A/L சித்தியடைந்திருத்தல் போதுமானது.

1 Year
LKR 65000 + Tax
Instalments Method Available
VISA MasterCard AMERICAN EXPRESS

A-791

0710920920



(சி-8342)

Nation Job Bank
www.nationjobbank.com

## வாடகைக்கு

ராசுவின் தோட்ட வீதிக்கும் கோயில் வீதிக்கும் இடையில் இரண்டு அறைகள் கொண்ட அளவான வீடு ஒன்று வாடகைக்கு விடப்படவுள்ளது.

தொடர்புகளுக்கு : 0779787957, 0718122777, 0778759587

(C-8340)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்.கந்தர்மடத்தில் வதியும் அரச பணிபுரியும் குடும்பம் ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை (துனிப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) தொடர்பு : 077 6631 655

(இ)

## MOBILE PHONE REPAIRING COURSE

(கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி)

நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா?
சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா?
வேலைசெய்து கொண்டு பகுதிநேரமாக வருமானம் ஈட்ட வேண்டுமா?

4 days course

புதுப் பொலிவுடன் யாழ்.நகரில் உங்கள் எதிர்காலத்துக்கு மாதம் 150,000/-க்கு மேல் வருமானம் ஈட்ட ஒரு வாய்ப்பு

திருத்தும் துறையில் 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000ற்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதற்தர ஆசிரியருமான Ganesh.K

பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்க முடியும். நவீன Mobile Phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும்.

BTEC
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE

#21, Sirampiyadi Lane, Jaffna.
T:P:-0217904468
MO:- 0777444225

(C-8339)

## வேலைவாய்ப்பு

யாழ்.மண்ணில் இளம் யுவதிகளுக்கு சர்வதேச ரீதியில் செயற்பட்டு வரும் (Optimo International) எமது நிறுவனத்தில் இணைவதற்கான அரியவாய்ப்பு பல உண்டு. தொடர்பு கொண்டு உங்களுக்கான நேர்முகத் தேர்வு நேரத்தை உறுதிப்படுத்தி கொள்ளுங்கள்.

தகைமை:-O/L and A/L போதுமானது.
முன் அனுபவம் அவசியமில்லை.



இறுதித் திகதி 30.08.2014

தொடர்புகளுக்கு:-0770771377, 0771908997

(7512)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ... என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org